

# கரை எழில் -07

பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கரைச்சி
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் – கரைச்சி – கிளிநொச்சி

DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம் கரைச்சி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை எழில்

## -07-

## 2018

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி
DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI
ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

### பிரதேச கலாசாரப் பேரவை

**பிரதேச செயலகம்,**

**கரைச்சி,**

**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

**நூலின் பெயர்**
கரைஎழில் - 07

**நூல் வகை**
ஆண்டிதழ்

**முதற்பதிப்பு**
மார்கழி - 2018

**தொகுப்பு**
மலர்க்குழு,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

**பதிப்புரிமை**
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

**வெளியீட்டெண்**
07

**தாள் வகை**
70 gsm Bank Paper

**பிரதிகள்**
500

**அட்டை வடிவமைப்பு**
திரு. ம. விஜிதரன்
பிரதேச செயலகம்,
கரைச்சி.

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல. 681 (கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**
108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...


- தமிழ்த்தாய் வாழ்த்து
- பிரதேச செயலகக் கீதம்
- மலர்க்குழு விபரம்

| | |
|---|---|
| ஆசிச்செய்திகள் | xiii - xiv |
| வாழ்த்துச்செய்திகள் | xv - xix |
| வெளியீட்டுரை | xx |

| | |
|---|---|
| 01. வடமாகாணத்தைத் தானியக் களஞ்சியமாக வளர்த்தெடுத்த மாகாண அரசாங்க அதிபர் ம.ஸ்ரீகாந்தா (1954 - 1961) | 1 - 6 |
| 02. வேலி ஓர வேப்பமரம் | 7 - 9 |
| 03. தொல்இலக்கிய இலக்கணங்கள் வெளிப்படுத்தும் தமிழர் இயங்கியல் | 10 - 19 |
| 04. கனவுகளைக் காணவில்லை | 20 |
| 05. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் | 21 - 23 |
| 06. பார்வை ஒன்றே போதும் | 24 - 26 |
| 07. வாழ்க்கை என்றும் நிரந்தரம் இல்லை | 27 |
| 08. தற்கொலை ஓர் உள சமூக நோக்கு | 28 - 32 |
| 09. எப்படி வந்தோம்? | 33 - 36 |
| 10. மறுமலர்ச்சி புது எழுச்சி | 37 - 44 |
| 11. வெளிநாட்டுக் காற்றே தூதுபோ ஒரு முறை | 45 |
| 12. பழகு தமிழில் பண்பான வாழ்க்கை முறை | 46 - 49 |
| 13. மனிதத்தைக் காதல் செய் | 50 |
| 14. நாடகம் அன்றும் இன்றும் | 51 - 54 |
| 15. தடம் மாறிச்செல்லும் நுண்கடன் திட்டமும் பரிதவிக்கும் மக்களும்- நுண்கடன் பற்றிய ஒரு சுருக்கப் பார்வை | 55 - 57 |
| 16. மனம் எங்கே செல்கிறது? | 58 |
| 17. தாய் மொழி | 59 |
| 18. பார்! பார்! பாரைப் பார்! | 60 |
| 19. பிறவிப்பயன் | 61 - 65 |
| 20. புதுயுகம் மலர்ந்திட வழிசமைப்போம் | 66 |
| 21. இந்திரவிழா | 67 - 69 |
| 22. கருணை மனு | 70 - 71 |
| 23. புனித மேடுகள் | 72 |
| 24. கிளிநொச்சியில் யுத்தத்தின் பின் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 73 - 75 |
| 25. கலை ஓர் அறிமுகம் | 76 - 79 |
| 26. நடனம் ஓர் நோக்கு | 80 - 84 |
| 27. வித்து நாள் முதல் பெருமிதி வரை | 85 - 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகக் கீதம்

நெல் விளையும் கழனி நிறை
கரைச்சி வளம் பெருகி
பல்லாண்டு நீடு வாழ்கவே
பலவளமும் படைத்து வாழ்கவே
நெல் விளையும்

பண்பாடும் கலை நலமும்
கல்விச் செல்வ வினைத்திறனும்
எல்லாரும் பெற்று வாழ்கவே
இன்ப சுகம் என்றும் மேவவே
நெல் விளையும்

இரணை மடுக்குளத்தால்
திரளும் திரவியங்கள்
ஏற்றத்தின் ஊற்றதாகவே
இணைத்தெழுதும் மேன்மை ஓங்கவே
நெல் விளையும்

அக்கராயன் முறிப்பு கரைச்சி
அபிவிருத்தி பிரதேச செயலகத்தினர்
தக்கபணி அணிபெறவே
தலைநிமிர்ந்து சிறந்து வாழ்கவே!
நெல் விளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. திரு. த. முகுந்தன்
   கலாசாரப் பேரவையின் தலைவரும்,
   பிரதேச செயலாளரும்.
   கரைச்சி

2. திருமதி ச. தமிழினி
   உதவிப் பிரதேச செயலாளர்,
   பிரதேச செயலகம்,
   கரைச்சி


3. திரு. ப. ஸுரேந்திரன்
   கணக்காளர்,
   பிரதேச செயலகம்,
   கரைச்சி.

4. திரு. ச. பி. அமலராசா
   உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
   பிரதேச செயலகம்
   கரைச்சி.

5. திரு. தி. கார்த்திகேயன்
   கலாசாரப் பேரவையின் செயலாளரும்,
   கலாசார உத்தியோகத்தரும்,
   கரைச்சி.

6. திரு. ப. பரமோதயன்
   அபிவிருத்தி உத்தியோகத்தர்,
   பிரதேச செயலகம்
   கரைச்சி.

7. திரு. க. மகிந்தன்
   அபிவிருத்தி உத்தியோகத்தர்
   பிரதேச செயலகம்,
   கரைச்சி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



நாகரிகம் அடைந்த ஒரு இனத்தின் பண்பாட்டுக் கூறுகள் ஆழமுடையதாக இருக்கும். இப் பண்பாட்டுக் கூறுகளில் இருந்து தான் ஒரு இனத்தின் சகல செயல்முறை அசைவுகளும் இயங்குகின்றன. எமது தமிழ் இனம், எமது இனத்திற்கென்று தனித்தமொழி, பண்பாடு, கலை, இலக்கியங்கள் என்றும் போற்றப்படுகின்றது. இவ்வகையில்,

கிளிநொச்சியின் வரலாற்றையும் இங்கு வாழும் மக்களின் பண்பாட்டையும் எடுத்தியம்பும் வகையில் கரைச்சி பிரதேச செயலகம் ஆண்டுதோறும் கலாசார விழாவையும், கரை எழில் மலரையும் வெளியிட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. கிளிநொச்சி நகரம் அதனுடைய வரலாற்றில் மிக அதிகமான இழப்புக்களையும், சோதனைகளையும் சந்தித்திருக்கின்றது. என்றாலும் தற்போது அதே அளவு மிகப் பிரபல்யத்தையும், புகழையும் பெற்று வருகின்றது.

எத்தனை இடர்கள் வந்தாலும் துவண்டு விடாமல் புத்திளமையுடன் "பீனிக்ஸ்" பறவை போல் மீண்டெழும் கிளிநொச்சியின் வரலாற்றைக் கூறும் "கரை எழில்" என்னும் மலர் ஓர் உயரிய படைப்பாகும். இம் மலருக்கு ஆக்கங்களை எழுதிய அனைத்து படைப்பாளிகளுக்கும், இத்தகைய முயற்சிகளுக்கும் ஊக்கம் அளித்து வரும் கரைச்சி பிரதேச செயலகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"உழவும் தொழிலும் ஆடலும் பாடலும் கவின்கலைகளும் நிறைந்த
கரை (ச்சி) எழில் நிலம் செழித்து பொழிய வாழ்த்துக்கள்."

நன்றி

**ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
பிரதமகுரு
ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்
குமரபுரம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஊடாக வெளியிடப்படும் கரை எழில் இதழின் 7வது வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதிலே மகிழ்வடைகின்றேன்.

கரைச்சிப் பிரதேசம் இலங்கையின் பல் சமயத் தலங்கள்அமைந்துள்ள இடமாகும். அத்துடன் வயல் வெளிகளும், நீரேரிகளும், தொழிற்பேட்டை மையங்களும், விவசாயக்குடிகளும் சூழ்ந்த இம்மண்ணில் கலைகளுக்கும் கலாசாரத்துக்கும் தொன்மையும் புதுமையும் நிறைந்த சமூகக் கலை வடிவங்கள் பாதுகாக்கப்படுவதற்காக உழைத்து வரும் கலைஞர் சமூகத்தை மதிப்பளித்து மாண்புடன் அவர்களை மண்ணுக்கே உரிய கலைஞர்களாக வளர்ப்பதில் கரைஎழில் 7வது இதழில் நிலைநாட்டியுள்ளது.

அழகும் ஆரோக்கியமும் ஆக்கத்திறனும் விளைநிலமும் நிறைந்த இப்பூமி சமாதானமும் சகவாழ்வும் நிறைந்த இத் தேசத்தின் குறியீடாகத் திகழ்ந்திட வாழ்த்துகிறோம்.

**அருட்பணி S.K. டானியேல்**
**புனித பவுலின் ஆலயம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வருடந்தோறும் வெளியிடுகின்ற "கரை எழில்" மலர் - 07 இற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மனமகிழ்வுறுகின்றேன்.

கலைப் பாரம்பரியங்கள் செழித்து விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் எழில் கொஞ்சும் இயற்கை வளங்களுடன் விளங்கும் கரைச்சிப் பிரதேசத்தின் வரலாற்றினையும் கலாசார, பண்பாட்டு பாரம்பரியங்களையும் படம் போட்டுக் காட்டும் நோக்குடன் கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவை வருடாந்தம் "கரை எழில்" எனும் ஆவணப்பதிவை வெளியீடு செய்வது மிகுந்த பாராட்டுதலுக்குரிய முயற்சியாகும்.

வரலாற்றினையும் இனம்சார் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்க வேண்டுமென்ற சிந்தனைக்கு ஏற்ப ஒவ்வொரு நாடும், பிரதேசமும், சமூகமும் தனக்குரியதான வரலாற்றினையும், தனித்துவமான பண்பாடுகள், மரபுகளையும் பேணிப் பாதுகாப் பதுடன் அவற்றை நமது சந்ததியினருக்குக் கற்றுக்கொடுக்க பல்வேறு வடிவங்களில் முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் கரைச்சிப் பிரதேசத்தில் வாழும் கலைஞர்களையும், படைப்பாளிகளையும், பண்பாட்டியலாளர்களையும் ஊக்கப்படுத்தும் நன்நோக்குடன் அவர்களது ஆக்கங்களை வரலாற் றில் பதிவு செய்கின்ற ஆவணமாக "கரை எழில்" வெளியிடப்படுகின்றமை காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் ஒரு முயற்சியாக அமைந்திருப்பதுடன், துறைசார் தேடல்களுக்கும் காத்திரமான பங்களிப்பை இந்நூல் வழங்கும் என்பதில் ஐயமில்லை. "கரைஎழில்" - 07 சிறப்பாக வெளிவர உழைத்த பிரதேச செயலாளர், கலாசாரப் பேரவையினர், மலர்க்குழுவினர் மற்றும் ஆக்கங்களை உவந்தளித்த எழுத்தாளர்கள் ஆகியோரினது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் மலர் சிறப்புற வெளிவரவும், கலாசார விழா சிறப்பாக நடைபெறுவதற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கரைச்சிப் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலரான "கரைஎழில்" எனும் இதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இம் மலரானது கரைச்சி பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளைத் தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மக்களின் கலாசார விடயங்கள் மற்றும் பிரதேசத்தின் வளங்கள், பண்பாட்டு அம்சங்கள் போன்ற பல விடயங்களை இந்நூல் தாங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகின்றது. மக்களின் வாழ்வியல் அம்சங்கள் அவர்களின் பாரம்பரியங்களைத் தழுவியவை. புதிய தலைமுறையினருக்கு இவற்றைத் தெரியப்படுத்துவதுடன் அவற்றின் சிறப்புக்களையும் மகத்துவங்களையும் எடுத்துக்காட்டவேண்டிய சமூகப்பொறுப்பு இச் சந்ததியினருடையது. அடுத்த தலைமுறையினருக்கு எமது பண்பாட்டின் வேர்களையும் அதன் சிறப்புக்களையும் கையளிப்பதன் ஊடாக நல்ல சமுதாயம் உருவாகுவதற்கு ஏற்ற சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும். இச் சமூக உருவாக்கத்தின் அடித்தளமாக பிரதேச மலர்கள் அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***சி. சத்தியசீலன்***
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியிடுகின்ற "கரை எழில்" 7ஆவது நூலிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எமது இனத்தினதும் மொழியினதும் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் என்பன அழிவடையாது பேணிப்பாதுகாப்பதுடன் அவற்றினை எதிர்கால சந்ததியினருக்கு மரபுபிறழாது கையளிக்க வேண்டியது கட்டாய தேவையாகும். அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையினரும் இணைந்து நூல்கள், இறுவட்டுக்கள், சஞ்சிகைகள், புகைப்படத் தொகுப்புக்கள் போன்ற வெளியீடுகளினூடாக இவ்வரிய பணியினை சிறப்பாக ஆற்றிவருகின்றனர்.

இப்பணிகளில் ஒன்றாக வருடந்தோறும் பல்துறைசார்ந்த ஆக்கங்கள் அடங்கிய "கரை எழில்" நூலினை வெளியிட்டு வருகின்றனர். பிரதேசத்திற்கே உரித்தான பாரம்பரிய கலைகளையும், கலை நுட்பங்களையும், அடையாளங்களையும், சிறப்பியல்புகளையும், கலைஞர்களின் விபரங்களையும் பதிவு செய்கின்ற வரலாற்று ஆவணமாகவும் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாகவும் இந்நூல் வெளியிடப்பட்டு வருகிறது.

இவ்வருடமும் இலைமறை காயாக இருக்கின்ற கலைஞர்களின் எழுத்தாற்றல் திறமைகளையும், கலை ஆர்வலர்களது சிந்தனைகளையும், முதுகலைஞர்களின் பதிவுகளையும், ஆவணமாக்கும் நோக்கில் பல்துறை சார்ந்த கட்டுரைகளையும் பிரதேசத்தின் தரவுகளையும் உள்ளடக்கி வருகின்ற இம்மலருக்கு ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும், மலர் முழுமைபெற உழைத்த பிரதேச செயலர், மலர்க்குழுவினர், கலாசார பேரவையினர் ஆகியோரது அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் "கரை எழில்" பயணம் தொடர எல்லாம் வல்ல இறையருள் கிட்டவேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

***சி. சத்தியசீலன்***
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கரைச்சிப்பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து வெளியிடும் "கரை எழில் - 7" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். வடக்கு மாகாணத்தின் மையப்பகுதியாக விளங்கும் கிளிநொச்சியின் கரைச்சிப் பிரதேசம் பல்வேறுபட்ட வரலாற்றுச் சிறப்புகளையும், இயற்கை அழகையும், பண்பாட்டு வாழ்வியல் முறையையும் தன்னகத்தே கொண்டதாகும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் எமது திணைக்களத் தினால் கலாசார அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கென கடந்த சில ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றது. எமது செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகிய பிரதேச மலர் வெளியீடும், கலாசார விழாவும் சிறப்பாக நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

"கரை எழில்" இவ் வருடம் கரைச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களையும், கரைச்சிப் பிரதேசத்தில் சேவையாற்றி வருகின்றவர்களின் ஆக்க இலக்கியங்களையும் தாங்கி வருவது சிறப்பான விடயமாகும். பிரதேச ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு இந்நூல் களமாக அமைவதையிட்டு மகிழ் வடைகின்றேன். மேலும் இம்மலர் சிறப்பாக வருவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதுடன், பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் கலாசார பேரவையினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் இம்மலர் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறை பரம்பொருளை வேண்டுகின்றேன்.

அபிராமி பாலமுரளி,
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மிளிர் கரை எழில்



கிளிநொச்சி மண்ணின் வனப்பும் வாழ்வும் பல்கிப்பெருகி மிளிர்வது எங்கள் மண்ணிலேயாம். கிளிநொச்சி மாவட்டத்தின் பெருவாரியான மக்களும் மண்ணும் எம் பிரதேசத்திலேயே அமைந்து போனதால் கிளிநொச்சியின் அடையாளம் கரைச்சி என்பதாயிற்று.

இந்த மண்ணிலே வாழ்வு தேடி வந்தோரெல்லாம் வளமோடே வாழ்கின்றனர். நிலவளமும் நீர்வளமும் இயற்கை வனப்பும் பார்க்கும் இடமெலாம் கொட்டிக்கிடக்கின்றது. கிளிநொச்சியைக் கண்ணுறுவோர் உளமெலாம் பொங்கி பிரவாகிக்கும் வண்ணம் எம்தேசம் விரிந்துகிடக்கிறது.

வளமெலாம் நிறைந்திருப்பதாலோ என்னவோ மக்கள் மனங்களும் விரிந்திருக்கிறது. அதனால் கவினுறு கலைகளும் பண்பாட்டு செழுமையும் ஆக்க இலக்கிய வீச்சும் இம்மக்களின் வாழ்வினூடு பின்னிப்பிணைந்து பல்கிப் பெருகி எழில் செய்கிறது. எம்மக்களின் கலைத்துவத்தின் வெளிப்பாடாய் எம் "கலாசார விழா" வும் அவ்விழாவினூடான கலைப்படைப்புக்களின் பெட்டகமாய் "கரை எழில்" உம் வெளிவந்து சிறக்கிறது.

அவ்வகையில் இவ்வாண்டும் எமது கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் கரை எழில் - 07 தங்கள் கைகளில் தவிழ்ந்து நிற்கிறது. எம் தேசத்து படைப்பாளிகள் தங்கள் ஆக்க இலக்கியத் திறனால் இந்நூலை செதுக்கி இருக்கிறார்கள். அவர் தம் படைப்புக்கள் எம் இலக்கியப் பரப்பில் நீளநின்று நிலைபெறும் என்பது என் நம்பிக்கை. ஆக்கத்துக்கு உழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"
-பாரதி-

த. முகுந்தன்
பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எமது பிரதேச துறைசார் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கத்திறனுக்கு களமாக எமது பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற 'கரை எழில்' தனது ஏழாவது வெளியீடாக வெளிவருதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

எமது வெளியீட்டில் இம்முறை எமது பிரதேசத்தைச் சேர்ந்த புலமையாளர்கள் மற்றும் எமது பிரதேசத்தில் சேவையாற்றி வருபவர்கள் ஆகியோரின் படைப்புகளைத் தாங்கி வெளிவர வேண்டும் என்கின்ற உயரிய நோக்குடன் "கரை எழில்" - 7 " வெளிவருவது விசேட அம்சமாகும். எமது பிரதேசம் சார் பண்பாட்டு வாழ்வியல் முறைகள் கலை, இலக்கியம், ஆன்மீகம், மரபுரிமை, வரலாறு ஆகிய விடயங்களையும் இந்நூல் வெளிப்படுத்தி நிற்கும் என்பதில் ஐயம் இல்லை. வரலாறுகளையும் வாழ்வியல் முறைகளையும் ஆவணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். அந்த வகையில் இந்நூல் செயற்கரிய பணியினை மேற்கொள்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எமது இவ் ஆண்டுக்கான கலாசார விழா மற்றும் 'கரை எழில்' வெளியீட்டுக்கும் நிதி வழங்கலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. மேலும் எமது இம் முயற்சிக்குப் பெரும் ஆதரவை வழங்கி எம்மை ஊக்கப்படுத்தும் எமது பிரதேசம் சார்ந்த பொதுமக்கள், ஆர்வலர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மலர் வெளியீட்டுக்காக ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் நூலினை செவ்வனே பதிப்பித்த 'கரிகணன்' தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

**-மலர்க்குழு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**

செல்வி.வ.சந்திராதேவி(CMA) திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லுரேந்திரன்(Accountant), திரு.சி.இராமமூர்த்தி(AO)

**நிற்பவர்கள் 1ம் வரிசை**

திருமதி.சு.புவனலோஜினி(CMA), செல்வி.க.கனிசா(MA), திருமதி.ர.மனோரஞ்சினிதேவி(CMA), திருமதி.வி.சரஸ்வதிதேவி(MA), திருமதி.ச.ஜனனி(MA), திருமதி.சு.துர்க்கா(MA), திருமதி.அ.வசந்தி(MA), திருமதி.ரா.சூரியதர்சினி(DO), திருமதி.த.குமுதினி(DO), திருமதி.க.ஜசிந்தா(MA), திருமதி.கே.நிசாந்தினி(DO), திருமதி.இ.உதயசாந்தினி(DO), செல்வி.பா.லாவண்யா(MA), திருமதி.லோ.விஜித்கோபிகா(MA), செல்வி.பா.தர்சனா(MA), திருமதி.இ.அகிலா(MA), திருமதி.மு.தா.நுஸ்ரத்பேகம(MA), செல்வி.ம.மேகலா(MA),

**நிற்பவர்கள் 2ம் வரிசை**

திருமதி.லோ.ஜெனற்டிலானி(MA), திருமதி.சு.யூஜின்நிலானி(MA), செல்வி.செ.மதுரா(MA), செல்வி.அ.லூட்ஸ் சஜித்தா(DO), திருமதி.சு.காயத்திரி(DO), திருமதி.பி.விஜயகலா(MA), திருமதி.ப.சோபனா(MA), செல்வி.பு.சுபாசினி(DO), திருமதி.வி.ஜெனித்தா(DO),

**நிற்பவர்கள் 3ம் வரிசை**

திரு.ம.ரமேஸ் (Driver), திரு.கு.சிறீக்குமார் (OES), திரு.பா.மகேந்திரம் (Driver), திரு.ச.சதீஸ்கரன் (OES), திரு.செ.நிரோசன் (OES), திரு.இ.பிரதீப் (MA), திரு.க.சிறீதரன் (OES), திரு.செ.மதிவதனன் (DO), திரு.பா.பிரதீபன் (MA), திரு.க.பரமேஸ்வரன் (FA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தைத் தானியக் களஞ்சியமாக வளர்த்தெடுத்த மாகாண அரசாங்க அதிபர் ம. ஸ்ரீகாந்தா (1954 – 1961)

நா. சோதிநாதன்
முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

ஸ்ரீகாந்தா , யாழ்ப்பாணத்தில் இருந்த அரசாங்க அதிபர்களில் பெயர் பெற்றவர், மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றவர். இவர் அரசாங்க அதிபராக இருந்தபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவு உட்பட, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்கள் சேர்ந்த பரந்த நிலப்பரப்பிற்கு அரசாங்க அதிபராக கடமையாற்றினார். இவர் அரசாங்க அதிபராக 1954இல் நியமனம் பெற்றபோது வடமாகாண அரச அதிபராகவே நியமனம் பெற்றார். பின்னர் உள் நாட்டு அரச அலுவல்கள் அமைச்சில் ஏற்பட்ட மறுசீரமைப்புக்கள் காரணமாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக மாற்றம் பெற்றார்.

இவர் யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த போது யோக சுவாமிகளின் அணுக்கத் தொண்டராகச் செயற்பட்டார். யோக சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள். யாழ்ப்பாணச் சித்தர் பாரம்பரியத்தில் வந்த யோகர் சுவாமிகளின் உலகம் போற்றும் சிந்தனைகளைச் செயற்படுத்தியவர் இந்த அரசாங்க அதிபரே. யாழ்ப்பாண நீரேரிக்குத் தெற்கே இருந்த பெரும் நிலப்பரப்பில் அடர்ந்த பெருங் காடிருந்தது. இவ்விடத்தில் பாரிய குளங்கள் இருந்தன. இந்த வரண்ட பிரதேச வளமான காட்டு மண்ணையும் குளங்களின் நீரையும் பயன்படுத்தி நாட்டிற்குத் தேவையான உணவுப் பயிர்களைச் செய்யலாம் என யோக சுவாமிகள் அடிக்கடி சொல்லுவார். அவர் நீங்கள் எல்லோரும் கிளிநொச்சிக்குப் போங்கள் நாங்கள் எல்லோரும் அங்குதான் போகப் போகிறோம் என்றும் சொல்லுவார். அவற்றையெல்லாம் 1995இல் ஏற்பட்ட யாழ்ப்பாண இடம் பெயர்வின் பின் தான் மக்கள் உணர்ந்தனர்.

சுவாமிகளினுடைய அருள்வாக்கை, சித்தர்களின் சிந்தனையை, இவை காலங் கடந்த நிகழ்வுகளை வெளிப்படுத்தும் என்பதை அரசஅதிபர் ஸ்ரீகாந்தா நன்கு அறிந்திருந்தார். யாழ்ப்பாண மக்கள் யாழ்குடாநாட்டிற்குள் அடங்கிக் கிடப்பதை நன்குணர்ந்த அரசாங்க அதிபர் யாழ்ப்பாண மக்கள் வன்னியில் போய்க் குடியேற வேண்டும் என்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வற்புறுத்திப் பேசி வந்தார். இதற்கு முன்னர் வன்னியில் ஈடுபடுத்தப்பட்ட குடியேற்றங்களில் காணியற்றவர்கள் நீருக்குத் தட்டுப்பாடு காணப்படும் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் தான் குடியேறியுள்ளதை அறிந்து வைத்திருந்தார்.

யாழ்ப்பாண அரச அதிபராக வரும் முன்னர் காணி அபிவிருத்தி இலாகாப் பணிப்பாளராக இருந்து , சிங்களப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்தி ச்சிங்கள அரசியல் தலைவர்களின் நன்மதிப்பையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுதலையும் பெற்றவர். இங்கு அரச அதிபராக வந்தவுடன், இங்கு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களில் இருந்து மக்கள் தங்கள் ஊர்களுக்கு ஏன் திரும்புகிறார்கள்வட்டக்கச்சியில் குடியமர்த்தப்பட்ட படித்த வாலிபர்களின் குறைகள் என்ன? என்பவற்றை அதிகாரிகளைக் கூட்டி ஆய்வு செய்தார். பின்னர் குறைகளை நீக்கி வசதிகளை ஏற்படுத்தி யோக சுவாமிகளின் வாழ்த்துக்களோடு குடியிருப்புக்களை உண்டாக்கினார். ஆரம்பத்தில் அவ்வளவு செவிசாய்க்காத மக்கள் பின்னர் விரும்பி வந்து குடியேறினர். குடியேற்றக் குடும்பங்கள் தாங்கள் வழிபடக் கோவில்கள், தங்கள் நலம் பேண வைத்திய வசதிகள் பிள்ளைகள் கல்வி கற்கப் பாடசாலைகள் ஊர் உறவைப் பேணப், போக்குவரத்து வசதிகள் நுகர் பொருளைச் கொள்வனவு செய்ய விற்பனை நிலையங்கள், அஞ்சல் சேவைகள், பொது இடங்கள், மண்டபங்கள் என்பவற்றை எதிர்பார்த்தார்கள் . இவர் ஒவ்வொரு செவ்வாயும், வெள்ளிக்கிழமையும் தவறாமல் கிளிநொச்சிக்கு வருவார் திட்டமிட்டபடி குடியேற்றங்களுக்குப் போய் மக்களை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டு அறிவார்.

குடியேற்ற மேற்பார்வையாளர்கள், குடியேற்ற அதிகாரிகள், விவசாயப் பகுதியினர், நீர்ப்பாசன அதிகாரிகள், மேற்பார்வையாளர்களின் மாதாந்த அறிக்கைகளைக் கேட்டுப்பெற்று ஆய்வு செய்து தீர்மானங்கள் மேற்கொள்வார். தீர்மானங்களை உரிய அதிகாரிகளுக்குக் கிடைக்கச்செய்து செயற்படுத்துவார். உதவி அரசாங்க அதிபர் கூட்டும் கூட்டங்களில் பொது மக்களிடமும், அதிகாரிகளிடமும் இவை எத்தகைய முன்னேற்றங்களைக் கண்டுள்ளன என்று மதிப்பீடு செய்வார்.

இரணைமடுக் குளக்கட்டுமானப் பணியை நெறிப்படுத்தி, மேற்பார்வை செய்த சேர். பொன் இராமநாதன் தான் உருவாக்கி வளர்த்த கல்வி நிலையங்களான பரமேஸ்வராக் கல்லூரி , இராமநாதன் கல்லூரி மாணவ மாணவியருக்கு உணவளிக்க இங்கு ஒரு 1000 ஏக்கர் வயற்காணியை உருவாக்கினார். அக் காணிக்குத் "தானியக் களஞ்சியம்" என்று பெயரிட்டிருந்தார். இவரோடு நெருங்கிப் பழகி இவருடைய சிந்தனைகளை நன்கு அறிந்திருந்த அரச அதிபர், அவருடைய தானியக் களஞ்சியம் என்ற சிந்தனையை மனதிற் கொண்டு மாவட்டம், மாகாணம் எங்கும் அதைச் செயல்படுத்த அல்லும் பகலுமாகப் பாடுபட்டார். அதன் பயனாக அவரது அரச அதிபரான வருகையின் பின்னர் பல குடியேற்றத் திட்டங்களை உருவாக்கினார்.

இத்திட்டங்களில் நெற்செய்கை முதன்மையும் முன்னிலையும் பெற்றது. கால போகத்தில் நீர்ப்பாசன நெற்செய்கை மானாவரி நெற்செய்கை என்பன மாவட்டத்தின் பயிர் செய்யக்கூடிய பெரும் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டன. சிறு போகத்தில் நீர்ப்பாசன காணிகளில் நெல் வேளாண்மை செய்யப்பட்டது. மழைக்காலத்தில் மேட்டு நிலங்களிலும் வீட்டு நிலங்களிலும் நிலக்கடலை, உழுந்து, பயறு, எள், கௌப்பி என காய் கறித்தோட்டம் என்பனவும் செய்யப் பட்டன. வீட்டுக்காணிகளில் தென்னை, எலுமிச்சை, தோடை, முருங்கை, மா , பலா போன்ற வான் பயிர்கள் நாட்டப்பட்டன. வாழைத் தோட்டங்களும் தொடர்ந்து நீர் பாய்ச்சக்கூடிய இடங்களில் உண்டாக்கப்பட்டன. பொருத்தமான இடங்களில் வெங்காயச் செய்கை மேற் கொள்ளப்பட்டது. மிளகாய், பூசணி என்பனவும் வீடுகளின் அருகிலும், வெளி இடங்களிலும் செய்யப்பட்டன. வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயம், மிளகாய். நிலக்கடலை பூசணி, தோட்டப் பயிர் என்பன காசுப் பயிர்களாகக் கொள்ளப்பட்டன.

1974 களில் ஏற்படுத்தப்பட்ட, அரிசி மாவட்டங்களுக்கு வெளியே எடுத்துச் செல்லத் தடை என்ற நெருக்கடியான காலகட்டத்தில் கிளிநொச்சி அரிசி யாழ் மாவட்டத்திற்குப் பெரும் ஆறுதல் அளித்தது. 1970 முதல், நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதித் தடையின்போது முல்லைத்தீவைச் சேர்ந்த விசுவமடு மிளகாய் பாரிய அளவில் இலங்கைச் சந்தையைப் பிடித்தது. மிளகாய் பயிர் செய்த பலர் மகிழூர்திகளைக் கொண்டிருந்தனர். கிளிநொச்சித் தேங்காய் யாழ்ப்பாணத்தில் பல சந்தைகளில் விற்பனையாகின. 1977இல் ஏற்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையால் 1978 முதல் 1983 வரை கிளிநொச்சிச் சந்தை பகலிரவுச் சந்தையாக வளர்ச்சி பெற்றது. விவசாயம் தோட்டச் செய்கையோடு தொடர்புடைய பலர் செல்வந்தராயினர். காணிச் சொந்தக்காரன் தொழிலாளி, வணிகர், தரகர் எனப்பலர் ஆடம்பர வாழ்க்கை வாழ முடிந்தது. பார ஊர்திகள், பல வகை உழவுப் பொறிகள், மாட்டு வண்டில் என்பன வருமானத்தைத் தேடித் தந்தன. வன்னி நிலப்பரப்பில் நிலக்கடலை, உழுந்து, கௌப்பி, பயறு, பாலைப்பழம் என்பன பெயர் பெற்ற உற்பத்திப் பொருட்கள். நெல் வேளாண்மைக்கு பயன்படுத்தப்படாத காணிகள் எல்லாம் இப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும். யாழ் குடா நாட்டில் உலகப்புகழ் பெற்ற உற்பத்திப் பொருட்களாக கறுத்தக் கொழும்பான் மாம்பழம், இராசவள்ளிக் கிழங்கு, பனங்கட்டி, எள்ளுப்பாகு, கப்பல் வாழைப்பழம் பனங்கள் போன்றவை உள்ளன.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மக்களையும் ஏதோ ஒருவகையில் குடியேற்றத்திற்குள் அடக்க பல்வேறு வழிகளை அரச அதிபர் கையாண்டார். உழவர்கள், பணக்காரர், இளம் வாலிபர்கள், இளம் பெண்கள், காணி சொந்தமாகத் தேவையானோர் என எல்லாரையும் இவர் இணைத்துத் திட்டமிட்டார். எப்படியும் யாழ்ப்பாண மக்களைக் கிளிநொச்சிக்கு நகர்த்தி விட வேண்டும் என்று செயற்பட்டார். இதற்காக ஏற்கனவே இருந்த குடியானவர் குடியேற்றத் திட்டம், மத்திய வகுப்பினர் குடியேற்றத் திட்டம், இளைஞர் குடியேற்றத் திட்டம், கிராம விஸ் தரிப்புத் திட்டம் என்பவற்றை ஏற்ற மாற்றங்களுடன் மாற்றியமைத்தார். குடியேற்றத்தை விரும்பாத, யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட மனங் கொள்ளாத மக்களை மனமாற்றி, நீண்ட காலப்போக்கில் வெற்றி பெற்றார். குடியேற்றங்களை ஆதரிக்காத அரசுடனும் குடியேற விரும்பாத மக்களுடனும் இருமுனைப் போராட்டத்தை நடத்தி வன்னியை வளப்படுத்தினார்.

யாழ் மாவட்டத்தைப் போலவே, முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் கட்டு, வவுனிக்குளம் திட்டங்களை இவ்வாறு அபிவிருத்தி செய்தார். மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக் குளப் பயன்பாட்டை மேம்படுத்தினார். யாழ்ப்பாணம் உட்பட எல்லா வட மாகாண மாவட்டங்களுக்கும் மின்சக்தி கிடைக்கச் செய்தார். கிராமக் குளங்களைப் புனரமைத்தார். நிலப்பயன்பாட்டையும் உச்சப்படுத்தியது போல நீர்ப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பயிர்ச்செய்கைப் பரப்பைப் பெருக்கலாம் என்று செயற்பட்டார் அத்திட்டத்தின் ஒரு படியாக 1920 முதல் இன்று வரை இரணைமடு அணைக்கட்டை ஐந்து முறை உயர்த்தி 22 அடி உயரமும் 40000 ஏக்கரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கொள்ளத்தக்கதாக இருந்த குளத்தின் அணைக்கட்டை 34 அடியாக உயர்த்தி 165000 ஏக்கரடி நீரைக் கொள்ளத்தக்கதாக குளத்தைப் பெருப்பித்தார்.

இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன்குளம், புதுமுறிப்புக்குளம், வன்னேரிக்குளம், கல்மடுக்குளம், கரியாலை நாகபடுவான்குளம் ஆகியவற்றில் நீரின் சேகரிப்புத் தன்மையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார். மேலும் கிளிநொச்சியில் உள்ள வளமான மண்கொண்ட உயரமான மேட்டு நிலப் பகுதியை ஏற்று நீர்ப்பாசனம் (Litt Irrigation) மூலம் பயன்பாட்டிற்குச் கொண்டு வந்தார். நெல் சந்தைப்படுத்தும் சபைகளை உருவாக்கி, நெற்செய்கையில் ஈடுபடுவோரை நெல் அறுவடை முடிந்ததும் கொள்வனவு மேற்கொள்ள வகை செய்தார். முதல் முதலாக உருவாக்கப்பட்ட பசுமைப்புரட்சியினால் ஏற்படுத்தப்பட்ட வசதிகளை, மாவட்டங்கள் தங்கு தடையின்றிப் பெற்றுக் கொள்ள வழியமைத்தார். பிரதமர் டட்லி சேனநாயக்கா வடபகுதிக்கு வந்து பசுமைப் புரட்சியைப் பார்வையிட வகை செய்தார்.

இத்தனைக்கும் குடியேற்றத் திட்டங்களில் ஏற்பட்ட வளர்ச்சியே காரணம். இவற்றினால் மக்களை நகரத்துவத்திலும் சமூக வளர்ச்சிக்கும் வித்திடப்பட்டது. குடியானவர் குடியேற்றத் (Peasant Settlement Scheme ) திட்டமே இவற்றில் பெரும்பான்மையானது. மக்களின் ஜீவனோபாய குடியேற்றத்திட்டங்களாகவே இவை உருவாக்கப்பட்டன. குடும்பங்களின் பாரம்பரிய நெல்லரிசிச்சோற்றுத் தேவைக்குச் சற்றுக் கூடுதலாக உற்பத்தி செய்து, வீட்டுத் தேவைக்கும், விதை நெல்லுக்கும் தேவையானவை போக மிகுதி மிகை நெல்லை விற்று, குடும்பத்தின் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துவது, இத்திட்டங்களின் குடியிருப்புக் காணியின் வான் பயிர் வருமானம், தோட்டப் பயிர் வருமானம் கால் நடை வருமானம் எல்லாம் , நெற் செய்கை வருமானம் இல்லாத ஏனைய மாதங்களில் குடும்பச் செலவுக்குரிய வருமானமாகவும் , குடும்பச் சிறு சேமிப்புக்குரிய வருமானமாகவும், அவசிய தேவைக்கு உதவும் வருமானமாகவும் பயன்பட்டது.

மத்திய வகுப்பினர் குடியேற்றத்திட்டம் (Middle Class Scheme). இது நெற் செய்கைக் காகவும், தென்னைச் செய்கைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. இது 10 ஏக்கர்த் திட்டமாகவும் 5 ஏக்கர் திட்டமாகவும், பெரும்பாலும் நீரப்பாசனசேவை வசதியுடைய காணிகளைக் கொண்டே உருவாக்கப்பட்டது. 10 ஏக்கர்த் திட்டம் மேற்தட்டுப் பணம் படைத்த வணிகர்கள், உயர் பதவி வகித்த அரச அதிகாரிகள், வசதிபடைத்த கல்வியலாளர்கள், சட்டத்தரணிகள் போன்றோருக்கே வழங்கப்பட்டது. ஏனைய மானாவரி நிலங்களில், மணற்பாங்கான கடற்கரையை அண்டிய காணிகளில் இவர்கள் தென்னைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். வன்னியில் பாரியளவு தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதனாலேயே இப்போது இலங்கையில் உருவாகிவரும் இரண்டாவது தென்னை உற்பத்தி முக்கோணம் மன்னார், முல்லைத்தீவு, , யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைக் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. 5 ஏக்கர் காணிகள் வருமானம் குறைந்த தாழ்ந்த மத்திய வகுப்பினருக்கு வழங்கப் பட்டது.

அடுத்ததாக இளைஞர் குடியேற்றத் திட்டம் (Youth Settlement Scheme) அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகங்கள் தென்னி லங்கை வேலைவாய்ப்புக்கள் இனிக்கிடைக் காதென்ற நிலையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டம் வன்னிப் பெரும் நிலப் பரப்பு மாவட்டங்கள் யாவற்றிலும் நடை முறைப்படுத்தப்பட்டது. பெரும்பாலும் மேட்டுப் பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்பு என்பவற்றை அடிப் படையாகக் கொண்டது. முன்னர் ஆண்கள் தான் குடியேற்றப்பட்டனர். பின்னர் பல பெண்கள் திட்டங்கள் வெவ்வேறு மாவட்டங்களில் உருவாக்கப்பட்டன. இது பயன் தந்ததால் விசுவமடுத்திட்டம், திருவையாறுத் திட்டம் எனவும் மகளிருக்கான மிருசுவில் திட்டம், அம்பாள் நகரத்திட்டம் எனப் பலவும் உருவாகின. தென்னிலங்கைச் சிங்கள இளைஞர்களுக்குக் கிறிஸ்தவ அமைப்புக்கள் இதைத் தொடங்கின.

கிராம விஸ்த்தரிப்புத் திட்டங்கள் (Rural Expansion Settlement Scheme) இத்திட்டங்களில் குடியேற்றப்பட்ட வர்களின் உறவினர்கள், வணிக நிலை யங்களின் உதவியாளர்கள், அரச ஊழியர் களின் உறவினர், கிளிநொச்சியில் குடியேற விருப்பம் உடையவர்கள் எனக் குடியமர்த்தப்பட்டனர். இது காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் என்ற வகையில் அமைக்கப்பட்டன. இவை குடியேற்றத்திட்டங்களின் அண்மையில் உள்ள மேட்டு நிலங்களில் உருவாக்கப்பட்டன.

அத்துமீறிக் குடியேறியோரும் இத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டனர். ஆரம்பத்தில் இவர்களுக்கு எதிராக அரசு வழக்குத் தொடர்ந்தது. பல வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டன. இக்கால கட்டத்தில் இவ்விடயத்தில் தலையிட்ட அரச அதிபர் குடியேற்றத் திட்டங்களுக்கு அரசு பல தொகைப் பணத்தைச் செலவு செய்கிறது. அத்துமீறிக் குடியேறுவோர் ஒரு செலவுமின்றி குடியேறுகின்றனர். எனவே அரசு அக்குடியேற்றங்களை ஏற்று காணிகளை முறைமைப்படுத்தி ஒழுங்கமைத்து வசதிகளை ஏற்படுத்தி அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டார். அதன்படி அவர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட காணிகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீகாந்தா அவர்கள் 1960 - முதல் 1964 இறுதி வரை அரசாண்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசிலும், அதன் பின்னர் டட்லி சேனநாயக்க பிரதமராக இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசிலும், தொடர்ந்து 10 வருடங்கள் காணி அபிவிருத்தி, மின்சக்தி அமைச்சின் செயலாளராக இருந்தார். இரண்டு வேறு அரசுகளின் செயலாளராக இருந்த காரணத்தால் பிரதமர் டட்லி சேனநாயக்காவை பசுமைப் புரட்சி செயற்பாட்டு முன்னேற்றத்தைப் பார்வை யிட வட பகுதி அழைத்து வந்தார்.

இவருடைய பணிகளை இவருடைய சேவைக்காலத்தில் பல்வேறு குறை கூறியோர் மாவட்டங்களுக்கு வெளியே அரிசியைக் கொண்டு செல்லத்தடை வந்த போதும், பொருளாதாரத்தடை ஏற்பட்ட போதும் , யாழ்ப்பாண இடப்பெயர்வுக் காலத்திலும் , வன்னியில் ஏற்பட்ட பலகட்ட இடப்பெயர்வுகளின் போதும், மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். இவர் நீண்ட காலமாக வடமாகாணத்தை ஒரு தானியக் களஞ்சியமாக்கச் செயற்படுத்திய பல திட்டங்களின் பயன்களை, நன்மை களை மக்கள் உணர்ந்தனர்.

ஸ்ரீகாந்தா அரசாங்க அதிபராக இருந்தபோது ஒரு வெற்றிகரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணித்தலைவராகவே செயற்பட்டார். ஏனைய திணைக்களத் தலைவர்கள் இவருடன் சேர்ந்து செயற்பட்டு வெற்றிக்கு உழைத்தனர். இவருடைய சிந்தனைகள் யோக சுவாமிகளினுடைய சிந்தனை எனவும், சுவாமிகள் முனிவர்களில் மூத்தவர் என்பதும், முக்காலமும் உணர்ந்தவர் என்பதும், சுவாமிகளின் சிந்தனைகளில் நில நலமும், இன நலமும், செறிந்துள்ளன என்பதும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஏனைய அதிகாரிகள் சுவாமிகளோடு நெருங் கிய தொடர்புடையவர்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் குடியேற் றங்களை உருவாக்குவதில் பெரிதும் துணை நின்றவர்கள்.

இவர்களில் கிராம அபிவிருத்திப் பயிற்சியை நிலையப் பொறுப்பாளர் திரு. குமாரசாமி, மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலர் திரு. கனகரத்தினம், பச்சிலைப்பள்ளி கரைச்சி துணுக்காய்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசுப்பிள்ளை, விவசாயப் போதனாசிரியர் எதிர்வீரசிங்கம், மிருக வைத்தியர் தம்பித்துரை, கிராம பயிர்ச்செய்கை அலுவலர் சிவகுரு, விற்பனைத்திணைக்கள முகாமையாளர் தாமோதரம்பிள்ளை, நில அளவைப் பகுதி மேற்பார்வையாளர் மான், (Mann overseer) குடியேற்ற அதிகாரி மகாதேவா, கிராம அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள் இணைந்து இப் பணிகளை இணைந்து முன்னெடுத்தனர்.

அரச அதிபர் பதவி உயர்வு பெற்று கொழும்பு சென்ற பின், சத்தியாக்கிரக நடவடிக்கைகளால் கச்சேரி செயற்பாடு சீர்குலைந்திருந்தது. உடனடியாக திரு. நெவில் ஜெயவீரா அரசாங்க அதிபராக நியமனம் பெற்று வந்தார்.

காணி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளராக இருந்து, குடியேற்றத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற் படுத்திப் பெற்ற அறிவு அனுபவங்களுடன் யாழ் மாவட்ட அரச அதிபராக இருந்து ஏற்படுத்திய வன்னிப்பிரதேச குடியேற்றத்திட்டங்களில் எஞ்சியிருந்த குறைபாடுகளை 10 வருடங்கள் காணி அபிவிருத்தி மின்சக்தி அமைச்சு செயலாளராக இருந்து செப்பனிட்டு நிறைவு செய்தார். இவர் கால் நூற்றாண்டு காலம் வட பகுதியைத் திட்டமிட்டு குடியேற்றங்கள் மூலம் அபிவிருத்தி செய்து மக்கள் நலமும் வளமும் பெற்று வாழ வழிவகுத்த சான்றோன் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி ஓர வேப்பமரம்

உ. அல்பிறேட் நிலக்சி
கிராம அலுவலர்,
இரத்தினபுரம்.

என் வீட்டு சாமி அறைக் கதவு
என் காலில் சட்டெனத் தட்டியது
கதவடித்து விட்டதெனக் கூறி
கதவருகே அமர்ந்து விட்டேன்

தாய் போன்று என் தலையை
தழுவுவதாய் நான் உணர்ந்தேன்
சாமி அறைக்கதவு என்னிடம் கேட்டது
நான் உனக்கு அடிப்பேனா நீதானே எனக்கடித்தாய் என்று...

உன் காணி வேலி ஓரத்திலே நான் முளைத்தேன்
உன் தாய் உன்னைப் பெற்றெடுத்த போது - உன்னை
எட்டி நின்று பார்த்தேன்.

காலம் ஓடியது குடுகுடுவென நீயும்
ஓடி வந்தாய் என்னருகே
உன் அயல் வீட்டுத் தோழர்களுடன் - நீ
வீடு கட்டி விளையாடுகையில்
மாமரத்தின் நிழல் அருகே வீடொன்று கட்டினாயே

கடை ஒன்றும் போட்டாயே தென்னை அடி ஓரத்திலே
ஞாபகம் இருக்கிறதா?
என்னைச் சுற்றி பட்டு உடுத்தி கல்லொன்று
நாட்டி விட்டு பூமாலை பூப்போட்டு சுற்றிச் சுற்றி நீ என்னைத்
தொட்டுக் கும்பிடும் காட்சி என்மனதை விட்டுப்போகுமா?
மாவும் தென்னையும் நானும் உனைப் பார்த்துச் சிரிப்போமே.

மாலை ஆறு மணி ஆனதும் உன் அம்மாவின்
அழைப் பொலி உன்னைக் கூப்பிட - நீ
விளையாடும் பொருள் எல்லாம் பக்குவமாய் எடுத்துவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் போதே நான் சிந்தித்தேன் உன் பொறுப்பை.
போர்ச்சூழல் மூண்டு எறிகணைத் தாக்குதல் உருவெடுக்க - நீ
என்னருகில் பதுங்குகுழி வெட்டினாயே ஞாபகம் இருக்கிறதா?
சாமி எனக் கும்பிட்டாயே உன்னைச் சாக நான் விடுவேனா?
அசையாமல் நான் நின்றேன் என் அங்கங்கள் முறிந்தாலும்
உறுதியாக நான் இருந்தேன் உன் உயிர் காக்க வேண்டுமென்று

பத்து அல்ல என்னை விட்டுப்பத்தாயிரம் மைல்கல் - நீ சென்றாலும்
உனக்காகக் காத்திருந்தேன்
இரு வருடம் போக நீ மீண்டும் வ்ந்தாய்
பாலைவனமாய் இருந்த நாம் எல்லாம் உன்னைக் கண்டு
சோலை வனமாய் மாறினோமே.

மங்கள நாயகி நீ மணாளனுடன் வருவதைக் கண்டு
அர்ச்சனை அள்ளிப்போட்டு வாழ்த்தினோம் இலைகளால்
புரிந்ததா உனக்கு அப்போ...

எங்களைச் சுற்றிலும் அழகு செய்தாய்
சாய்ந்து போன வேலி எல்லாம் சரி செய்தாய்
உடைந்து போன உன் வீட்டின்
ஓரமாய்க் குடியமர்ந்தாய்
ஆண்டு ஒன்று போக நீ மகன் ஒன்றை ஈன்றெடுத்தாய்
மகனுடன் சேர்ந்து உனக்கு ஓர் வீட்டுத்திட்டம் கூடவந்தது

அத்திவாரம் வெட்டி நீ கல் வைத்து'க்கட்டினாய்
கூரைவேலை செய்யும் காலமதுவும் வந்தது
என் அருகில் வந்து என்னைச் சுற்றி அளவெடுத்தாய்
எத்தனையோ பேர் என்னைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள்
புரியவில்லை மகளே... என்ன செய்யப் போவதாக


மறு நாளே புரிந்தது என்னை வெட்டி விட்டாயே
துண்டுகள் ஆக்கப்பட்டுத் துடிதுடிக்கும் போது நான்
உன்னை எண்ணிக் கவலை கொண்டேன்
என்னை வெட்டி விட்டாய் என்று எண்ணி
ஆனால் நீ ............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமாய்ப் பதப்படுத்திப் பட்டறைக்கு அனுப்பிவைத்தாய்
வெட்டுப்பல் விழுந்தாலும் மீண்டும் வந்தேனே
உன் வீட்டின் யன்னல் நிலை, கதவாகவும் கூரை ஓர
தீராந்தியாகவும், தச்சன் செய்த கைப்பொருளாய்
மீண்டும் உனக்காய் பல பாகங்களாய் நான் வந்தேன்.

என்னை மட்டும் ஏதோ நீ தச்சன் கொத்தன் அழகு செய்து
என் மேனியிலே குத்து விளக்கு தீப கன்னியாம் வடிவம்
பலவும் செய்து உன்வீட்டில் சாமி அறைக் கதவாக வைத்தாயே
மீண்டும் நீ திருநீறு பூசி திலகமிட்டு மாவிலைத் தோரணமும்
தொங்கவிட்டு அச்சாணி சாவியும் அர்ச்சனைக்காசு
கொடுத்து வாங்கி நித்தம் நித்தம் என்னைத் தொட்டுத்
திறக்கும் போது நீ தொட்டுக் கும்பிடும் காட்சிதான்
மனதில் நிற்குதே....
உன் வீட்டுச் சாமி அறைக் கதவு நான் உன் காலைத் தீண்டுவேனா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்இலக்கிய இலக்கணங்கள் வெளிப்படுத்தும் தமிழர் இயங்கியல்

**கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா),**
நிறுவநர் – இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றம்.

**காலப் பழமையால் வைரம் பாய்ந்தது!**
**நாகரிகத்தின் நாற்றங் காலது**
**எம்மொழிக்கும் அது ஈடிணையற்ற**
**செம்மொழி! உலகச் சிந்தனைக்கெல்லாம்**
**ஊற்றாய்த் துலங்கும் உண்மையின் பைஞ்சுனை!**
- புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

வரலாற்று முறையிலும், இலக்கிய, இலக்கண, பண்பாட்டு முறைகளிலும் உலகில் தமிழ்மொழி மிக உயர்ந்து நின்றாலும் தமிழர் நிலையும், தமிழின் நிலையும் தமிழர் புறக்கணிப்பும் தமிழின் முதன்மையை, தொன்மையை, அதன் பழமையை எழினி(திரை)யிட்டு மறைக்கின்றது. தொன் மொழிகளில் மக்கள் வாழ்க்கைக்கு நிலையான பயனுடையதாய், முக்காலத்தும் வழிகாட்டியாய் இயங்கும்மொழிகளே உயர்தனிச் செம்மொழிகள் எனப்படும். இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம்(வடமொழி) போன்றன மக்கள் வழக்கொழிந்து இறந்துபட்ட செம்மொழிகள். சீனம் உலகின் மிகக்கூடிய மக்கள் பேசும் செம்மொழி, உலகப் பெரும்சமய மொழிகளாக எபிரேயம், அரபு, பாரசிகம் அடுத்தபடி நிலையில் உள்ளன. வரலாற்றுச் சிறப்பும் இடச்சிறப்பும் கொண்ட ஐசுலாண்டிக் காதிக், பழம்பாரசிகம் ஆகிய தொன்மொழிகளும் உள.

இன்றிருக்கும் இலக்கண நூல்களைவிட தொல்காப்பியம் தொன்மையும், பழமையும்கொண்ட மிகவிரிந்த தமிழர் தம் இயங்கியலை வெளிப்படுத்தும் நூல். இன்று உலகிலேயே ஒப்பும், உயர்வும் மிக்க தனிப்பெருநூல் திருக்குறள். சங்க இலக்கியங்கள் முற்ற வளர்ந்த இலக்கியத்தின் சிதறிய நுணுக்குக்களே. தொல்காப்பியத்திற்கு முன்னும் தமிழர்களிடம் விரிந்த இலக்கிய இலக்கணங்கள் இருந்தன என்பதை அதன் அகச்சான்றுகளால் உய்த்தறியலாம்.

படிமுறை வளர்ச்சி(திரிவாக்க)க் கோட்பாடு (theory of evolution)
ஐம்பூதக் கோட்பாடு (theory of universe)
அளவையியற் கோட்பாடு (theory of reasoning&logic)
காரணகாரியக் கோட்பாடு (theory of cause&effect)
இன்பியற் கோட்பாடு (theory of hadonism)

ஆகிய அறிவுசார் துறைகளை தொல்காப்பியம் குறிப்பிடும்போது "நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே, என்ப, என்மார் புலவர், நுனித்தகு புலவர் கூறிய நூலே" என்பதாகக் குறிப்பிடுவது நுணுகி ஆராயத் தக்கதே.

இந்தியப் பெருநிலப் பரப்பிலே தோன்றிய மெய்யியல்களான சமணம் பிராகிருத மொழியுடனும் பௌத்தம் பாளிமொழியுடனும், வேதம் சமஸ்கிருத மொழியுடனும் சேர்ந்தே வளர்ந்துள்ளன. இந்த அடிப்படையில் அக்காலப் பகுதியிலேயே சாங்கிய, ஒருங்கு(யோக),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகாய்த மெய்யியல்களும் தமிழுக்கு உரிய னவாக வளர்ந்துள்ளன எனக்கொள்வதில் எத்தவறுமில்லை எனலாம். அத்தோடு ஆசீவகக் கோட்பாட்டின் மூலவடிவங்கள் அனைத்தும் தமிழில் மட்டுமே உள்ளதென்பர்.

தமிழ் மரபு உலகிற்கு வழங்கிய கொடைகள் (வடமொழியாளர்களும், ஐரோப்பி யரும் கரவாகத் தட்டிப் பறித்ததாகவும் இருக்கலாம்) பல. குறிப்பாக தமிழகத் தந்திரக் கோட்பாட்டிற்கும் சீனத்துத் தாவோயிசத்துக்கும், பக்குடுக்கை நன்கணியரின் தமிழ் அணுவியற் கோட்பாட்டிற்கும் கிரேக்கத்து எம்பீடகிள்சின் அணுவியற் கோட்பாட் டிற்கும் உள்ள உறவுகள் குறித்து விரிவான ஆய்வுகள் செய்யப்படின் தமிழும், தமிழருமே உலக அணுவியத்திற்கும் முன்னோடிகள் என்பதை கண்டுகொள்ள முடியுமென்கிறார் முனைவர்.க. நெடுஞ் செழியனவர்கள் தமது "தொல்காப்பி யமும் சாரகசம்கிதையும்" என்றநூலில். அதுமாத்திரமல்லாது டெமாகிரட்டசு, எம்பீடகிள்சு, பைதகோரசு முதலான கிரேக்கத்து அறிஞர்கள் தமிழகம் வந்து கற்றுச் சென்றே தம் கோட்பாடுகளை உருவாக்கினரென்றும், கௌதம புத்தர் சாங்கியரென்றும், இவரது மாணாக்கர் சாரிபுத்திரன் தமிழகத்திலே ஐந்திரம் கற்றவரென்றும் தமது நூலில் குறிப்பி டுகின்றார்.

சாங்கியம், யோகம், உலகாய்தம் ஆகிய மூன்று மெய்யியல்களும் இணைந்ததே தமிழில் "ஐந்திரம்" என்றும், வடமொழி யில் "ஆன்வீக்சீகி" என்றும் கூறப்படுகி றது. "ஆசீவகம" எனப்பட்ட "நல்வாழ்க்கை" என்றமெய்யியலும் தமிழ்மண்ணைச் சேர்ந்ததே. மேற்குறித்த சாங்கியம், யோகம், உலகாய்தம் கடவுள் மறுப்பையும், வேத மறுப்பையும் அடிப்படையாகக் கொண்ட பொருள் முதற்கோட்பாடுகள். இவற்றின் அளவையியல் முறைகள் காட்சி, உய்த்தறிவு, மேற்கோள் என்பவையாகும். ஆசீவகமென் பதும் மனிதவாழ்வின் அடிப்படைகளை ஆராயும் பொருள் முதற்கோட்பாடே. சாங்கிய, உலகாய்த மெய்யியல்களின் அளவையியல்கள் தமிழ் அகத்திணை மரபில் திருக்குறளின் காமத்துப்பாலில் முழுமையாக இடம்பெற்றிருக்கின்றன திருக்குறளை நுணுகி ஆராய்ந்தால், இது ஒரு பொருள் முதற்கோட்பாட்டு நூலென்பதை உய்த்துணரமுடியும். இதன் *1330* குறள்களிலும் பரவலாக கருத்து முதற்கோட்பாடு, கடவுள் மாயை மறுப்பைக் கண்டுகொள்ளலாம்.

**மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரையி னாள்**

(கு.*617*) என்றும்

**தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்.ணான் உலகு**

(கு,*1103*) என்ற

இக்குறள்கள் விண்ணிலல்ல மண்ணிற்றான் தெய்வங்(கடவுள்)களை உழைப்ப (முயற் சியுடைய)வனின் காலடியிலும், தான்வி ரும்பும் பெண்ணின் தோளிலும்(இன்பத் தைச்சொர்க்கம்) காணலாம் என்பார். தமி ழனுக்குக் கிடைத்திருக்கும் தொல்நூ லாகிய தொல்காப்பியமும் பொருள் முதற் கோட்பாட்டை விளம்புவதாகவே உள் ளது இங்கும் சாங்கிய, உலகாய்த. அளவை யியல்கள் பொருளதிகாரம் களவியலில் வெளிப்பட்டு நிற்பதைக்காணலாம்.

**குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என**
**மதியுடன்படுத்தல் ஒரு மூவகைத்தே**

(தொ.பொ.*1073*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாள் என மொழிப

(தொ.பொ.1074)

இங்கு முதலில் குறையுற உணர்தலும் (காட்சி), பின் ஐயப்படல், அதன்பின் தெளிவடைதலென அளவையியல் கோட்பாட்டிற்கமைவாய் இருப்பதைக்காணலாம். வள்ளுவரும்,

அணங்குகொல்!ஆய்மயில் கொல்லோ! கனங்குழை
மாதர்கொல்! மாலும்என் நெஞ்சு

(கு,1081)

இங்கும்அதே அளவையியல்(பொருள் முதல் கோட்பாட்டை வலியுறுத்துகின்றார். அத்தோடு தொல்காப்பிய நூற்பாக்களான

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றியுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே

(தொ.பொ.1039)

சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிவே சுட்டலான

(தொ.பொ.1040)

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப

(தொ.பொ.1041)

இத்தொல்காப்பியக் களவியற்பாக்கள் சாங்கிய, யோக, உலகாய்த பொருள் முதற் கோட்பாட்டின் காட்சி, ஐயம், தெளிதல் போன்ற அளவியற் கூறுகளை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

பண்டுதொட்டுத் தமிழ் மக்கள் தங்களிடையேயும், ஏனைய உயிர்களிடத்தும் அன்புகாட்டி உதவும் அறக்கொள்கை இருந்திருக்கிறது என்பதற்குத் திருக்குறள் பெரும் சான்றாயுள்ளது. ஏன் இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிக வளர்ச்சி கண்டிருந்த சிந்துவெளி அகழ்வின்போது ஒரு கொலைக் கருவியைத் தன்னும் காணமுடியவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். "குறளில் வாழ்க்கை யையும் உலகையும் வெறுத்தொதுக்கும் போக்குப் பரவலாகக் காணப்படவில்லை. வைதீகம், பௌத்தம், பகவத்கீதையைப் போல் இம்மை, மறுமைப் பயன் கருதி அறநெறியில் நிற்றலென்ற வாணிகக் கொள்கையையும் குறள் வலியுறுத்தவில்லை. நல்லது செய்யவேண்டும் என்ற உணர்வினால் நல்லது செய்யவேண்டுமென் கிறது (குறள்211,222) மாந்தன் உழைப்பதும், பொருள் ஈட்டுவதும் சமுதாயத்திற்கும், பிற உயிர்களுக்கும் நன்மை(அறம்) செய்யவே(81,212) என்கிறது. அத்தோடு வாழ்க்கையை உலகியலுடன் விருப்போடு ஈடுபடக்(619,620)கூறுகிறது.

குறள் உயிர்களோடும், உலகத்தோடும் அன்புடனும், அருளுடனும், அறிவுடனும் இணைந்து வாழ வியத்தகு பண்புடனும், சால்புடனும் நெறிப்படுத்துகின்றது. உலக இலக்கியத்தில் இவ்வளவு சிறந்த ஒளிமயமான அறவுரைகளை வழங்கும் இன்னொரு நூலைக் காணமுடியாது (95, 105, 108, 121, 159, 162, 216, 298, 319, 578, 594, 628, 757, 782, 874, 931, 973, 999, 1007, 1024, 1032.... ). இவையெல்லாம் தமிழ் மக்கள் உலகவாழ்க்கையிடமும், உயிர்களிடமும் அன்பும், பண்பும் காட்டும் தன்மை இயல்பாயிருந்து இருக்கிற தென்பதை திருக்குறள் சுட்டிநிற்கிறது" என்பதைத் தனது "இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்" என்ற நூலில் புகழ்கின்றார் இலக்கியத்திற்கான மீயுயர் பரிசு(நோபல்) பெற்ற முனைவர் ஆல்பர்ட் சுவைட்சர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையின் இருநிலைகளான எழுத்தும், சொல்லும் ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு அமைக்கப்பெற்ற இலக்கியத்தின் உள்ளடக்கந்தான் பொருள். எனவே அன்று நிலவிய பல்வேறு துறை அறிவியலின் துணைகொண்டு வரையறுப்பதே பொருளிலக்கணத்தின் நோக்கம். திணை (குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்) என்பது முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய முப்பொருட்களால் வரையறுக்கப்படும்.

**முதற்பொருள்:**
நிலமும் பொழுதும் என வரையறை செய்யப்படுகிறது.

**கருப்பொருள்:-**
தெய்வம்(வழிபாட்டுத்துறை), உணவு, மா(விலங்கு), மரம்(குடியிருப்பு நிலை, வளங்கள்), புள்(பறவைகள்), பறை (தோல் இசைக்கருவிகள்), செய்தி(தொழில் நுட்பம்,செய்பொருள்), யாழ் (நரம்புக் கருவிகள்), அவ்வகை பிறவும் என்பதால் இப்பட்டியல் விரிவடைந்து செல்கிறது என்பதைத் துலக்கும்.

**உரிப்பொருள்:-**
இது திணைக்குரிய அகப்பொருள், புறப் பொருளென இருவகைத்து,

திணை என்பது மக்களின் பருப்பொருட்(முதற்பொருட்) பின்னணியான நிலத்தையும், கால நிலையையும் அம் முதற்பொருட்களுடன் வினைப்பட்டு அதன் விளைவாய் அமைந்த வாழ்க்கை முறையைக் கருப்பொருளாகவும், குடும்பமெனும் தலைவன் தலைவி உறவாகவும், போரென்னும் அரசியலுறவாகவும், மக்கள் தமக்குள் கொண்டுள்ள சமூக உறவை உரிப்பொருளாகவும் கொண்டு விளங்குகின்றது. தொல்காப்பியம் சுட்டுகின்ற ஏழுதிணைகளாகிய குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், கைக்கிளை(ஒருதலைக் காமம்), பெருந்திணை(ஒவ்வாக் காமம்) ஆகியவற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மட்டுமே முதல், கரு, உரிப் பொருட்களைக் கொண்டு முழுமை பெற்றவையாக உள்ளன.

தொல்காப்பியத்தைப் பொறுத்தவரையில் நிலமெனப்படுவது பாலை நீங்கலாக நானிலங்களேயாகும். "முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" (தொல்.பொரு.4) இப்பாவின் பின்னணியில் துலங்கும் மெய்யியல் கோட்பாடு உலகையும், அண்டத்தையும், பேரண்டத்தையும் விளக்கும் மிகமுன்னேறிய மெய்யியலாகிய "இயங்கியல் பருப்பொருளியம்" கூறும் கொள்முடிபாகும். உலகில் மாற்றம் நிலையானது. மாற்றமே இயற்கையின் இயற்கை. அந்த மாற்றம் காலத்தில் இடத்தின்பால் நடைபெறுகிறது. மாற்றத்தை அளப்பதும் முடிவுசெய்வதும் காலமும் இடமுமே. இவை இல்லாது பருப்பொருளில்லை. இப்படி காலத்தையும் இடத்தையும் முதற்பொருளாக வைத்துத் தொல்காப்பியம் தொல் தமிழரின் அறிவியல் மேம்பாட்டை வெளிப்படுத்தும். அத்தோடு கருப்பொருள் நிலப் பிரிவுகளுக்கிடையே மாறுபடும் எனும்பொழுது அறிவியல் பிறக்கிறது. தமிழர்களின் அறிவியல் வளர்ச்சியை ஐயத்திற்கிடமின்றி விளக்குவது,

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனமே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தனரே**
(தொ. பொ.1526)

இத்தொல்காப்பிய நூற்பா வெளிப்படுத்துவது உயிரியல் திரிவாக்கக் கோட்பாட்டின் முதல் அறிவியற் கட்டமாகும். மாந்தர்வாழ்வை மேம்படுத்தும் நோக்கமாக அறம், பொருள், இன்பம் என்றகொள்கையை வகுத்த மரபு தமிழ்மரபாகும்.
**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் ----**
என்பார் தொல்காப்பியர்.

உலகில் படைக்கப்பட்ட உயிரின் இயற்கைப் பண்பு இன்பநாட்டம். இன்பத்திற்கும் பொருள் தேவை. இவற்றை அறத்தின் வழி பெறுவதே பிறப்பின் இயல்பு. இத்தனிமனித வாழ்வு சமுதாயத்துடன் இணையும்போது அகவாழ்வானது புறவாழ்வாகிறது. அகவாழ்வில் இன்பம், பொருள், அறம் என்றது புறவாழ்வில் அறம், பொருள், இன்பமாக மாறுகிறது. இப்புறவாழ்வுக் கோட்பாட்டு நூல் தான் திருக்குறள். ஆனால் மனித இனத்தின் பொதுமைக்குரிய அறம், பொருள், இன்பம் என்ற தமிழ்மரபு, வைதீக கடவுள் சார்பு வீடுபேறு அல்லது மறுமையைச் சேர்த்துக்கொண்டதால் வடிவிழந்தது.

சாரகசம்கிதை வடமொழியிலமைந்த மருத்துவம் பற்றிய இலக்கண நூல். ஆனால் இது கருத்து முதற் கோட்பாட்டிற்கு(கடவுள்--மறுமை)எதிரான கருத்துக்களைக் கொண் டுள்ளதாம். அதாவது அறம், பொருள், இன்பமே மாந்தரின் மனவிருளைப் போக்க வல்ல மாமருந்தென்றும், இதைக் கடைப்பிடித்து இயற்கை(ஆயுர்வேதம்) மருத்துவம், இலக்கணம்(பேச்சுக் கலையின் வரைவிலக்கணம்), யோகம் பற்றிக் கற்றறிந்தாரொடு பழகவேண்டும் என்றும் கூறுகிறதாம். இது வேதத்திற்கு எதிரானதும், நிகரானதுமென்பர்.

கௌடில்யர் கருத்துப்படி மெய்யியலி(தத்துவத்தி)ன் உள்ளீடு ஒருபொருளை முறையாகப் பகுத்துப் பார்த்து விளங்கிக்கொள்வதும், அளவையியல்(தர்க்க) வாயிலாக நிறுவுவதுமாகும் என்பார். இவற்றைக் கொண்டிருப்பவை சாங்கியம், யோகம், உலகாய்தம் மட்டுமே. இவற்றை ஆய்வுசெய்த அறிஞர் சட்டோபாத்தியாயா சிறப்பியலும் (வைசேடிகம்), அளவையியலும் (நியாயம்) தனித்தனியாகப் பிரியு முன்னர் இருந்த நிலையே யோகமென்பார். இச் சாங்கிய, யோக, உலகாய்த(உலகை ஆய்பவர்கள்) கூட்டு இணைவே "அறிவுஆராச்சியியல்" அல்லது வடமொழியில் "ஆன்வீக்சீகி" எனப்படுகிறது. கௌடில்யர் இதற்கும் த்ரயி(திரயி) என்ற வேதத்திற்கும் உள்ள வேறுபாட்டைச்சுட்டி மெய்யியலென்பது பகுத்தறிவுத் தன்மையையும், மதசார்பற்ற தன்மையையும் கொண்டதென்பார்.

இப்பகுத்தறிவு மனிதநேயக் கோட்பாடுகள் இந்திய கங்கைக் கரையிலே தோற்றம் கொண்டதெனப் பலர் புலம்பித்திரிந்தனர், இன்றும் புலம்புகின்றனர்(அடிமைத்தனத்தின் வெளிப்பாடு). ஆனால் இவை வேதங்களுக்கு முற்பட்டவையென்றும், ஆரியரல்லாதார்க்கு உரியவையென்றும் அறிஞர்கள் ஆய்ந்துரைத்தனர். இதில் கார்பேயின் கூற்றைச் சட்டோபாத்தியாயா குறிப்பிடுவார். அத்தோடு இன்றுள்ள சாங்கியத்துள் வேதத்திற்குச் சார்பான இடைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருகல்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருப்பதாகவும் கூறுகின்றார். வைதீக வேதப் பார்ப்பனர்களின் செல்வாக்கிற்கும் ,அவர்களின் தன்மைக்கும் தமிழ்மண் இடம் கொடுக்கவில்லை என்பதை இங்கே உருவாகிய இலக்கியங்களின் அகப்புறச் சான்றுகள் உறுதி செய்யும். சட்டோபாத்தியாயா சிறப்பிய(வைசேசடிக)ம், அளவையியல்(நியாயம்) ஆகிய யோக மெய்யியலாகக் கருதினாலும், அறிஞர்கள் சிறப்பியம் பக்குடுக்கை நன்கணியரின் அணுக்கோட்பாட்டிற்கு உரியதென்கின்றனர்.

கி.மு.6ஆம் நூற்றாண்டில் புதிதாகத் தோற்றம் பெற்றதுதான் "ஆசீவகம்" என்ற மெய்யியல்க் கோட்பாடாகும். இது பக்குடுக்கையாரின் அணுக்கோட்பாடு, பூரணகாசிபரின் தற்செயல் அல்லது வினை மறுப்புக்கோட்பாடு, மற்கலிகோசலரின் வாழ்வியற் கோட்பாடு ஆகியவற்றின் ஒன்றிணைவே "நல்வாழ்க்கை" எனப் பொருள் தரும் "ஆசீவக"மாகும். இந்த சாங்கிய, ஆசீவகக் கோட்பாடுகளுக்குப் பக்குடுக்கையாரின் புறநாநூற்றுப் பாடல்194ஐ மேற்கோளாகக் காட்டுகின்றனர்.

**ஓர்இல் நெய்தல் கறங்க ஓர்இல்**
**ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்**
**புணர்ந்தோர் பூஅணி அணியப் பிரிந்தோர்**
**பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்**
**படைத்தோன் மன்றஅப்பண்பி லாளன்**
**இன்னாது அம்மஇவ் உலகம்**
**இனிய காண்கஇதன் இயல்புணர்ந்தோரே.**

**பொருள்:**
ஒரு வீட்டில் சாவுப்பறை, இன்னொரு வீட்டில் மங்கள இசையுடன் மலர்மாலை அணிந்து மகிழும் விழா. துணையைப் பிரிந்தவர்கள் துன்பத்தில் வருந்துகின்றனர். இவ்வெதிர் மாற்றங்கள் நிகழக்காரணம் இவ்வுலகைப் படைத்தவனுடைய இரக்கமற்ற செயலே. இன்பம், துன்பம் நிறைந்தது இக்கொடிய உலகம் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் இவற்றிலிருந்து விடுபட்டு உண்மையான இன்பம் எதுவெனக் கண்டறிய முயலுவர்(அதுதான் அறம், பொருள், இன்பத்தைக் கடைப்பிடித்தல்- தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் சுட்டுவது). இதுதான் பொருள் முதற் கோட்பாட்டின் வரைவிலக்கணம். இப்பக்குடுக்கையார் இந்தியா முழுமையிலும் மாணாக்கர்களைக் கொண்டிருந்தவர். புத்தர், மகாவீரர் ஆகியோரைவிட அகவையால் மூத்த வருமாவார். இவரை வடமொழி நூல்கள் கணியாரா, பக்குடக்காச்சானா பக்குடுக்கக்காச்சாயனா எனவும் குறிப்பிடுகின்றன.

நல்வாழ்க்கை என்ற ஆசீவகத்தின் ஊழியலுக்கு அறிஞர்கள் கணியன் பூங்குன்றனாரின் பு.நா.நூ.192 பாடலைச் சுட்டுவர்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
**இன்னாது என்றாலும் இலமே மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ ஆனது**
**கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

எல்லாம் எம்மூர், எல்லோரும் உறவினர்கள். கெடுதலோ, நல்லதோ நமக்குப் பிறரால் உண்டாவதில்லை. வருத்தமும் அது தணிந்த மகிழ்வும் ஏனையவும் தாமாகவே வருவன. பிறர் தருவதில்லை. உயிர்கள் (மாந்தன்) தோன்றிய நாட்தொட்டு மரணம் தொடர்கதை. எனவே வாழ்வு இனிமையானதென்றோ அல்லது வருத்தமுடையதென்றோ அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. உயிர், பெய்யும் மழை ஆறாய் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடும்போது அதில் சிக்கிய தெப்பம் போல் அலைந்து தன்வழி செல்வதை பலரும் அறிந்து தெளிந்து உணர்ந்துள்ளனர். எனவே பெருமைக்குரியவர் என்று ஒருவரைக் கண்டு வியப்படைவதோ, சிறியவரென்று இகழ்வதோ இல்லை. இது உலகத்து இயற்கை(ஊழ்).

கடந்த நூற்றாண்டில்வாழ்ந்த வெண்டல் வில்கி என்ற அமெரிக்க எழுத்தாளன்தான் உலகம் முழுமைக்கும் ஒரே படைவரிசை, ஒரே நீதிமன்றம் என்ற உலகக் கனவு கண்டான். ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எல்லாம் எம்மூர், எல்லோரும் எம்முறவினர் என்ற மாபெரும் மாந்த அன்பை(நேயத்தை) முழங்கினான் தமிழன்(விலைமதிக்கமுடியாத கோட்பாடு). ஆனால் இன்றோ தெருவோரம் வீசியெறியப்பட்ட கல்லாயிருக்கின்றான்.

இவை மாத்திரமா? ஐம்பூதக் கோட்பாட்டை உற்றுநோக்கினால், இது தமிழருக்குரியதாயும், இலெமூரிய எனப்பட்ட இந்திய மாவாரியில் அமிழ்ந்துபோன குமரி பெருநிலப் பரப்பிலே அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பிய தமிழர் தம் அறிவியற் கோட்பாடு. தொல்காப்பியர் இவ்வுலக அமைப்பை,

**நிலம்தீ நீர் வளி விசும்போடைந்தும்**
**கலந்த மயக்க முலக மாதலின்**

என்பார்.

இச்சிறப்புக்கோட்பாடு மறுமையை, வீடுபேற்றை, கடவுளை மறுத்த முழுமையான அறிவியற் கோட்பாடு. சாங்கிய, யோக, உலகாய்த கோட்பாடுகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைக்கும் இதுவே காரணம். இவ்வைம்பூதத்து இயற்கையை கணியன் பூங்குன்றனாரின் புறநாநூற்றுப்பா 2: 1-- 6

**மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலை இய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பொருபூதத்து இயற்கை போல எனச் செப்பும்.**

இந்த இயல்புக் கோட்பாட்டை இயல்பு அளவையியலை "சுபாவ வாதம்" என்பர் வடமொழியாளர். அண்டம், உலகு, உயிர் ஆகியவற்றின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து அறிந்தவர்கள் இக்கோட்பாட்டினர். ஐம்பூதங்கள் பற்றிய ஆய்வை பூதவாதமெனவும், உலகம் பற்றிய ஆய்வை உலகாய்தமெனவும், பத்து அழகுகளோடும், தந்திர உத்திகளோடும் இனிமையாகப்பேசித் தம்கோட்பாடுகளை நிலைநாட்டியவர்களை திறமைச் சொற்பொழிவாளர்கள் என்றும்(சார்வாகர்) எனவும் இவர்கள் குறித்துள்ளனர். இவர்களே உயர்ந்தோராக வாலறிவர்களாகப் போற்றப்பட்டனர். தமிழ் மரபில் இவர்களை ஐந்திரராகப் புகழ்ந்தனர். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனும் பனம்பாரனாரின் கூற்றும் இங்கு எண்ணத்தகும்.

உயிர் நீராலும், மனம் உணவாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு நெருப்பாலும் (உணவை உட்கொள்ளும்போது உடலாகிய பொறி இயங்கிப் பெரும் ஆற்றலை வெளிவிடும்) அமைவன என்பதை உணர்ந்து கொண்டால் அதுவே உயிர் வளர்ச்சியின் அடிப்படை. இதுதான் பொருள் முதற்கோட்பாட்டின் மூல ஊற்று. இதையே சேக்கிழார் பெருமான் தந்த பெரிய தொன்ம(புராண) 10ஆம் திருமறையாகிய திருமந்திரத்தில் திருமூலர் அழகுறச் செப்புகின்றார்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**இடம்பட மெஞ்ஞானம் சேரவுமாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

(திரு.724) என்றும்

**உடம்பினை முன்னர் இழுக்கென்றி ருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புள்ளே உத்தமன் கோயில்**
**கொண்டானென்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே**

(திரு.725) என

பொருட்செறிவையும், பிறப்பின் சிறப்பையும், இவ்வுடலைப் பேண வேண்டிய முதன்மைக் காரணியையும் சிறப்புறத் துலக்குகின்றார். இங்கே ஊறுபொருள் என்றதும்,உத்தமனென்றதும் உணவால் ஏற்படும் மீபெரும் ஆற்றலையேயாகும். ஆக திருமூலரும் ஒரு பொருள்முதல் கோட்பாட்டாளரே. உணவின் பெருமையை அதன் உற்பத்திக்கு மூல ஊற்றாயிருக்கும் நீரின் பெருமையை தமிழ் மரபில் வள்ளுவர் விளக்கும் பாங்கு முற்றான அறிவியலாகும். திருக்குறளின் வான்சிறப்பு அதிகாரம் முழுமையும் நீரியல் சார்ந்த அறிவியலாகும். இதைச் சங்க இலக்கியப் புற நாநூற்றுப்பாடல் 18: 18-30இல்

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே**
**வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்**
**வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்**
**இறைவன் தாட் குஉ தவாதே அதனால்**
**அடுபோர்ச் செழிய இகழாது வல்லே**
**நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண்தட் டோரே**
**தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.**

எனக்கூறும்

இப்பாடல் முழுக்க முழுக்கப் பொருள் முதல் சார்பானது. உணவைப் படைத்தோரே உயிரைப் படைத்தோர் என்கிறது. உயிரும், உயிரில் அறியப்படும் உணர்வும் உடலைச் சார்ந்த ஐம்பூதக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தவை. உடல் காணத்தக்கதாய் இருப்பதால் அது உண்மையானது எனக்கொண்டனர். இன்றுவரை இந்த உடலை மெய்யென்றே வழங்குகின்றோம். இயங்கியல் என்பது சரியான கருத்தில் பொருட்களின் அடிப்படையிலுள்ள முரண்பாடுகள் பற்றிய ஆய்வாகுமென்பார் லெனின். இதை இயங்கியல் உட்கருவெனக் குறிப்பிடுவதுமுண்டு.

இந்த முரண்பற்றிக் கூறவந்த தொல்காப்பியம் மொழியிலும் "பொருளிலும் முரணுதல் முரணே" என்பார். இதற்கு உரைகண்ட பேராசிரியர் முரண் அல்லது பகையெனப்பட்டது சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ளேயுளம் வெளியேயும் இருக்குமென்பார். பொருளென்பது முரண்பாடுகளுக்கும், எதிரும் புதிருமான தன்மைகளுக்கும் இடையேயான ஒற்றுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதின் விளக்கமாகவும் அமைந்துள்ளது. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமுமென்றிவையிழுக்கு நெறியின்றி இதுவாகித் திணைக்குறிப் பொருளானது பொதுவாயி நிற்றல் பொருள் வகையென்ப. மேற்குறித்த தொல்காப்பிய முரண் வரிகளில் பொருளொற்றுமையை பொதுமையை விளக்குவதைக் காணலாம். இப்பேரண்டம் பொருட்களின் சேர்க்கையே எனக்கூறி எல்லாவற்றிற்கும் பொருளே அடிப்படைக்கோட்பாடாகி, பொருள் முதல் வாதம் எனப்பட்டது. இதுவே இயங்கியல் எனப்பட்டது. நிகழ்வுகளே காலமாகவும், இடமாகவும் முதற்பொருளாக வகைப் படுத்தபட்டுள்ளது. எனவே பொருளியல் நிகழ்வுகளின் சார்பின்றி இடமும் காலமும் நிலவ முடியாது. இடமும் காலமும் இன்றி இருத்தலென்னும் மாயை(கருத்து முதல் கோட்பாட்டாளர்களின் கொள்கை) இடம்பெறமுடியாதென்பதை சிந்தனையாளர் ஏங்கல்சு மறுத்துரைப்பார்.

இடத்தினதும் காலத்தினதும் பண்புகள் இயங்கும் சடப்பொருளைச் சார்ந்தவை என்ற கோட்பாட்டின் வரையறுப்பை 21ஆம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சி உறுதிசெய்கின்றது. எல்லாப்பொருட்களின் வளர்ச்சியிலும் முரண்பாடு இருக்கின்றது. இந்த வளர்ச்சிப்போக்கில் தொடக்கம் முதல் இறுதிவரை முரண்பாடுகளின் இயக்கமொன்று இருந்துகொண்டே இருக்குமென்பார மாசேதுங் அவர்கள். அத்தோடு எடுத்துக்காட்டாக போரில் முன்னேறுதல், பின்வாங்குதல், வெற்றியடைதல், தோல்வியடைதல் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை, ஒன்றின்றி மற்றையது நடைபெற முடியாது. இவை வளர்ச்சியை முன்தள்ளிச் சிக்கல்களைத் தீர்க்கிறது. இக்கோட்பாட்டின் சிறந்த இலக்கணமாக வெளிப்பட்டு நிற்பது தொல்காப்பிய பொருளிலக்கணமாகும். அகத்திணையின் புறனாக புறத்திணையும், அகத்திணையுள் களவின் முரணாக கற்பும் அமைத்திருப்பதைக் காணலாம். தொல்காப்பிய இயங்கியலை ஆயும் அறிஞர் குணா அவர்கள்

**நோயும் இன்பமும் இருவகை நிலையில்**
**காமங் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடையது போல் உணர்வுடையது போல்**
**மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு**
**புணர்ந்தும்**
**சொல்லா மரபின் அவற்றொடு கெழீச்**
**செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரியவாக**
**உவம வாயிற்படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபால் கிளவி**
(தொ.பொரு.*1142*)

என்னும் வரிகள் முரண்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் இயங்கியல் சிறப்புடையவை எனப் பாராட்டுவார். பொருட்களின் இயக்க வடிவங்கள் பற்றிய அறிவுத்துறையை வளர்த்தது தமிழர் கோட்பாடாகிய சாங்கிய மெய்யியலாகும்.

எதிர் நிலைகளின் ஒற்றுமையை வாழ்வியல் நெறியாகவும் மெய்யியல் கோட்பாடாகவும் யாத்தபெருமை பக்குடுக்கை நன்கணியரையே சாரும். இருளின்றி பகலில்லை என்பதைப் போல இன்னாமையின்றி இனிமையில்லை. உலகின் இயற்கை என்பதே இன்னாமைதான். அதாவது இடும்பை(துன்பம்) நிறைந்தது. எனவே துன்பத்தைக் கண்டு யாரும் கலங்க வேண்டியதில்லை. துன்பத்தில் இன்பத்தைக் காணுங்கள் என்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னா தம்ப இவ்வுலகம்**
**இனிய காண்கிதென் இயல்புணர்ந்தோரே.**
(புறம் 194: 6-7)

எனவே இன்னாமையிலிருந்து இனிமையைப் பிரிக்க முடியாதென்ற இயங்கியல் கருத்து முழுமைபெற்று நிற்பதை இப்பாடல் தெளிவுபடுத்தும். பக்குடுக்கையார் ஓர் சிறந்த கருத்து (கடவுள்) முதற்கோட்பாட்டு மறுப்பாளர். முரண்பாடுகளின் ஒற்றுமை யை அடிப்படையாகக்கொண்ட ஊழியலென்ற நல்வாழ்கை(ஆசீவக)க் கோட்பாட்டை வகுத்து அளித்தவர்களில் ஒருவர்.

தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவர். ஐந்திரம் பேச்சுக் கலையையும்(அளவை யியல்), அணுவியலையும் உள்ளடக்கிய ஒன்று. தொல்காப்பியரின் உயிர்களின் தோற்றம் சாங்கியத்தைத் தழுவியும், அறவோர்(தாபதர்) பற்றிய இலக்கண நெறியைச் சார்ந்தும், பேச்சுக்கலையின் இலக்கணமாகிய தந்திர உத்தி உலகாய்தக் கோட்பாட்டின் அடிப்படையினுள்ளும் அமைந்துள்ளன. சாங்கிய, யோக, உலகாய்த தமிழ்மரபின் பொதுப் பெயராக ஐந்திரம்(ஆன்வீக்சீகி) அமைந்திருப்பதைக் காணலாம். முரண்பாடு என்னும் தமிழர் இயங்கியற் கோட்பாடு அதன் முழுவீச்சிலும் தொல்காப்பியம் முழுவதிலும் விரிந்து கிடக்கிறது. தமிழர்தம் சிந்தனை மரபில் உருவான அணுவியலென்னும் சிறப்பியலின் (வைசேடிகம்) மூலச்சுவடுகள் அனைத்தையும் கூட தொல்காப்பியம் தன்னுள் அடக்கியுள்ளது எனவே தமிழரின் வாழ்வியலுக்கும், மொழியியலுக்கும் மட்டுமே உரிய இலக்கணமாக தொல்காப்பியத்தைக் கொள்ளாமல் தமிழர் போற்றிய மெய்யியலுக்குரிய(பொருள் முதற் கோட்பாடு-- இயங்கியல்) இலக்கணமாகவும் கொள்ளும்பொழுது உலக கிரேக்க பொருள் முதல்வாத வரலாற்றிலும் தமிழினம் உயர்ந்து நிற்பதைக் கண்டுகொள்ள முடியும்.. தொல்காப்பியம் மட்டுமா? தமிழர்களின் உயர்உச்சிகளான சங்க இலக்கியங்கள், திருக்குறள் போன்றனவும் தமிழர் தம் இயங்கியலை துலக்கி நிற்பவையாகும்.

*வாழ்க தமிழ்!*
*வளர்க பகுத்தறிவு!!*
*மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளைக் காணவில்லை

வினோத்
வட்டகச்சி

*என் வருங்காலக் கனவுகளை*
*வசந்தகால நினைவுகளை*
*வீட்டு வாசலில்*
*புதைத்து விட்டு*
*புழுதிபடிந்த சாலையில்*
*குருதிபடிந்த காலத்தில்...*

*பள்ளிக்கால நினைவு*
*பதுங்கு குழியில் மறைவு*
*முள்ளிக்கரைகாலம்*
*அள்ளித்தந்த சோகம்*
*எண்ணித்தினம்*
*சாகும்*
*என் பிஞ்சு உள்ளம்*
*அதில் வேகும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

ச. கம்சானந்தி
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கனகபுரம்

ஐம் பெரும் காப்பியங்களில் முதன்மை யான காப்பியம் சிலப்பதிகாரம். காற் சிலம்பை மையமாகக் கொண்ட தமிழர் களின் நாகரிகம், பண்பாடு, சமயம், சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த கருத்துக் களின் கருவூலம் இது. இளங்கோ அடிகளால் இயற்றப் பெற்று, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் கொண்டமைந்து. "முத்தமிழ் காப்பியம்" என்று போற்றப்படுகின்றது. கண்ணகி, கோவலன், மாதவி ஆகிய சாமானியர்களை கதைக்கருவாக கொண்டது.

சோழவள நாட்டின் முக்கிய நகர்களில் ஒன்று பூம்புகார். காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயருக்கு ஏற்றாற் போல் கரைபுரண்டோடும் காவிரியும், பூஞ் சோலைகளும் நிறைந்த நகரம். அந்த நகரத்தில் வணிக பரம்பரையினர் மாசாத்துவான், மாநாய்கன் என இரண்டு வணிகர்கள். செல்வத்திலும், தருமத்திலும் ஒருவரையொருவர் சளைத்தவர் அல்லர். மாசாத்துவான் மகன் கோவலன். அவனுக்கு வயது பதினாறு. விரிந்த மார்பும், அகன்ற தோள்களைமுயுடையவன் மாநாய்கனின் மகள் கண்ணகி கண்களால் சிரிப்பவள் பருவம் மலர்ந்து மணக்கும் பன்னிரு வயது இருவருக்கும் திருமணம் நிச்சயமாகி திருமணநாளும் வந்தது. சங்கு, முரசு, மத்தளமும் முழங்கியது. வெண்குடைகள் சூழ்ந்து வர, மன்னன் உலா வருவது போல் மங்கலநாண் (தாலி) நகரெங்கும் ஊர்வலமாக சென்றது. மணமண்டபத்தை அடைந்தது. வேதநெறிப்படி அந்தணர்கள் சடங்குகள் ஆற்ற மந்திர கோசமும் மங்கல இசையும் பின்னணியா இருக்க கண்ணகி - கோவலன் கைப்பிடித்து அக்கினி வலம் வந்தனர். வாழ்த்துக்கள் குவிந்தன. திருமணம் இனிதே நிறைவு பெற்றது.

வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந் தனர். கோவலன் - கண்ணகி கவிதை அரங்கேறிக் கொண்டிருந்தது. கோவ லன் கண்ணகி என்னும் கவிதை யை ஒவ்வொரு சொல்லாகப்படித்து அப்பொ ருளை அனுபவித்து பின்னர் ஒன்று சேரப்படித்தான். கவிதையின் நயம் மீண்டும் மீண்டும் படிக்கத்தோன்றியது. இன்பமாய்ப் பல இரவுகள் கழிந்தன. கண்ணகியும் சிறப்பாக இல் வாழ்க்கை நடத்தினாள். விருந்தினர் உபசரிப்பு, மூத்தவர்களுக்கு மரியாதை கொடுத்தல், உறவுகளோடு ஒன்றாக கூடியிருத்தல் போன்ற குடும்பநலப்பண்புகளோடு கோவலனையும் ஒரு குழந்தையாக பராமரித்தாள்.

ஆண்டுகள்சிலவும் உருண்டோடி விட்டன. வாழ்வில் புயற்காற்று வீசி யது. சூறாவளி போல் சுழன்றடித்து இனிய வாழ்வை சிதைத்து விடும் என எதிர்பார்க்கவே இல்லை. ஒரு சம்பவம் நடந்தது. ஆண்களுக்கு ஒரு சம்பவமாக இருக்கலாம். பெண்களின் வாழ்வில் சரித்திரமாகிவிட்டது.

மாதவி என்பவள் பிறந்தது "கணிகையர்" என அழைக்கப்படும் தாசிகுலத்தில் இந்திரனின் சபையை அலங்கரித்த ஊர்வசியின் மரபில் தோன்றியவர்கள். இவர்கள் மிகப்பெரிய பணக்காரர்களையும் வசப்படுத்தும் நுணுக்கங்களை நன்றாக அறிந்தவர்கள் மாதவியின் தாய் அவளின் அரங்கேற்றத்தை சந்தர்ப்பமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி சோழமன்னனுக்கே வலை வீசினாள். குறித்த நாளில் அரங்கேற்றம் நடந்தது. சந்தத்தில் பொருந்திய பொருட்செறிவான பாடல், மனதைக் கொள்ளை கொள்ளும் இசை சிறப்பான பாடல், மாதவியின் அழகு, உடற்கட்டு, அபிநயத்திலும் மேலும் அழகு பெற்றது. சோழன் நடனத்தைக் கண்டு மகிழ்ந்தான். மிக உயர்ந்த முத்து மாலையைப் பரிசளித்தான். புறப்பட்டு விட்டான். மாதவியின் தாய்க்கு ஏமாற்றமாகி விட்டது. அரசன் அவளை (தன்மகளை) அழைப்பான் என்று காத்திருந்தாள். அவன் அரண்மனைக்கு அழைக்காததால் தன் பணிப்பெண்ணை அழைத்து "இந்த மாலையைக் கொண்டு வணிகர்களின் வீதிக் குப்போய்ப் பணக் காரர்களின் இடமாக நின்று கொண்டு " இதன் விலை ஆயிரத்தெட்டுப் பொற் காசுகள் என்றும் வாங்குபவருக்கு மாதவி சொந்தம்" என்றும், கூவி விலை பேசு" என்றாள். இது ஒரு சாதாரண விற்பனை யில்லை. அலட்சியமாக ஆயிரத்தெட்டுப் பொற்காசுகளைச் செலவு செய்கின்ற வசதி, அடையாளம் கண்டு குழிபறிக்கும் முயற்சி . இதற்கு கோவலனே வலையில் வீழ்ந்தான்.

கோவலன் முத்து மாலையை வாங்க முடிவு செய்தான் ஏன்? அந்த பணக்கார இளைஞர்கள் முன்பு தான் ஒரு படி மேலானவன் என்று காட்டிக்கொள்கின்ற துடிப்புமட்டுமல்ல. அதற்கு அப்பாலும் ஒரு காரணம் யார் அந்த மாதவி? அத்தனை பேரழகியா? கண்ணகியைக் காட்டிலும் அழகானவளா? ஆயிரத்தெட்டுப் பொன் கொடுத்து அந்த மாலையையும் வாங்கிக்கொண்டு மாதவியின் வீடு நோக்கிச் சென்றான் கோவலன்.

வீடு சென்றவனை வரவேற்று உபசரித்து, இருவரும் தனிமையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வெளியேறினாள் தாய். மாதவியின் அணைப்பில் கோவலன் சிறப்பு மிக்க தன் குடும்பம், தன்பெருமை, அவனுக்கே உரித்தான அன்பு மனைவி எல்லாம் மறந்து போனான். மாதவியின் படுக்கையறையில் மேகலையின் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது. கோவலனைப் பிரிந்த கண்ணகிக்கோ மாலைப் பொழுது ஏன் வருகின்றது என்றிருந்தது. அலங்காரம், அணிகலன் ஏதுமின்றி வாடிய பூ மாதிரி இருந்தாள். மஞ்சம் மலராக இருந்தாலும், இன்ப உறவுகள் வியர்வையைத் தந்தன. ஒவ்வொரு முறையும் தன் ஒப்பனையைத் திருத்திக் கொண்டாள் மாதவி.

விரைவில் நிகழவிருக்கும் இந்திரவிழா இன்ப உறவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என எவரும் எண்ணவில்லை.

இந்திரவிழாக்காண மக்கள் அணிதிரண் டனர். கோலாகலமான கொண்டாட்டம். மாதவியின் நாட்டி யம் இல்லாமல் புகார் நகரில் ஒரு விழாவா? கண்ணைக்கவரும் ஆடைஅணிகலன்களுடனும், அலங் காரத்துடனும், நாட்டிய மாடினாள். ஆரம்பத்தில் கோவலன் பெருமிதத்துடன் தான் பார்த்துக் கொண்டிருந்தான். சுற்றுப்புறத்திலிருந்த ஆண்கள் பார்வையை அவதானித்த போது பெருமிதம் தேய்ந்து போய் ஆத்திரமாக உருவெடுத்தது. தனக்கு மட்டுமே சொந்தமான மாதவியின் அழகை அவளின் அங்கங்களை, நூற்றுக்கணக்கானஆண்கள் ரசித்தது கோவலனை நிலைகுலைய வைத்தது. வேறு ஆண்கள் பார்வையில் அப்போது அவர்கள் மனதில் என்னவெல்லாம் எண்ணங்கள் ஓடும் என்று கற்பனை செய்து பார்த்த போது துடித்துப்போனான்.

சில ஆண்களுக்குத் தவறான பெண்களின் சகவாசம் இருந்தாலும் தங்கள் மனைவியின் நடத்தை குறித்து பெருமிதம் எப்போதும் இருக்கும். தனக்கு சம்மதித்த பெண் போலவே இவளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் கெட்டவள் என்று மனைவியைச் சந்தேகிப்பது சில ஆண்களுக்கு உரித்தான வழக்கமாகும்.

கோவலனின் மனம் கண்ணகியை எண்ணிப்பார்க்கத் தொடங்கியது. அவள் என்றைக்காவது ஒருநாள் இப்படி சீவிச்சிங்காரித்துக்கொண்டு வேறு ஆண்களின் எதிரில் தோன்றியிருப்பாளா? "பயிர்ப்பு" என்பது குலப் பெண்களிடம் மட்டும் உரித்தான குணம் கணிகையர் குல மாதவியிடம் எதிர்பார்ப்பது அறிவீனம் என்று எண்ணி, உணர்வுகளால் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தவன் . அறிவால் யோசித்தான். எப்போதுமே நாம் உறவுகளையோ நட்பையோ அறிவு கொண்டு பார்ப்போமானால் அப்போது அன்பு வலுவிழந்து போய்விடுகின்றது.

இந்திரவிழாவின் இறுதி நாளன்று கடலில் நீராடுவது புகார்மக்களின் வழக்கம். கோவலனும் மாதவியும் கடற்கரைக்குச் சென்றார்கள். ஊடல் இல்லாமல் காதலில்லை ஊடலின் பின்னர் கூடுவதே இன்பம் என்னும் விதத்தில் கோவலன் ரசிக்கும் விதத்தில் ஆடை அலங்காரம் செய்தாள். மனம் சஞ்சலப்படும் தருணங்களில் இசை இனிய விருந்தாகும் என அறிந்த மாதவி யாழை மீட்டுமாறு கொஞ்சலாகக் கெஞ்சினாள்,

கோவலன் மனமெல்லாம் கண்ணகி இருந்தாள்.காவிரியைப் பெண்ணாகவும், சோழ மன்னனைக் கணவனாகவும் உருவகப்படுத்திப் பாடினான். மனதிலிருந்த உஸ்ணமானது இசைவடிவில் கானல் வரிகளாயின.

உண்மையில் மாதவியும் கோவலனைத் தவிர வேறோர் ஆடவனையும் நினைக் காதவள். தனது ஆற்றாமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக இன்னொருவன் இருப்பது போன்ற அர்த்தத்துடன் பாடினாள். அவள் தொடர்ந்து பாடியதன் அர்த்தங்களை புரியாமல் கோவலனும் ஊடல் கொண்டு பிரிந்தான். கண்ணகி கனவு கண்டாள். நடக்க இருப்பதைக் கனவிலே கண்டுவிட்டாள். கடவுளை வேண்டி நின்றாள். பணிப்பெண் ஓடிவந்து வீட்டு வாசலில் வாடிய முகத்துடன் ஒரு வசீகரமான மனிதர் நிற்கின்றார். பார்ப்பதற்கு ஓவியத்தில் இருக்கும் நம் கோவலனைப்போல காட்சி தருகின்றார் என்றாள். போய்ப்பார்த்தாள். ஏன் வாசலில் நிற்கிறீர்கள். இது நம் வீடு தானே என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்று அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

கோவலன் தவறை உணர்ந்தேன் என்றும் உன்னைக் கைவிடேன் என்று அக்கினி வலம் வந்து உறுதி எடுத்ததை மறந்து விட்டேன் என்றும் கவலை கொள்கிறான். வாழ்வைத் தொடங்குவதற்கு வழியின்மையால் ஒற்றைச் சிலம்பைக் கொண்டு சென்று மதுரை நகரில் காவலர்களால் கொலை செய்யப்படுகிறான். கண்ணகி நீதி நியாயம் கேட்டுத் தன்னிடம் இருந்த மற்றச் சிலம்பைக் கொண்டு தன் கணவன் கள்வன் இல்லை என்று வழக்குரைத்து நிரூபிப்பதையே வழக்குரை காதையாக சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது.

இறுதியில் கண்ணகி தெய்வத்தன்மை பொருந்தியவளாக, காவல்தெய்வமாக, கற்பிற்கு அரசியாக போற்றப்பட்டு சேரன் செங்குட்டுவனால் கோயில்கட்டி வழிபடப்படுகின்றாள். இன்றும் கிராமங் களில் கண்ணகைஅம்மனுக்குப் பொங்கல் பொங்கி, மடை பரவி வழிபடுகின்றனர். மாதவி தனது தவறை எண்ணி மனந்திருந்தி கோவலன் மாதவிக்குப் பிறந்த மகளை "மணிமேகலை" என்று பெயர்சூட்டி துறவறத்தை போதிக்கின்றாள். இறுதியில் மணிமேகலை "மணிமேகலாதெய்வம்" என போற்றப்படுகின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை ஒன்றே போதும்

புவனேஸ்வரன் சுஜந்தன்
கிராம அலுவலர்,
ஆனைவிழுந்தான் குளம்.

அன்று மாலை ஆறு மணியிருக்கும் தங்கத் தாம்பாளம் போல தகதகத்த மாலைச் சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான். குசவன் ரோட்டு வயல் வெளியில் நின்று இவ் அரிய காட்சியை காண்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். நான் அதை ரசித்து நேரத்தைக் தாமதிக்க விரும்பாது எனது மோட்டார் சைக்கிளில் யோகா சுவாமிகள் முதியோர் இல்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். வழமையாக எனது அலுவலகக் கடமைகளை நிறைவு செய்து அந்தி நேரம் அங்கே செல்லும் போது எனக்காகச் சில கடமைகள் காத்திருக்கும். எனக்காகச் சில உள்ளங்களும் காத்திருக்கும். இதில் முதலிடம் பிடித்தவள் அந்தோனியம்மா. ஆம், அவள் எமது இல்லத்தின் முதற் பெண் மணி. எமது இல்லம் மீள ஆரம்பிக்கப்பட்ட போது முதன் முதலாக இணைந்த பெண் முதியோர் அவள். அனைவரிடமும் அன்பும் அக்கறையும் கொண்ட மூத்த தாய் அவள். அவளோடு அருகில் இருந்து நலம் விசாரிக்காவிட்டால் அவள் நீரின்றிவாடும் செடி போல வாடுவதை வெளிப்படையாகவே காணமுடியும். அதனால் முதியோர் இல்லப் பொருளாளர் என்ற எனது கடமைகளோடு அவளோடு ஆற அமர இருந்து நலம் விசாரித்துச் செல்வதும் எனக்குத் தட்டிக் கழிக்க முடியாத கடமையாயிற்று. அவளோடு இருந்து கதைப்பதால் அவளது பார்வை ஒன்றே போது மென்ற திருப்தியை அவளது அன்பான தாய்மை முகம் அனைவருக்கும் ஏற்படுத்தி விடும்.

இலங்கை மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவள். கணவன் அந்தோனி. அவளுக்கு மரியம்மா, மேரி, சந்தனமேரி என்ற மூன்று பெண்பிள்ளைகள். வறுமையோடு போராடி வாழ்ந்தாலும் தமக்குக் கிடைக்கும் வேலைகளைக் கணவனும் இவளும் செய்து குடும்பத்தை நடாத்தி வந்தபோது யூலைக்கலவரம் அவளை இடம் நகர்த்தியது. அவளுக்கு என்று காணி பூமி, சொத்துக்கள் என்று எதுவும் பெரிதாக இல்லா விட்டாலும் வாழ்ந்த மண்ணையும் தொழிலையும் கைவிட்டு குடும்பமாகப் பல்வேறு நலன்புரி நிலையங்களையும் தாண்டி இறுதியாக கிளிநொச்சி 4ஆம் கட்டைப்பகுதியில் புதிய வாழ்க்கை ஒன்றிற்காக குடியேறினாள். ஆனாலும் அது நிலைத்துவிடாது உள்நாட்டு யுத்தம் ஆனைவிழுந்தான் குளத்திற்கு அவளை அழைத்துவந்து விட்டது. அப்போதைய கிராம அலுவலர் அவர்கள் அவளது அகதி வாழ்க்கையை நிறைவுக்கு கொண்டு வருவதற்காக நிரந்தரமாக குடியிருப்பதற்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தார். ஆனாலும் சொந்தக் காலில் நிற்பதற்கு அவளும் கணவரும் தங்களை வருத்தி உழைத்தார்கள். வன்னேரிக்குளம், மணியங்குளம், கந்தபுரம், கரும்புத்தோட்டம் என அவளது காற்தடம் படாத வயல் நிலங்களே இல்லை என்ற அளவுக்குத் தேடித்தேடி உழைத்தாள். கணவனும் வயல் வேலைகளோடு காட்டில் தேனெடுத்தல், விறகு எடுத்தல் போன்ற தொழிலிலும் ஈடுபட்டுத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துக்காக உழைத்து வந்தார்.

வறுமையும் வேலைப் பளுவும் இருந்தாலும் அந்தோனியும் அந்தோனியம்மாவும் தங்களது அன்பைக் குறைய விடவில்லை அந்தோனி வேலைக்கு எங்கு சென்றாலும் மதியம் ஒரு தடவை வீட்டிற்கு வந்துதான் செல்வான்.

"காலம எழும்பி சாப்பாடும் கட்டி யெல்லோ தந்தனான், பேந்தேன் உந்த வெய்யிலுக்கால குடுகுடு எண்டு வாறீங்க" என்று அந்தோனியம்மா கோபத்தில் பேசும் போதெல்லாம்

"உன்னை ஒருக்கா பாத்திட்டு போகனும் எண்டு இருந்திச்சுப் புள்ள, பாத்தாலே என்ர வேலைக் களைப்பு எல்லாம் போயிடும் புள்ள"

என்று அவன் சொல்லுவான். அப்போது வெட்கத்தில் அவள் நாண அப்போது அவளது சுருங்கிய முக தசைகளுக்குள்ளும் கன்னக் குழியின் அழகைப்பார்த்து ரசிப்பான் அந்தோனி.

அந்தோனிக்கும் அந்தோனியம் மாவுக்கும் மூன்று பெண் பிள்ளைகளும் பதின்நான்கு பேரப்பிள்ளைகளும் பத்துப் பூட்டப்பிள்ளைகளும் உண்டு. வம்சத்தின் அரசியாய் வழிகாட்டியாய் வாழ்ந்து வந்தாள் அந்தோனியம்மா.

2008ஆம் ஆண்டு இறுதி யுத்தம் உச்ச மடைய மன்னாரில் இருந்து வந்த மக்கள் வன்னேரிக்குளம், ஆனைவிழுந் தான்குளம் பகுதிகளில் குடியேற சன நெருக்கடியில் திளைத்தது இரு கிராமங்களும். அன்றொருநாள் காட்டில் தேன் எடுப்பதற்காகச் சென்ற அந்தோனி வீடு திரும்பவில்லை. எல்லா இடங்களிலும் தேடித்தேடிக் களைத்துப் போய்விட்டாள் அந்தோனியம்மா. கதறிக்கதறி அழுது திரிந்தாள். தன் பார்வையையே இழந்து விட்டது போல் உணர்ந்தாள். கணவனின்றி வாடினாள். ஆனாலும் தன் பிள்ளைகளுக்காகவும் பேரர்களுக்காகவும் வாழத் துணிந்தாள். காலங்கள் உருண்டோடின. அவளது உடல் நலம் குறைந்து கொண்டே சென்றது. ஆனாலும் எந்தப் பிள்ளைகளுக்கும் தான் சுமையாக இருக்கக் கூடாது என்று எண்ணித் தனியே ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தாள். காலம் செல்லச்செல்ல அவளது எண்ணங்களில் ஏனோ திடீர் மாற்றம் ஏற்பட்டு, தான் முதியோர் இல்லத்திற்குச் சென்று வாழவேண்டும் என விரும்பினாள். அதற்காக நீண்ட நாள் காத்திருந்தாள் அப்போது பெண்கள் விடுதி திருத்தப்படாத காரணத்தால் அவளது ஆசையை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை. சில மாதங்கள் கடந்த பின்னர் முதியோர் இல்லப் பெண்கள் விடுதி திருத்தப்பட்டது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் நினைவுக்கு வந்தாள் அந்தோனியம்மா.

அன்று இரவு 7.00 மணியைத் தாண்டியிருக்கும். இதுவரை அந்தோனியம் மாவின் நினைப்பு வரவேயில்லை என்ற குற்ற உணர்வில் அவளைத் தேடி வேகமாகச் சென்றேன். அவளது வீடு பழைய தகரம் ஒன்றினால் அடைக்கப்பட்டுக் கிடந்தது. மோட்டார் சைக்கிள் கோர்னை ஆவேசத்தில் பலமாக அடித்துக் கொண்டு நின்றேன். பக்கத்து வீட்டு ஐயா வந்து

"தம்பி அவா இப்ப இங்க இல்ல. அடுத்த ஒழுங்கையில் இருக்கிற மகளோட இருக்கிறா" என்றார். அடுத்த குறுக்குக்குச் சென்று மகள் சந்தனமேரி வீட்டிற்குச் சென்றேன். அப்போது ஒரு கதிரையில் தனியே அமர்ந்திருந்தாள் அந்தோனியம்மா. நான் வாசலில் மோட்டடர் சைக்கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விட்டு நடந்து சென்றேன். அவள் என்னையே பார்த்துக் கொண்டு இருந்தாள். ஆனால் எதுவும் பேசவேயில்லை. என் மீது கோபமாக இருக்கிறாளோ? என்று என்னை நொந்தவனாய்,

"என்னம்மா ஒண்டும் கதைக்காமல் இருக்கிறியள்" என்று - கேட்கத்தான் அவளுக்கு அருகில் நான் நிற்பது உணரப்பட்டது.

"ஐயா என்ர பார்வையும் போட்டுது கண்ணும் போட்டுது" என்றாள் அழுது கொண்டு. என்னை நானே சுதாகரித்தவாறு அவள் பார்வை என்று கூறியது அவளது கணவனின் பிரிவு என்பதனை விளங்கிக் கொண்டேன். தேற்றினேன். முதியோர் இல்லத்தில் இணையலாம் என்று கூறினேன் அவள் முகம் மலர்ந்தது.

"நாளைக்கே வாறன் ஐயா. எனக்கு இப்ப துப்பரவாய்க் கண் தெரியாது. நீங்கள் எடுப்பீங்களாய்யா அங்க?" என்றாள்.

நானும் சம்மதம் தெரிவித்து விட்டு வீடு திரும்பினேன். மறுநாள் வழமை போல மாலை 06.00 மணிக்கு முதியோர் இல்லம் சென்ற போது அந்தோனியம்மா அங்கே இணைந்திருந்தாள். அப்போது நிர்வாக உத்தியோகத்தர் என்னை நோக்கி

"இவாவுக்குக் கண் ஒப்பரேசன் செய்தால் பார்வை தெரியுமாம் சேர். நாங்கள் யாழ்ப் பாணம் கொண்டு போய்ச் செய்வமா?" என்று கேட்க நான் மகிழ்ச்சியில் வானத் துக்கும் பூமிக்கும் இடையில் குதித்துக் கொண்டிருந்தேன். "சரி தலைவரிட்டக் கேட்டுட்டுச் செய்வம்" என்றேன்.

தலைவர் முதியோர்களிடத்தே மிகவும் அன்பானவர். நேரிய சிந்தனையாளர். அவரும் அனுமதித்தார். வேலைப்பளு காரணமாக நான்கு நாட்கள் முதியோர் இல்லம் செல்லவில்லை. அன்று மாலை அவசரமாகச் சென்று மோட்டார் சைக்கிளை நிறுத்தும் போதே அந்தோனியம்மா என்னை கண்டு சிரித்துக்கொண்டு இருந்தாள். எனக்கு அப்போது அவளது கண்பார்வை சத்திர சிகிச்சை மூலம் கிடைத்து விட்டது நினைவு வரவில்லை அருகே சென்று

"என்னம்மா சிரித்துக் கொண்டு இருக்கிறியள்"

என்று வினாவ

"இப்ப தான் ஐயா யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரில இருந்து கூட்டி வந்தவையள் என் பார்வை இப்ப கிடைச்சிட்டு

''என்று கண்ணீர் வடித்தாள். எனக்குப்புரிந்தது '' பார்வை ஒன்றே போதும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்றும் நிரந்தரம் இல்லை

கி. சாந்தரூபன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

காலை மலர்கிறது
மாலை மறைகிறது
இன்று நாளை என்று
நாட்களும் கழிகிறது

மாதங்கள் வருடங்களாக
வயசும் எகிறுகின்றது
முடிவிலா குறிக்கோள்களுடன்
வாழ்க்கையெனும் ஓடம்
கடுகதி புகையிரதமென
நாளும் நகர்கிறது.

தேவைக்கு முடிவில்லை
நம்ம வாழ்விற்கு முடிவுண்டு - என
உணர்ந்து வாழ்நாளை என்றும்
மகிழ்வுடன் நாமெல்லாம்

நல்லறம் செய்து நாளும்
பிறருக்குதவி நல்லவை செய்து
நாளும் கழித்திடுவோம்
வாழ்க்கை ஒன்றும்
நிரந்தரமல்ல மனிதா!
வாழ்க்கை என்றும் நிரந்தரமல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை ஓர் உள சமூக நோக்கு

திருமதி ஜோபிடலிஸ் கிஷாந்தினி
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

எமது கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் கழிந்த நிலையில், சம காலத்தில் அதிகரித்து வரும் சமூக பிரச்சனைகளுள் ஒன்றாக தற்கொலை காணப்படுகின்றது.

தற்கொலையென்பது ஒருவர் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது பொது நல ரீதியிலோ தன்னுயிரை மாய்த்துக் கொள்ளும் நிலையாகும். தம் வாழ்வுடன் தொடர்புபட்ட மிக முக்கியமான நபர்களுக்கு, தமது நிறைவேற்றப்படாத உளத்தேவைகளைத் தெரியப்படுத்த எடுக்கும் முயற்சியாக தற்கொலை காணப்படுகின்றது. இயலாமையின் உச்சக்கட்டத்திலும் , பற்றுப்பிடிப்பு அற்ற நிலையிலும் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். சுய வன்முறையின் உச்சக்கட்ட வெளிப்பாடே தற்கொலையாகும்.

உலகம் பூராகவும் 40 செக்கனுக்கு ஒரு தற்கொலையும், 3 செக்கனுக்கு ஒரு தற்கொலை முயற்சியும் இடம் பெற்றவண்ணமுள்ளன. நாள் ஒன்றுக்கு சராசரியாக 3000 தற்கொலைகள் இடம் பெறுவதாகவும் , 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் அதிகம் தற்கொலையில் ஈடுபடுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. ஆய்வுகளின் படி யுத்தங்களில் இறப்பவர்களை விட தற் கொலை செய்பவர்கள்தான் அதிகம். தற்கொலை என்பது இறப்புக்களுக்கான காரணத்தில் 13 ஆவது இடத்தை வகிக்கின்றது. உலக அளவில் தற்கொலை முயற்சியில் அதிகமாக ஈடுபடுவது பெண்கள் ஆனால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு இறப்பது ஆண்கள் தான் அதிகம் என கூறப்படுகின்றது. (அதிகமாக நடுத்தரவருமானத்தை பெறும் நாடுகளிலேயே தற்கொலை மூலமான உயிரிழப்பு நடைபெறுகிறது.

அந்த வகையில் இலங்கையில் வருடத்திற்கு 80,000 பேர் தற்கொலைக்கு முயற்ச்சிக்கின்றனர். இலங்கையில் வருடா வருடம் 30,000 இற்கு மேற்பட்டவர் கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தற்கொலை வீதத்தின் அடிப்படையில் இலங்கையானது. 4 வது இடத்தில் உள்ளது. சர்வதேச அளவில் 28 நாடுகளில் மட்டுமே தற்கொலையைத் தடுப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன ஏனைய நாடுகளில் அவ்வாறான நிலை இயல்பானது.

பண்டைய காலம் முதலே மனிதர்களிடம் தற்கொலை உணர்வு இருந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணமாக சமூக பொருளாதார மற்றும் தனிப்பட்ட உளக்காரணிகளை கூறமுடியும். உளவியல் நிபுணர்கள் தற்கொலை பற்றிய சில சித்தார்த்தங்களை முன்வைக்கின்றனர். எந்தவொரு சித்தாந்தமும் இறுதியானது என்ற நிலையை இன்னும் எட்டவில்லை. உளவியலின் தந்தை "சிக்மண்ட் பிராய்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**
திரு.த.கமலதாசன்(HRDO), திருமதி.க.சுதர்ஜினி(CMA), திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லூரேந்திரன்(Accountant), திரு.ப.பரமோதயன்(DO), திரு.க.மகிந்தன்(DO).

**நிற்பவர்கள் 1ஆம் வரிசை**
திருமதி.கு.சர்மிளா(DO), செல்வி.சோ.மகுடபதி(DO), திருமதி.ஜெ.நிரஞ்சினி(DO), திருமதி.வி.விஜிதா(DO), திருமதி.து.மைதிலி(DO), திருமதி.சி.மைதிலிசிறி(DO), திருமதி.ப.பபீந்திரா(DO), திருமதி.ச.சுதாசினி(DO), திருமதி.பு.மாளவிகா(DO), திருமதி.சி.தமயந்தி(DO), செல்வி.பா.சாமினி(DO), திருமதி.ச.பிரியா(DO).

**நிற்பவர்கள் 2ஆம் வரிசை**
திரு.கி.சாந்தரூபன்(DO), திரு.த.முரளிதரன்(STDO), திரு.க.கவாஸ்கர்(DO), திரு.கா.காந்தீஸ்(DO), திரு.இ.தர்மேந்திரா(DO), திரு.ப.பிரணவன்(DO), திரு.இ.சுதாபரன்(DO), திரு.அ.அருளானந்தன்(TA), திரு.கு.சிறிகுமார்(OES), திரு.ச.கருணாகரன்(DO), திரு.ம.வசந்தன்(DO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் தத்துவத்தின்படி ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு ஆர்வம் இருக்கிறது. தாம் தெரியாத ஒன்றை தெரிந்து கொள்ள புரியாத ஒன்றை புரிந்து கொள்ள இதுவரை அனுபவித்து அறியாத ஒன்றை அனுப விக்க மனிதருக்குள் ஓர் ஆர்வம் வந்து கொண்டிருக்கிறது என்கிறார் அவர்.

நமது மூளையில் சுரக்கும் 'செரடோனின் என்ற வேதிப்பொருள் குறைவாக சுரக்கும் போது மன அழுத்தம் , மன இறுக்கம் போன்றவை ஏற்படுகின்றன. தற்கொலை செய்து கொண்டவர்களின் மூளையை ஆராய்ந்த போது " imipramine receptor sites" குறைவாக இருப்பது தெரிய வந்தது. imipramine recepto என்பது செரடோனின் சுரக்கும் இடங்கள். இந்த செரடோனின் சுரத்தலைத் தூண்டிவிடும் மருந்துகளை கொடுப்பதன் மூலம் தற்கொலை எண்ணங்களைக் குறைக்கமுடியும்.

**தற்கொலை பல வழிகளில் இடம் பெறு கின்றன.**

தற்கொலை செய்து கொள்பவர்களிடம் அதற்கு முன்னதாகவே சில மாற்றங்களை அவதானிக்க முடியும் அவையாவன.

1. ஒருவரின் அடிப்படையான குணாதி சயங்களில் மாற்றம் காட்டுதல் (அதிக கோபம், வெறுப்பு)
2. எதிலும் பிடிப்பின்றி தன்னுடைய குடும்பம் நண்பர்களுடன் தொடர்புகளை பேணாமல் ஒதுங்கி வாழ்தல், தனிமையை நாடல்
3. நாளாந்த கருமங்களில் ஆர்வம் இன்றி வாழ்தல் உதாரணம் கல்வி, வேலை, உணவு உண்ணல், குழந்தை வளர்ப்பு
4. தற்கொலை பற்றியும் மரணம் பற்றியும் அதிகம் கதைத்தல்
5. ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருத்தல், தற்கொலை செய்யப் போவதாக நேரடியாக அச்சுறுத்தல் விடுதல்.
6. மது, போதைப்பொருள் பாவை னையில் அதிகம் ஈடுபடல்
7. குடும்பத்தில் ஏற்கனவே யாராவது தற்கொலை மூலம் இறந்திருத்தல்.
8. வாழ்வு பற்றி சமூகம் பற்றி எதிர் மறையான சிந்தனைகளைக் கொண்டிருத்தல்.
9. தமது உணர்வுகளை வெளியே காட்டிக்கொள்ளாமல் ஒதுங் கியிருத்தல்.
10. பாலியல் ரீதியாக பாதிக்கப் பட்டவர்கள் அதனை சொல்ல முடியாமல் தவித்தல் உதாரணமாக பாலியல் வன்புணர்ச்சி, கருக்க லைப்பு
11. தனிமையில் இருந்து அழுதல் மற்றும் அழமுடியாமல் தவிர்த்தல்.
12. தம்மைப்பற்றி தாழ்வான மதிப்பீடு கொண்டவர். சடுதியான ஆளுமை மாற்றங்களை கொண்டிருத்தல்.
13. அதிகமான சுயவெறுப்பு , குற்ற உணர்வு, வெட்க உணர்வு, கோப உணர்வு தோன்றுதல்.

தற்கொலையை தூண்டும் காரணிகளாக அல்லது அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக குடும்பம் சார்ந்தவை, உறவு ரீதியானவை ,உளம் சார்ந்தவை ,சமூகம் சார்ந்தவை, பொருளாதாரம் சார்ந்தவை, அரசியல் சார்ந்தவை போன்றவற்றை குறிப்பிடமுடியும்.

குடும்ப ரீதியாக பார்க்கும் போது கணவன் மனைவிக்கிடையேயான உறவு பிணக்குகள் சண்டைசச்சரவுகள் , சந்தேக உணர்வுகள் மேலோங்கும் நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை இடம்பெறுகின்றது. கணவன் அன்றி மனைவிக்கு வேறு பாலியல் தொடர்புகள் ஏற்படும் போது அதைத் தாங்க முடியாத துணையும் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். குடும்ப வன்முறைக்கு (Domestic Violence) உட்ப்பட்ட பெண்களும் அவ்வன்முறைகள் அதிகரிக்கும் போது தங்களை அழித்துக் கொள்கின்றனர். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் விவாகரத்துப் பெற்ற பெண்களும் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

உள ரீதியாக பார்க்கம் போது இலகுவில் மனம் புண்படும் தன்மையுடையவர்களே அதிகம் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். சிறிய பிரச்சனையையும் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், தமது பிரச்சினையை கையாளத்தெரியாமல், பிரச்சினையிலிருந்து விடுபட தங்கள் உயிரையே விட்டுவிடுகின்றனர். தங்களைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும் எல்லாப் பிழைக்கும் தம்மையே குற்றவாளியாக நினைப்பவர்களும் இலகுவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். தாங்க முடியாத கோபத்தில் , மற்றவர்களை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் தமக்குத் தாமே தண்டனை வழங்கின்றனர். தமது அன்புக்குரியவர்களின் இறப்பினைத் தாங்கிக் கொள்ள முடியா தவர்கள் தமது உயிரையும் அழித்துக் கொள்கின்றனர். அண்மையில் ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவன் தற் கொலை செய்தமையை தாங்க முடியாமல் மனைவி பிள்ளைகள் தற்கொலை செய்தமை குறிப்பிடத்தக்கது. சிலர் நண்பர்களின் இழைப்பை தாங்க முடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆளுமையுடையவர்கள் (Sensation Seeking Personality) பிறரின் கவனத்தை தம்பால் ஈர்த்துக்கொள்வதற்காக தற்கொலை முயற்ச்சியில் ஈடுபட்டு இறுதியில் தாம் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்பியும் சிகிச்சை பலனின்றி இறந்து போகின்றனர்.

நண்பர்கள் அதிகம் இல்லாதவர்கள், எப்போதும் தனிமையில் இருப்பவர் தமது பிரச்சினைகளை சொல்லமுடியாமல் உறவுகள் இன்றி தனித்து தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

பாதுகாப்பின்மை, குற்றவுணர்ச்சி, அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாத நிலை, இயலாமை , பிறரால் ஒதுக்கிவைடககடபபட்டதாக எண்ணும் தவறான புருந்துகொள்ளல் மன இறுக்கம், அடிக்கடி மாறும் மன நிலை, மனச்சோர்வு என்ற உள ரீதியான மாற்றங்களும் தற்கொலைக்கு காரணமாகின்றது.

சமூகம் சார்ந்து பார்க்கும் போது குறைந்த சமூக உறவாடல் திறன்கள் கொண்டவர்கள் அதிகம் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். இவர்கள் தம்மைத் தாமாகவே சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவர் இதனால் சமுகத்தில் தம்மை இனம் காட்டிக்கொள்ள முடியாமல் மன அழுத்தங்களைச் சந்திப்பர். இவர்கள் பிரச்சனையின் போது அதனை தாங்க முடியாமல் தற்கொலை செய்வர். ஒருவர் மற்றவர்களுக்கு தற்கொலை பற்றிய எண்ணத்தை ஊட்டுதல் (கருத்தேற்றத்தினாலும் Suggestion) இன்னொருவரை தற்கொலைக்கு தூண்டுவர். இது ஒரு நபரால் மட்டுமன்றி திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்கள் செய்தித்தாள்கள் போன்றவற்றாலும் கருத்தேற்றம் நிகழ்கிறது. இதனாலும் தற்கொலை இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி அதிலிருந்து மீள முடியாத நபர்கள் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். தொழிலில் ஏற்படுகின்ற நட்டங்களைத் தாங்க முடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். கடன் சுமைகள் தாங்க முடியாத காரணத்தால் சாதாரமாணவர்ளை விட பெரிய வர்த்தகர்கள் முதலாளிகள் கூட தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

இவற்றை விட மது, போதைப்பொருட் பாவனையால் ஏற்பட்ட நரம்புத்தளர்ச்சி, நாட்பட்ட நோய்த்தாக்கம் கௌர வம் பாதிக்கப்படல், பரீட்சை இலட்சியங் களில் தோல்வி ஏற்படல், வேலையின்மை போன்றவற்றாலும் தற்கொலை இடம்பெறுகின்றது.

தற்கொலையை சமூகத்தில் ஏற்படு வதனை தடுப்பதற்கான வழிகளாக தற்கொலை எண்ணம் உடையவர்களை இனங்காண்டு அவர்களுக்கு உள ஆற்றுப்படுத்தல் மேற்கொள்ள முடியும். தற்கொலை எண்ணம் உடையவர்களுக்கு பிரச்சினை தீர்த்தல் திறன்களைக் கற்றுக் கொடுத்தல் குடும்ப உறவுகளை ஆரோக்கியமாக பேணல், தனிமையை விலக்க உதவிபுரிதல், ஆன்மீகம் சார் விடயங்களில் ஈடுபடுதல், சாந்த வழிகளை கையாளச்செய்தல், விழிப்புணர்வூட்டல், போன்றவற்றை கையாளலாம்.

இந்த வகையில் பெரும்பாலானவர்கள் தமது தற்கொலை எண்ணத்தை மிக நெருங்கியவர்களிடம் மறைமுகமாகவோ நேரடியாகவோ கூறவே செய்கின்றனர் எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் குறித்து எந்நேரமும் அவதானமாக இருப்பதுடன் தற்கொலை ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள் அவர்க ளுக்கு கிடைக்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் அத்துடன் தகுந்த உள ஆற்றுப்படுத்தல் சேவையை நாடுதல் மிகவும் அவசியம். இதன் போது ஒருவர் தனது பிரச்சினையை பகிர்ந்து கொள்ளவும் அப்பிரச்சினையிலிருந்து விடுபடவும் முடிகிறது. இதன்போது வாழ்க்கை மீதான ஒரு நம்பிக்கை கிட்டும். எமது கிளிநொச்சி மாவட்டத்தில் அன்னை இல்லம், வைத்தியசாலை உள மருத்துவ பகுதி, சிறுவர் மகளிர் பிரிவு, (பிரதேச செயலகம், மாவட்ட செயலகம்) போன்ற வற்றில் ஆற்றுப்படுத்தல் சேவையைப் பெறமுடியும்.

தற்கொலையில் ஈடுபடுபவர்களுக்கு கூடுதலாக ஒரு பிரச்சினையை எவ்வாறு ஆரோக்கியமான முறையில் கையாள்வது என்ற விடயம் தெரியாததேயாகும். எனவே இவர்கள் எந்தப் பிரச்சனைக்கும் "தற்கொலை" தீர்வாக அமைய மாட்டாது என்பதை இவர்கள் உணரவேண்டும். எனவே ஆரோக்கியமான பிரச்சினை தீர்க்கும் திறன்களைக் கற்றுக்கொடுத்தல் அதிலிருந்து விடுபடுவதற்கு சிறந்த வழியாக அமையும். இதனால் பிரச்சினை ஆரம்பத்திலே தீர்வுக்குட்படும். இதனால் தற்கொலை எண்ணப்பாடு தடுக்கப்படும்.

பல தற்கொலைகளுக்குக் கணவன் மனைவியிடையே சரியான புரிந்து ணர்வின்மை, பெற்றோர் பிள்ளைகளுக்கான உறவில் காணப்படும் இடைவெளி போன்றவை அடிப்படையாகின்றது. எனவே குடும்ப உறவுகளுக்கிடையே சரியான தொடர்பாடல்கள், கலந்து ரையாடல்கள், பேசித்தீர்த்தல் அன்பு பரிமாற்றம் போன்ற ஆரோக்கியமான வழிகளைக் கையாள்வதன் மூலம் தற்கொலை உணர்வுகளை தடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நண்பர்களை உருவாக்குவதன் மூலம் பலரின் தனிமைப்படுத்தல்களை தவிர்த்துக் கொள்ளலாம். அதாவது மனச்சுமை, மனப்பாரத்தை இறக்கி வைப்பதற்கு ஒரு நல்ல நண்பனையாவது உருவாக்கிக் கொள்ள வேண்டும். பலருக்கு தமது கசப்பான சம்பவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நல்ல நண்பர்கள் தேவை. இவை தவிரவும், தனிமையைத் தவிர்க்க நல்ல பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுதல், நல்ல மனதைக் கவர்ந்த ரம்மிய இசையை ரசித்தல், இயற்கையை ரசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், கவிதை எழுதுதல் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் போன்றனவும் மிகவும் பயனுடையதாக அமையும்

மனச்சுமை நீக்கும் அருமருந்து ஆன்மீகம். பிரச்சினை அதிகமாகும் போது ஆன்மீகத்தில் அதிக நாட்டம் செலுத்துதல் பிரச்சினையை குறைக்க சிறந்த வழியாகும். ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடுதல். இறைபாசுரங்களை மனமுருக பாடுதல், குறைகளை சொல்லி அழுதல் மனப்பாரத்தைக்குறைக்கும். இதன்மூலம் தற்கொலை என்ற எண்ணம் ஏற்படுவதை தடுக்க முடியும். இவை தவிர தியானம், யோகாசனம், யாத்திரைகள் போன்றவற்றில் ஈடுபடுவதனால் மனதினை சாந்தப்படுத்தி தற்கொலை எண்ணத்தைக் குறைக்க முடியும்

தற்கொலை அபாயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல் தற்கொலையை குறைப்பதற்கான சிறந்த வழியாகும். இதனைப் பாடசாலை, பல்கலைக் கழகங்கள் வேலைத்தளங்கள், கிராமங்கள் போன்ற பல்வேறு பட்ட மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பொருத்தமான வளவாளர்களையும் உள ஆற்றுப்படுத்து நர்களையும் பயன்படுத்த வேண்டும். ஊடகங்களும் இது சார்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். இவை தவிர உள மருத்துவர்களும் அதிகமாக உருவாக்க வேண்டும், இதனால் தற்கொலைகளை சமூகத்தில் குறைக்க முடியும். வலியில்லாமல் வாழ்க்கையில்லை, துன்பமில்லாமல் இன்பமில்லை, எந்த காயத்தையும் காலம் ஆற்றிவிடும். எனவே எந்தவொரு பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வாக அமைய மாட்டாது. வாழ்கையை வெல்லும் மனப்பக்குவத்துடன் எதிர்த்துப் போராடினால் வாழ்க்கை சுவாரசியமாகவும், இனிமையாகவும் அமையும். வாழ்வோம் பிறரையும் வாழ வைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**

திருமதி.க.சுதர்ஜினி(CMA), திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லுரேந்திரன்(Accountant).

**நிற்பவர்கள் 1ஆம் வரிசை**

திருமதி.பா.சுதாஜினி, திருமதி.வ.பத்மசாந்தி, திருமதி.கி.பிரியதர்சினி, திருமதி.அ.பாஜினி, திருமதி.வ.சசிலேகா, திருமதி.இ.யாழினி, திருமதி.ரெ.பாரதி, திருமதி.ச.சுதர்சினி, திருமதி.யோ.கிசாந்தினி, திருமதி.து.சாந்தகுமாரி, திருமதி.ஞா.தனுஜா, திருமதி.கே.ஈஸ்வரி, திருமதி.ந.கவுதினி, திருமதி.பி.நகுலாதேவி, திருமதி.ச.யமுனாதேவி, திருமதி.சு.அனுசுயா, திருமதி.அ.குணாதிகா, திருமதி.க.அன்பரசி, திருமதி.அ.தர்சினி.

**நிற்பவர்கள் 2ஆம் வரிசை**

திருமதி.ப.ரஜினி, திருமதி.ர.நித்தியா, திரு.வி.கணேசன், திரு.க.பாலரமேஸ், திரு.கி.வசந்தராஜ், திரு.அ.எமில்ராசா, திரு.சு.பத்மநாதன், திரு.க.பிரகலாதன், திருமதி.ச.கம்சானந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி வந்தோம்?

தமிழ்க்கவி
கிளி நகர்

கிளிநொச்சி நகரின் வாழ்க்கை 1898 இல் கால்கோளானது. அப்போது ஆள்பதியாக இருந்த 'ரிச்வே" அவர்கள் தன் பெரு முயற்சியின் காரணமாக இலங்கையில் விவசாய முயற்சிகளுக்கு தேவையானவற்ரை செய்து நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முயன்றார். இதன் பயனாக முதன்முதலாக நீர்ப்பாசனத் திணைக்களம் என்றொரு அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக கென்றி பாக்கர் என்பவர் இருந்தார். இவரது முயற்சியால் நீர்ப்பாசனத்துக்கென 50,000 ரூபாக்கள் ஒதுக்கப்பட்டது இது தமிழர் பிரதேசத்துக்காகும். உடனடியாகவே கட்டுக்கரைக்குளத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோன்று கனகராயன் ஆற்றின் இருவேறு கிளைகளை இணைத்து கரைச்சியில் ஒரு விவசாயக்குளம் ஆக்கப்பட்டது இரு ஆறுகளின் அணையானதால் இரணைமடுவெனப் பெயர் கொண்ட இக்குளம் 1902ஆம் ஆண்டு பெயர் சூட்டி ஆரம்பிக்கப்பட்டபோது, அதிலிருந்து இருபதாயிரம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத்தைப் பெறும் என்று கணிப்பிடப்பட்டது. (நோத் முதல் கோபல்லாவ வரை க.சி குலரத்தினம். பக்.208,209)

இக்குளக்கட்டின் நடுவே மதில்போன்று ஈயம் காயச்சி ஊற்றப்பட்டிருப்பதாக ஒரு முதியவர் கூறினார். கிளிநொச்சி வனங்கள் அடர்ந்த பகுதியாகும். வனங்களின் நடுவே பாரிய நீர்ப்பாசனக் குளங்களும் விவசாயிகளும் குடியிருக்கிறார்கள்.

அக்கராயனிலிருக்கும் அம்பலப் பெருமாள் சந்தி ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்தியாகும். அந்த நாற்சந்தி மேற்கே வன்னேரிக்குளம் வழியாக முழங்காவில் பூநகரி வீதியைத் தொடும், வடக்கே கந்தபுரம் முற்கொம்பன். நல்லூர் ஊடாக கேரதீவுப்பாதையை தொடும். தெற்கே கோட்டைகட்டியகுளம் தெணியன்குளச்சந்தி, உயிலங்குளமூடாக துணுக்காயை அடையும். கிழக்கே அக்கராயன்குளம் வழியாக திருமுறிகண்டியை கண்டி - யாழ்ப்பாணம் கற்பாதையைத் தொடும்.

நாம் இப்போது வழிபடும் திருமுறிகண்டி பிள்ளையாரும் அவ்விடத்துக்கு வந்தேறு குடிதான். உண்மையில் முறிகண்டிக்குளம் கொக்காவில் அருகே செல்லும் ஐயன்கண்குள வீதியில், புத்துவெட்டுவான் கடந்தால் வரும் கிரவல் வீதியில் ஏறக்குறைய மூன்று மீட்டர் தொலைவில் உள்ளது. அழகிய பெரிய குளமும் அதன் கீழ் நெல் வயல்களும் பெரும் பனைமரச் சோலையும் பழமரங்களும் அதன் தொன்மை சொல்லி நிற்கின்றன. இன்னமும் நகர வாடையற்ற கிராமத்தில் மக்கள் மீன்பிடி, விவசாயம் வேட்டை என்று தன்னிறைவோடு வாழ்கிறார்கள் அதேசமயம் பிள்ளைகள் வெளியே சென்றும் படிக்கிறார்கள். இங்குதான் முறிகண்டிப்பிள்ளையார் பிறந்தார். இந்த மக்கள் வேற்றூருக்கு செல்லும்போது (கால்நடைப்பயணம்) யானைகள் எதிர்படாமல் காக்க இந்தப்பிள்ளையாரையும் கூட்டிச்சென்று பிரதான கற்பாதையில் வைத்துவிட்டுச் செல்வர். முறிகண்டியானும் பேரருள் படைத்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல அக்கராயனிலிருந்து சுண்டிக்குளம் வழியாக யாழ்ப்பாணம் செல்வோர் கொக்காவில் இருக்கும் பக்கமாகத் திரும்பி பழைய பிள்ளையாரை நினைந்து சந்தியில் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்துவிட்டு செல்வது வழக்கமாயிற்று. கால்நடைப்பயணிகள் காலாற அதிலிருந்து சமைத்து உண்டு செல்வதுண்டு. இதனால் முதலில் அதில் ஒரு சாப்பாட்டுக்கடை வந்தது. அந்தக்கடை பலவருடங்கள் இருந்தது அந்தக்கடையருகே யானைக்குட்டி கரடிக்குட்டி, மான்மரைக்குட்டிகள் கட்டியிருக்கும் இவை வேட்டைக்காரரால் பிடித்து வரப்பட்டு விற்பனை செய்யப் படுகிறது என்று என் பூட்டி சொல்வாள். அந்தக்கடை வடைக்குப் பெயர் பெற்றது இலங்கையின் எப்பகுதியிலிருந்து வருவோரும் முறிகண்டி வடையில்லாமல் வீட்டுக்குப் போக முடியாது. அவ்வளவு புகழ்பெற்ற வடை முறிகண்டி வடை.

நாளடைவில் முறிகண்டிக் கிராமப் பிள்ளையார் வந்திருந்த இடத்தில் பழைய பிள்ளையாயும் இப்போது உள்ள இடத்தின் நிரந்தர வாசியாகவும் மாறிவிட்டார். வர்த்தகம் பெருகவே அவ்விடம் நகரமாகி வருகிறது.

1902ஆம் ஆண்டுதான் முதலாவது கார் இலங்கைக்கு வந்தது. அதனை அடுத்து 1916ஆம் ஆண்டுதான் இலங்கையில் புகையிரதம் ஓடியதாக தெரிகிறது. முதல் புகையிரதப் பாதைகள் கண்டிநகரையும் கொழும்பையும் ஏனைய நகரங்களுடன் இணைப்பதாகவே அமைந்தது. கொழும்பு யாழ்ப்பாணம் புகையிரதப்பாதை கற் பாதையை அண்டியதாக அமைந்தாலும் அது சில இடங்களில் குளங்களை நோக்கி வளைந்துள்ளதைக் காணலாம். காரணம் புகைவண்டியானது அக்காலத்தே கரிக்கோச்சி என அழைக்கப்பட்டு வந்தது. நீராவி இயந்திரங்களினால் இவை இழுத்துச் செல்லப்பட்டன. அங்கங்கே நீர் நிரப்பவும் கரியைப் பெறவுமாக இப்பாதைகள் குளங்களை அண்டியதாக அமைக்கப்பட்டது. என்பதுடன் நீர்வழங்கும் குளங்களின் மேற்குளங்கள் எதுவும் நீர்வழங்கும் குளம் வான்போடும்வரை அடைத்தலாகாது என்று ஒப்பந்தங்களும் எழுதப்பட்டுள்ளன. அந்த வகையில் கிளிநொச்சிக் கற்பாதை யையும் புகைவண்டிப் பாதையையும் அண்மித்ததாக கனகாம்பிகைக் குளம் உள்ளது. இக்குளம் இரணைமடுவிலிருந்து வற்றாது பேணப்பட்டு வந்ததாகும்.

1936ஆம் ஆண்டின் காணிகளுக்காக காடுகளை வழங்கி அவற்றைத்திருத்தி பயிர்ச் செய்கையை ஏற்படுத்தும் முயற்சியில் ஆள்பதி றிச்வே காலத்தில் பெருமளவு காணிகள் வழங் கப்பட்டன. கிளிநொச்சியிலும் அரச சேவைகளிலிருந்தோர் இதன் சட்ட திட்டங்களை அறிந்து கொண்டு பெருமளவு நிலங்களைப் பெற்றார்கள். அந்தவகையில் சேர் பொன். இராமநாதன் ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரராயினார். அதேபோன்று இங்குள்ள அரச வேலைகளை குத்தகை எடுத்தவர்களும் நூறாண்டுக்குத்தகையாக பெருமளவு நிலங்களைப் பிரதான வீதியை அண்டியதாக கொள்வனவு செய்தனர். இவை தவிர மத்திய தர வகுப்பாருக்கென ஏக்கர் 50 ரூபாவாக ஒவ்வெருவருக்கும் பத்து ஏக்கர் முதல் நூறு ஏக்கர்வரை வழங்கப்பட்டதாக அறியக்கிடக்கிறது.

யாழ்ப்பாணத்தின் சன அடர்த்தியைக் குறைக்கவும், கிளிநொச்சிப் பிரதேசத்தினது உருவாக்கத்திற்குமாக குடியேற்றப்பட்டாலும் இயந்திரங்கள் அற்ற அக்காலத்தே காட்டுக்கத்தி கோடரி கொண்டு காடுகளை வெட்டவும் பின் மண்வெட்டி கொண்டு கட்டை பிடுங்கவும், மண்ணை சமப்படுத்தி வேளாண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவும் போதிய கூலியாட்கள் இல்லாமல் போனதால் பெரும்பகுதி இன்னும் காடாகவே இருந்தது.

1961இல் பதவியேற்ற சிறிமாவோ அம்மையார் தன்னிறைவுப் பொருளாதார வளர்ச்சிக்கென அரும் பாடுபட்டார். காடாகவே கிடந்த நிலங்களை களனி யாக்க முனைந்தார். முதலில் படித்த வேலையற்றோருக்காக மாதம் 50 ரூபா உபகார நிதி வழங்கப்பட்டது. படித்த வாலிபர்களுக்கான அடுத்த திட்டமாக விசுவமடு, வட்டக்கச்சி, மல்லாவி, வவுனிக் குளம், கல்மடு, முத்தையன்கட்டு,என காணிகள், படித்த வாலிபர்களுக்கு வழங்கப்பட்டது. முதலில் கூட்டாக இவர்கள் விவசாயம் செய்தாலும் காலப்போக்கில் அது சாத்தியமற்றதாயிற்று. இரணைமடு படித்த பெண்களுக்கானது. மிருசுவில் படித்த பெண்களுக்கான காணி வழங்கல்கள் என காணிகள் கிடைத்தன. மிளகாய்ச் செய்கைக்காக குளப் பாசனத்தில் 4 ஏக்கரும், தென்னை பழமரச் செய்கைக்காக 4 அல்லது 2 ஏக்கரும் வழங்கப்பட்டது.

அதனைத் திருத்தி பயிர் செய்ய யாழ்ப்பாணச்சமூகம் முயலவில்லை. வன்னிக் காட்டில் எப்படி வாழ்வது ஆனை புலி ,கடும் வெயில், வன்னிக்காடு வெக்கை என இப்படியே சாக்குப்போக்குச் சொல்லி, யாழ்ப்பாணத்திலேயே இருந்தனர் அரசாங்கம் பிரச்சார நிகழ்ச்சிகளை முடுக்கி விட்டது. வானொலி நாடகங்களும் வீதி நாடகங்களும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின. "லண்டன். கந்தையா" "வெளிக்கிடடி விசுவமடு" ''தணியாத தாகம்'' போன்ற நாடகங்களை குறிப் பிட்டுச் சொல்லலாம்.

கிளிநொச்சி நகரத்தை விட்டு இன்னும் ஆழமான காடுகளிடையே வாழ்க்கை நடாத்தும் மக்கள் அநேகர் முற்கொம்பனைக் கடந்து வனத்துள்ளே இருக்கும் சோலைக் கிராமமும் அத்தகை யதுதான். கால்நடை வளர்ப்பு பிரதானமாக உள்ள இடத்தில் குடிநீர்க்கிணறுகள் மிகக் குறைவு. வேட்டை மீன்பிடி தேன் பாலைப்பாணி உலுவிந்தம்பாணி இலுப்பைப்பாணி இவற்றுடன் வனத்தின் நடுவே உரு களபில் உப்பும் விளைகிறது இவர்களுக்காக. வன்னேரிக்குளத்தின் பின்னே மணியங்குளம் அதற்கும் பின்னே அரை ஏக்கர் நிலத்தில் குடியிருக்கும் மக்களை யுத்த காலத்தில் பார்த்தோம் அங்கே எந்த வசதியுமில்லை வெளியே சென்று கூலி செய்து படுத்துறங்க மட்டும் வீட்டுக்கு வருகிறார்கள்.

பொன்னேரி கிழக்கு மேற்காக அமைந்துள்ளதால் காலை முதல் மாலை வரை சூரியனின் பொற் கிரணங்கள் பட்டு தகதகவென மின்னிக் கொண்டே இருப்பதால் அது பொன்னேரி எனப் படும். பொன்னேரி மருவி பொன்னகரி பூநகரியாகி விட்டதாக பேராசான் சொக்கன் குறிப்பிடுகிறார். பூநகரிவேரவில் கறுக்காய்த்தீவு போன்றவை சோலை கரியாலை, நாகபடுவான் என உள் ஒழிந்திருக்கும் வளமான கிராமங்களும் மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட வரலாற்றுச்சிறப்புகளை தன்னகத்தேக் கொண்டது.

கிளிநொச்சியின் எல்லைகள் காலத் துக்குக் காலம் வேறுபட்டு நின்றதுண்டு. இந்த பூநகரி ஒருபோதில் மன்னார் மாந்தையுடன் சேர்ந்தும் விசுவமடு மாணிக்கப்பிள்ளையார் கோவிலடி வவுனியாவுடனும் திருமுறிகண்டியின் ஒருபுறம் முல்லைத்தீவாயும் ஒருபுறம் கிளிநொச்சியாயும். பச்சிலைப்பள்ளி யாழ்ப்பாணத்துடனும் மாறிமாறி வந்தன. 1984ஆம் ஆண்டு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைகளுடன் கிளிநொச்சி ஒரு தனி மாவட்டமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ஆம் ஆண்டின் இனக்கலவரத்தில் பெருமளவு மக்கள் கிளிநொச்சிக்கு வரவில்லை, அப்போது பாதிக்கப்பட்ட வர்கள் வவுனியாவில் தங்கியவர்கள் போக, ஏனையோர் மீண்டும் தம் சொந்த இடத்திற்கே திரும்பிச் சென்றனர். 1977இல் நடந்த இனப்படுகொலை ஆயிரக்கணக் கானதமிழர்களை நிலைகுலைய வைத்தது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களை தெருவழியாக தமிழர் பிரதேசங்களுக்கு கொண்டு வரவும் முடியவில்லை. அவர்கள் பலாலியில் விமானத்திலும் காங்கேசன் துறையில் கப்பலிலுமாக வந்திறங்கினர்.

அங்கிருந்தே பல தொண்டு நிறுவனங்கள் இவர்களைப் பராமரிக்க ஏற்றுக்கொண்டது. அதற்கான நிலத்தை அரசாங்கம் கையளித்தது. இந்த வகையிலும் இந்த மக்களை சமய நிறுவனமொன்று பொறுப்பேற்றது. மக்களது நன்கொடையைப் பெற்று வீரகேசரி நிறுவனம் 50 குடும்பங்களைப் பொறுப்பேற்றது. இப்படிப் பொறுப்பேற்றவர்களை வீரகேசரி நிறுவனம் புளியங்குளத்தில் குடியேற்றியது. அவர்களுக்கென கைத்தொழில் பயிற்சி, கூட்டுப்பண்ணை என முயன்றாலும் அங்கும் இந்த மக்களுக்குக் கிடைத்தது அரை ஏக்கர் நிலமே.

கிளிநொச்சியில் கற்பாதைக்கும் புகையிரதப்பாதைக்கும் இடையே உள்ள நிலப்பகுதி இந்த மக்களைக் குடியேற்ற சமய நிறுவனம் ஒன்று பெற்றுக்கொண்டது அங்கும் ஆளுக்கு அரை ஏக்கர் நிலமே கிடைத்தது யானை கரடிகள் வந்து பகலிலும் மேயும் கானகத்தில் இவர்கள் கூட்டாகப் பயிர் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். குறித்த சமய நிறுவனம் இவர்களை மதம் மாற்றும் பணியில் தோல்வியையே சந்தித்தது. எனவே அது தன் பணியை இடையில் நிறுத்தியது. பலர் கூலிவேலைக்கு மாறினர்.

முறிகண்டியிலிருந்து இரணைமடுச் சந்திவரை குடியேற்றப்பட்ட மக்களை வனவிலங்குகளிடமிருந்து காப்பாற்ற மதபோதகர் சொன்ன வழி "அனைவரும் பொன்னகருக்கு வாருங்கள் ஆளுக்கு கால் ஏக்கர் நிலத்தில் வீட்டைக்கட்டி நெருக்கமாக வாழுங்கள். வயல் செய்யும் காலத்தில் உங்கள் நிலத்தில் பயிரிட்டுவிட்டு இங்கே வந்து இருங்கள்" என்பதாகும். அல்லாமலும் கனகாம்பிகைக்குளம் பெருகும் போதெல்லாம் இவர்கள் வீடுவாசல்கள் வெள்ளத்தில் மூழ்குவதும் வழமையான நிகழ்ச்சிதான்.

கிளிநொச்சியை இன்று பெரும் ஆபத்து சூழ்ந்துள்ளது. கிளிநொச்சியின் மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சிக்குளமே இந்த பிரதேசத்தின் கிணற்றின் ஊற்றுகளுக்கும் மூலமாகும். இன்று குளத்திற்குள் நாளாந்தம் பல டிப்பர்அளவான மண் கொட்டி நிரப்பப்பட்டு வருகிறது. காணிகளை குளத்துக்குள் அடாத்தாக பிடித்தவர்கள் அதனைச் சுற்றி மதில் எழுப்பியும் வருகின்றனர். கொட்டப்படும் அல்லது வெட்டப்படும் ஒவ்வொரு பொழி மண்ணும் கிளிநொச்சி வாழ் மக்களின் தலையில் கொட்டப்படுவதாகுமஎன்பதை மக்கள் உணரவில்லை. கட் டப்படும் புதிய பஸ்தரிப்பு நிலையமே வருங்காலத்தில் குளமாகிவிடும் அபாயம் தடுக்கப்படவேண்டும். அதுவே எதிர்கால கிளிநொச்சியை வளமாக்கும் வழிகளில் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்

திரு.கு.சிவகுமார்(LO),திருமதி.ச.தமிழினி(ADS),திரு.த.முகுந்தன்(DS),திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லுரேந்திரன்(ACCOUNTANT),திரு.சி.சுரேஸ்(RDO).

நிற்பவர்கள் 1ஆம் வரிசை

திருமதி.கௌ.ஜென்சி(DO), திருமதி.தி.ஆரணி(SSO), செல்வி.இ.லக்சிகா(FI), திருமதி.கௌ.சுகன்யா(DO), திருமதி.சு.விஜயகுமாரி(PO), திருமதி.க.நளாயினி(Satisticalofficer), திருமதி.ஜெ.சுசீலா(DO), திருமதி.யோ.சாருமதி(CO), திருமதி.கோ.பிரசாந்தி(FI), செல்வி.சி.ஜெயமதி(DO), திருமதி.க.ஜென்சி(ECDA), செல்வி.செ.தர்சிகா(DO), திருமதி.யு.கவிதா(WDO), திருமதி.ம.மாதங்கி(CRPA), திருமதி.ச.கவிப்பிரியா(DO),

நிற்பவர்கள் 2ஆம் வரிசை

திரு.கு.ரவிவர்ணன்(DO), திரு.க.சசிகுமார்(DO), திரு.ஜெ.சர்மிலன்(FI), திரு.அ.பிரபாகரன்(SO), திரு.சி.கருணாகரன்(CO), திரு.சி.விஜிதரன்(DO), திரு.ச.கோபிதர்சன்(TO), திரு.தி.கார்த்திகேயன்(CO).

நிற்பவர்கள் 3ஆம் வரிசை

திரு.ச.ரவிசங்கர்(DO), திரு.இ.கார்த்தீபன்(DO), திரு.சி.மயூரன்(YSO).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கப்படுவதால் அது நம் உடல் ஆரோக்கியத்திற்குச் சரியில்லை. "அஜினோ மோட்டோ" கலந்த மிக்சர் உணவுகளும் சனங்களை ஆஸ்பத்திரிக்கு இழுத்துப் போகுது. அந்த நோய்களை வைத்தியர்களாலும் கண்டுபிடிக்கத் தெரியவில்லை.

ஊரெல்லாம் டெங்குக் காய்ச்சல், பூனைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் பரவிக் கொண் டிருக்கு. உங்கள் வீட்டுப் புறங்களைச் சுத்தமாக வைத்திருங்கள், குப்பைகூழங்களைக் கூட்டி எரித்து சுத்தப்படுத்தி வைத்திருக்கவேண்டும். மீறி நடப்பவருக்கு குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒலிபெருக்கியில் சனங்களை மிரட்டுகிறது சுகாதாரத்துறை.

காய்கறி, பழவகை, அரிசி, மா எல்லாவற்றிலும் நச்சுமருந்துகள் சேர்க்கப்பட்டுத்தான் இருக்கின்றன. நெல்லுக்கு மருந்தடித்து வளர்ச்சியைப் பெருக்குகிறார்கள். மஞ்சள் நிறமான கோதுமை மா மருந்துச் சேர்க்கையால் வெள்ளை நிறமாகப் மாற்றப்படுகிறது. கனியாத காய்களுக்கு மருந்தடித்து கனியச் செய்கிறார்கள். சிலர் சிலவற்றைத் தெரிந்து கொண்டும் ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற கோட்பாட்டில் அவைகளையே உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. இதை ஆரிட்டச் சொல்லி அழ முடியும்! நாட்டில் எங்கே திரும்பினாலும் கொடுமையே கூத்தாடுகிறது. அதனால் இயற்கையும் சீற்றம் அடைந்து மழை பெய்யவேண்டிய காலத்தில் வெயிலும் வெயிலுக்கான காலத்தில் மழையுமாகத் தன் இயல்புநிலையை மாற்றிக்கொள்கிறது. இன்றைய நாட்டு நிலையைக் கவனித்தால் வேடிக்கையாக இருக்கு என்று சிரித்தார் சந்திரன் மாஸ்டர்.

"பாணை விறகுப் போறணையில் வேகவைப்பதற்கு விறகு கிட்டத்தில் கிடக்கே? காட்டுப்பக்கம் போய் ஒரு சுள்ளித்தடி முறித்தாலும் பெரிய குற்றம். பக்கத்தில் காடுகளும் இல்லை. சனங்கள் எல்லாம் குடியேறிட்டுதுகள். தூரத்திலிருந்து வாகனம் பிடிச்சும் ஏற்றமுடியாது. அதுவும் பாரதூரமான குற்றம். உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டாள் பூபதி அம்மா. முந்தி என்றால் இப்படியான கட்டுப்பாடுகள் குறைவு. இப்போ கோடு இருக்கிற பகுதியில் அருளப்பு என்று ஒரு யாழ்ப்பாணத்தவர் இருந்தவர். அவரிட்ட மூன்று நாலு லொறி நின்றது. அவர்தான் அப்போது விறகு கொண்டுபோறவர். பெரும் காட்டுப் பகுதிகளாக இருந்த பரந்தன், முறிகண்டி, மாங்குளம், அக்கராயன் போன்ற இடங்களிலிருந்த பெரும் மரங்களையெல்லாம் வெட்டி விறகாக்கி விநியோகம் செய்தவர். அந்தக் காட்டு நிலங்கள் எல்லாம் மக்கள் குடியேறி ஒவ்வொரு ஊர்ப்பெயர்களோடு விளங்குது. அது சந்தோசமான வாழ்க்கை. அது திரும்பி வரவா போகுது? என்று சந்திரன் மாஸ்டர் சொல்லிக் கொண்டிருந்தபோது வீட்டு அறையில் இருந்த கைத்தொலைபேசி ஒலிக்கும் சத்தம் கேட்டது. பூபதி அம்மா அவசரமாக எழுந்து போய் தொலைபேசியை எடுத்து வந்து "போனைக் கையோடு வைச்சுக்கொள்ளுங்கோ" என்று சொன்னால் கேட்கமாட்டியள். என்றபடி கணவரிடம் கொடுத்தாள்.

"இப்போதைய சனங்கள் மாதிரி நானும் போனை கழுத்தில கட்டிக் கொண்டு திரியட்டே" என்று சொல்லிக்கொண்டு தொலைபேசியை வாங்கிப் பேசினார் சந்திரன் மாஸ்டர். அவர் பேசிமுடிந்ததும் "ஆர் பேசினவை" என்று கேட்டாள் பூபதி அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உவன் சண்முகம் யாழ்ப்பாணத்தில இருந்து பேசினவன். வெளிநாட்டுச் சம்மந்தம் ஒன்று வந்திருக்காம். நல்ல இடம் உங்களின்ர ஞாபகம் வந்தது. அதை உங்களின்ர இளைய பேத்தி வைதேகிக்குப் போடலாம் என்று நினைக்கிறன். உங்களின்ர விருப்பம் என்ன மாதிரி என்று கேட்டவன்" என்றார் சந்திரன் மாஸ்டர்.

"அதுக்கு நீங்கள் என்ன சொன்னியள்?"

"எதுக்கும் வீட்டுக்கு வா என்று சொல்லியிருக்கிறன், நாளைக்கு வருவதாகச் சொன் னான்.

போன் பாவனைக்கு வந்ததால் எவ்வளவு நன்மை. இருந்த இடத்தில் இருந்து கொண்டு கதைக்கலாம்" என்று பூபதி அம்மா சொன்னபோது, "ஓமோம் உங்களைப் போன்ற ஆட்களுக்கு இதெல்லாம் வினோதமாகத்தான் தெரியுது. எனக்கு வேடிக்கையாகத் தோன்றுது. எத்தனையோ சின்னஞ் சிறுசுகள் இருந்த இடத்திலிருந்து கதைச்சுப் போட் டுத்தான் பின்னால் அவதிப்படுகுதுகள். எங்களின்ர காலத்தில போன் இல்லாமல் நாங்கள் வாழ இல்லையா இறுதிச் சண்டையில் இடம்பெயர்ந்து ஒவ்வொரு இடமாக மாறிக்கொண்டிருந்த போதெல்லாம் இராணுவம் இன்ன இடத்திற்கு வந்திட்டுதாம் இன்ன இடத்தில் நிற்குதாம் என்றெல்லாம் போன் பேசியா தெரிந்து கொண்டோம். இது சின்ன விடயந்தான். ஆனால் பெரிய உண்மை இருக்குது. இறைவனுக்கு எல்லா உயிரோடும் வியாபித்து இருக்கிறது. அதனால் தான் தூரத்துச் சம்பவங்கள் எல்லாம் எங்களுக்கும் எப்படியோ தெரிந்துவிடுகிறது. போன் பாவனையைப் போல் இன்னும் எத்தனையோ வினோதங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் சொல்லி முடியாது. இவை எல்லாம் விஞ்ஞானத்தால் வந்த விளைவு. விஞ்ஞானம் என்றால் என்ன? இதை ஞானமார்க்கமாகச் சொல்வதானால் எங்களுக்குள்ளே ஐந்து கோசங்கள் அதாவது அடுக்குப் பெட்டகங்கள் இருக்கின்றன. இறுதியாக இருப்பது ஆனந்தமய கோசம். அது தான் ஆன்மாவின் இருப்பிடம். அதற்கு முன்னால் இருப்பதுதான். விளங்கிக் கொள்ள முடியாத புதிர் பெட்டகம். ஆன்மாவுக்குப் பக்கத்தில் அது இருப்பதால் அதிலிருந்து கிளம்பும் சக்தி புதிராக இருக்கிறது. அதற்கு அடுத்துவரும் மனோமய கோசம், பிரான மய கோசம், அன்னமய கோசம் மூன்றையும் சாதாரணமானவர்களும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த உண்மை மெஞ்ஞானிகளுக்குத் தெரியும். எத்தனையோ ஆன்மீக நூல்களைப் படிக்கலாம், பிரார்த்தனை செய்யலாம், பிரசங்கம் பண்ணலாம் அவை எல்லாம் செயல் வடிவம் பெறாது. அதை நமக்குள் நாம் தான் தேடிப் பார்க்க வேண்டும். என்னை அறிந்தால் தான் மற்றவரை அறிய முடியும். இதை நானாகச் சொல்லவில்லை. ரமணரிஷியின் கருத்துணர்வு. இதெல்லாம் உனக்குப் புரியாது என்று சிரித்தார் சந்திரன் மாஸ்டர்.

மறுநாட் காலை பத்து மணி இருக்கும் வழக்கம்போல் சந்திரன் மாஸ்டர் அதே மாமரத்தடி நிழலில் உட்கார்திருந்தார். பூபதி அம்மா பழஞ்சோற்றுக் கஞ்சிப் பாத்திரத்தோடு வந்து அவருக்குப் பக்கமாக உட்கார்ந்துகொண்டு கஞ்சியை ஒரு சிறு பாத்திரத்தில் அகப்பையால் அள்ளி ஊற்றி அவருக்குக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

பழஞ்சோற்று நீருடன், வெங்காயம், பச்சைமிளகாய் அரிந்து போட்டு உப்பும் சேர்த்துக் கலக்கி எடுத்த நீராகாரந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது. பழங்கட்டைகளான அவர்கள் இப்படி. இந்த நீராகாரத்தை விரும்பிக் குடிப்பது வழக்கம். இப்போதைய இளசுகளுக்கு அது குமட்டலைக் கொடுத்தாலும் அவர்களுக்கு அது தேனாமிர்தம். அதே சமயத்தில் புரோக்கர் சண்முகம் அங்கு பிரசன்னமானான்.

வா தம்பி உட்காருங்கோ என்று இருவரும் அவனை உட்கார வைத்தனர்.

"மெய்யே தம்பி, மாப்பிள்ளை எந்த இடம், குடும்பம் எப்படி? என்று தொடங்கினாள் பூபதி அம்மா.

"அவையின்ர இடம் சுன்னாகம், மாப்பிள்ளைக்குத் தகப்பனில்லை, எப்பவோ செத்துப் போனார், தாய் மட்டும்தான். தமக்கைமார் ரெண்டு பேர் இருக்கினம். அவைக்கும் வளர்ந்த பிள்ளைகள் இருக்கு, மாப்பிள்ளை புலம்பெயர்ந்த சுவீடன் வாழ்க்கைதான். வருஷத்திற்கு ஒருக்கால் இங்கே வந்திட்டுப் போவார். அவர் சீதனம் எதையும் எதிர் பார்க்கவில்லை. பெண் வீட்டார் நேர்மையான குடும்பமாய் இருக்க வேண்டும், எதையும் தாங்கி குடும்பத்தை நடத்தக்கூடிய தன்மை இருக்கவேண்டும் என்பது தான் மாப்பிள்ளையின் விருப்பம். அவர்களைப்போல் நீங்களும் எனக்கு நல்லாய்த் தெரிந்த குடும்பம். அதனால் தான் இந்தச் சம்மந்தத்தை இளைய பேத்தி வைதேகிக்குப் போட லாம் என்று நினைச்சனான் என்றான் சண்முகம். நிலத்தைப் பார்த்தபடி கொஞ்ச நேரம் இருந்துவிட்டு மனைவியைப் பார்த்தார் சந்திரன் மாஸ்டர்.

"ஏன் ஐயா பேசாமல் இருக்கிறியள் உங்களுக்கு விருப்பமில்லையா? என்று கேட்டான் சண்முகம்.

"அப்படியெல்லாம் இல்லை மூத்தவள் கௌதமி இருக்கிறாளே" என்று எண்ணிப் பார்த்தேன். வைதேகி பாடசாலைப் படிப்பை முடித்துப் போட்டுப் பட்டப் படிப்பைத் தொடர்வதற்கான சாத்தியக்கூறு இருக்கு. அவளும் தொடர்ந்து படிக்கவேண்டும் என்று தான் விரும்புகிறாள். மூத்தவள் கௌதமிக்கு ஒரு வாழ்க்கை வந்து அமையுதில்லையே என்று எண்ணிப் பார்த்தேன் என்றார் சந்திரன் மாஸ்டர்.

"மூத்தவளுக்கு ஒரு வாழ்க்கை அமையமாட்டேன் என்கிறதே. அது தான் தம்பி எங்களுக்குப் பெரிய கவலையாக்கிடக்கு" என்று பூபதி அம்மாவும் கவலைப்பட்டுக் கொண்டாள்.

"ஐயா கௌதமி ஏற்கனவே கலியாணம் செய்தவ. இது இஞ்ச எல்லோருக்கும் தெரியும். அதை நாங்கள் மறைத்து இதுக்குப் பொருத்தினாலும் இஞ்சத்தையச் சனங்கள் மாப்பிள்ளை வீட்டாருக்கு நுள்ளிக் காட்டிப் போடுங்கள். பிறகு எல்லாம் பிழையாப் போகும். ஐயா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதேயுங்கோஅவவுக்கும் ஒரு நல்ல இடம்வரும்" என்றான் சண்முகம்.

"சா! சா! அதெல்லாம் பிழையான காரியம் எப்பவும் ஒருமனிதன் நேர்மையாக நேர் வழியில் போகவேண்டும். குறுக்குப் புத்திக்கு இடம் வைக்கக்கூடாது. எல்லாம் இந்த உள்நாட்டுச் சண்டையால் வந்த வில்லங்கம். கலியாணம் செய்து அந்தப் பிள்ளை ஒரு மாதங்கூட சந்தோசமாக வாழமுடியவில்லை. அதற்குள்ளே இடம்பெயர்வுகள் வந்து மாப்பிள்ளை குண்டுபட்டுச் செத்துப் போனார்" என்றார் சந்திரன் மாஸ்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தச் சண்டையைப் பற்றிச் எனக்குச் சொல்லாதேயுங்கோ ஐயா. அந்த அவலத்தை நேரில் அனுபவித்து வந்தனாங்கள். கை நிறையக் காசு இருந்தும் சாப்பாட்டுக்கு கையேந்தின சனங்கள் எல்லாம் இப்போ அதை மறந்து போச்சுதுகள். கடந்தவைகளை விட்டுப் போட்டு இப்போ எங்களின்ர அலுவலைப் பார்ப்பம் ஐயா. என்ற சண்முகம் "நான் மாப்பிள்ளை வீட்டாரோடு கதைச்சுப்போட்டு அவர்களை இங்கே கூட்டிக்கொண்டு வாறன்" என்று விடைபெற்றுக் கிளம்பினார்.

பூபதி அம்மாவும் எழுந்து சமையல் அறைப்பக்கமாக நடந்தாள். சந்திரன் மாஸ்டர்மட்டும்தனித்துப்போய்வெறுமை சூழ்ந்த மனதோடு உட்கார்ந்திருந்தார். மடித்துச் சுருட்டியபடி சண்முகம் கையில் கொண்டு வந்திருந்த இன்றைய தினசரிப் பத்திரிகை ஒன்று அங்கே கிடந்தது. அதை எடுத்து மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்தார். எல் லாம் அரசியல் சம்மந்தமான விடயங்களே அதில் காணப்பட்டன.

ஒரு முழுமையான மனிதனுக்கு பாதுகாப்புத் தேவை இல்லை அவன் உயிரைப்பற்றிச் சிந்திக்க மாட்டான். முழுமையான மனிதன் என்றால் யார்?

எப்பொழுதும் சத்தியம் வழுவாத மனமும் தர்ம சிந்தனையும் தன்னலம் கருதாத செயலும் எவனுக்கு இருக்கிறதோ அவன்தான் அவன்.

பத்திரிகையின் அடுத்த பக்கத்தைப் புரட்டினார். நாம் ஒருவழியால் போய்க்கொண்டிருக்கும் போது ஒரு ஓரமாகப் படுத்திருக்கும் நாய் தலையைத் தூக்கி நம்மைப் பார்த்தால் நாம் உற்றுநோக்காமல் அப்பால் போய்விட்டால் சிக்கல் இல்லை. நாய் பேசாமல் படுத்துவிடும். அதைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு நின்றால் அது நம்மைத் துரத்திக் கடிக்கவரும்.

நேர்மையான குணமும் தெளிவான உள்ளமும் நமக்கு இருக்குமானால் எது சரி, எது பிழை என்பது எமக்குத் தெரிந்துவிடும். இதை மக்கள் உணர்ந்துகொண்டால் இனத்திற்கிடையே பிரிவுநிலை தோன்றாது.

இதைவிட்டு, இந்தச் சிறிய நாட்டுக்குள் ஆளை ஆள் சண்டைபிடிப்பதால் நாட்டின் வளம், வளர்ச்சி எல்லாம் குன்றி இயற்கையின் சீற்றத்திற்கும் ஆளாகி நாடே சுடுகாடாகிவிடும் இப்பொழுதும் ஒரு சிலர் மனம் கொந்தளித்துச் சண்டையை விரும்பலாம். சமீபகாலத்தில் நடந்து முடிந்த சண்டையால் நாம் அடைந்த பயன் என்ன? மனத்தூய்மையோடு அமைதியாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதன் மனக்காயம் இன்னும் ஆறாமல், காணாமல்போனோரைக் காட்டுங்கள், நாங்கள் வாழ்ந்த இருப்பிடத்தை மீட்டுத் தாருங்கள், வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவுங்கள் என்றெல்லாம் குரல் எழுப்புவது இன்றும் காணக்கூடியதாய் இருக்கிறது. இது எதனால் வந்தது, உள்நாட்டுச் சண்டையால் வந்த அவலம். இவைகளைப்பற்றி இன்னும் ஏன் இந்த மக்கள் உணர்கிறார்கள் இல்லை? என்ன செய்வது? எல்லாம் காலத்தின் கோலம்.

இப்படி எல்லாம் தனக்குள்ளாக எண்ணி எண்ணித் தலையில் கையை வைத்துக் கொண்டார் சந்திரன் மாஸ்டர்.

"ஏன் யோசித்துக்கொண்டிருக்கிறியள்?" என்றபடி எதிரே வந்து நின்றாள் பூபதி அம்மா. அவள் கையில் சோறு வடித்த கஞ்சிப் பாத்திரம் இருந்தது. "ஒன்றுமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்

திரு.ஆ.இரகுநாதன்(S.S.M), திருமதி.க.புஸ்பா(S.M), திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லுரேந்திரன்(Accountant), திரு.இ.அபராயுதன்(S.M), திரு.வ.தகீரதன்(S.M).

நிற்பவர்கள் 1 வரிசை

திருமதி.வ.சிவகாஞ்சனா, திருமதி.ச.பிறேமினி, திருமதி.பா.நிருஜா, திருமதி.கே.தயாநிதி, திருமதி.ய.வினோபா, திருமதி.செ.மேரி ஹனிதா, திருமதி.பி.ரேணுகா, திருமதி.சு.கிரிஜா, திருமதி.ர.ரொசானி, திருமதி.த.நவசக்தி.

நிற்பவர்கள் 2 வரிசை

திரு.ந.செஞ்சோழன், திரு.ச.சயந்திரன், திரு.அ.திலீபன், திரு.ஜெ.மகேஸ்வரன், திரு.ஆ.சக்திவேல், திரு.சி.ஜெயானந்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி" அதை வாங்கி மெல்ல மெல்லப் பருகத்தொடங்கினார் சந்திரன் மாஸ்டர். நெல் அறுவடை காலத்தில் பூநகரியில் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் சொல்லி மொட்டைக்கறுப்பன் நெல்லை வாங்கிவித்து அரிசியாக இடிப்பித்து வைத்துக்கொண்டு சாப்பாட்டுக்குப் பாவிப்பது அந்தக் குடும்பத்தின் வழக்கம். இரசாயனம் கலந்த உரக்கலவை வீசப்படாமல் விளைந்த நெல்லாகையால் ஆரோக்கியத்திற்கு நல்லதாகவும் சுவைக்கு உகந்ததாகவும் இருக்கும். அதன் சோறு வடித்த கஞ்சிகூட மணம், சுவை நிறைந்ததாக இருக்கும். அதையே அவர்கள் பாவனைப்படுத்தி வந்தனர்.

அன்று திங்கட்கிழமை காலை சந்திரன் மாஸ்டரின் கேற்றடியில் சொகுசு வாகனம் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து முதலில் புரோக்கர் சண்முகம் இறங்கினான். அதைத் தொடர்ந்து மாப்பிள்ளை தயாளன் அவனுடைய தாய், இரண்டு தமக்கைமார்களும் இறங்கினார்கள். இவர்களை வரவேற்று உள்விறாந்தைக்கு அழைத்துப்போய் உட்கார வைத்தார்கள் சந்திரன் மாஸ்டரும் மனைவி பூபதி அம்மாவும்.

மாப்பிள்ளைக்கு வைதேகியையும், வைதேகிக்கு மாப்பிள்ளையையும் அறிமுகம் செய்வதற்காக வைதேகியைக் கொண்டே, பிஸ்கட், குளிர்பானம் போன்றவற்றை வழங்கு வித்து உபசரித்தார்கள். உபசரிப்பு முடிந்ததும் வந்த பெண்கள் பூபதி அம்மாவோடு கதைத்துக்கொண்டிருக்க, தயாளன் எழுந்து வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து சண்முகமும், சந்திரன் மாஸ்டரும் சேர்ந்து மூவருமாக மாமரத்தடிக்கு வந்து உட்கார்ந்துகொண்டனர். அவர்கள் பலதையும் பத்தையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அதேசமயம், அறையில் இருந்த பெண்கள் வெளியே வந்தனர். தயாளனும் எழுந்தான். அவர்களை வழியனுப்ப சந்திரன் மாஸ்டரும் சேர்ந்து வந்து கேற்றடியில் நின்றபோது மாப்பிள்ளையோடு கதைத்துப்போட்டு நாளைக்கு வாறன் என்று சண்முகம் ஓடிவந்து அவர்களிடம் சொல்லிவிட்டுப் போனான். சொகுசு வாகனம் மெல்லெனக் கிளம்பி வேகமாக ஓடி மறைந்தது. சொல்லிப்போனது போல் மறுநாள் சண்முகம் வரவில்லை.

மூன்று நாட்கள் கடந்துவிட்டன. வழக்கம்போல் மாமரத்தடியில் இருந்துகொண்டு, பகவத்கீதையைப் படித்துக்கொண்டிருந்தார் சந்திரன் மாஸ்டர். கைத்தொலைபேசியைக் கொண்டுவந்து, ஆரோ போன் எடுக்கினம் என்றபடி அவர்கையில் கொடுத்தாள் பூபதி அம்மா.

அவர் பேசிமுடித்ததும், "சண்முகம் பேசினவன் வைதேகியைக் கலியாணம் செய்ய மாப்பிள்ளைக்கு விருப்பமில்லையாம். ஆனால், கௌதமிக்கு ஒரு மறு மலர்ச்சியான வாழ்க்கை அமையப்போகுது" என்று சிரித்துக்கொண்டு சொன்னார் சந்திரன் மாஸ்டர்.

"என்ன பிசத்திறியள் சொல்லுறதை விளங்கச்சொல்லுங்கோ" என்றுகேட்டாள் பூபதி அம்மா.

"அவையளுக்கு விருப்பம் என்றால் கௌதமியைக் கலியாணம் செய்யிறன்" என்று மாப்பிள்ளை சண்முகத்திட்டச் சொன்னவராம் என்றார் சந்திரன் மாஸ்டர்.

"கௌதமியை மாப்பிள்ளைக்கு எப்படித் தெரியும்? பூபதி அம்மா கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் எனக்கும் தெரிய இல்லை. சண்முகம் இப்பவாறன் என்றவன். வந்து விளக்கமாகச் சொல்லுறன் என்றான்" என்றார் சந்திரன் மாஸ்டர்.

சற்று நேரத்தால் சண்முகம் வந்தான். அவன் வந்ததும் வராததுமாக என்னப்பா சண்முகம்...... எல்லாம் குளறுபடியாக்கிடக்கு என்று கேட்டார் சந்திரன் மாஸ்டர்.

"நீங்கள் நினைக்கிற மாதிரி ஒரு சிக்கலும் இல்லை. ஒரு சிறு மாற்றம் நடந்திருக்கு அவ்வளவுதான் என்று சண்முகம் சொல்லத் தொடங்கினான் "மாப்பிள்ளை தயாளன் பேருக்கேற்ற மாதிரி நல்லெண்ணம் உள்ளவர். அவர் ஒவ்வொரு வருடமும் இந்த நாட்டுக்கு வந்துபோகும் போது, முதியோர் இல்லம், சிறுவர் பராமரிப்பு நிலையம், கற்பித்தலுக்கு வசதியற்ற ஏழைக் குடும்பங்களுக்கு, வறுமையில் வாடும் விதவைகளுக்கு இப்படி எல்லா வழிகளிலும் சிதைந்துபோன குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் எவ்வளவோ உதவிகளைச் செய்துவிட்டுத்தான் போகிறவர். அந்தவகையில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நேற்று அவர் மூலமாக உணவுகள் வழங்கப்பட்டன. அவரோடு நானும் போயிருந்தேன். அப்போதுதான் அங்கே பணிபுரியும் கௌதமியை அவருக்கு அறிமுகப்படுத்தினேன். கௌதமியின் பண்பாடான நடைமுறைகள் அவரைக் கவர்ந்திருக்கவேண்டும். விளக்கமாக என்னிடம் விசாரித்தார். நான் உங்கள் வாழ்க்கைச் சுருக்கத்தைச் சொன்னதும் வைதேகி படிக்கவேண்டியவள் படிக்கட்டும், அவர்கள் விருப்பப்பட்டால் கௌதமியைக் கலியாணம் செய்யிறன்" என்று தன் மனவிருப்பத்தை என்னிடம் சொன்னார் என்று சண்முகம் சொல்லி முடித்ததும், கேட்டியே "எது நடக்க வேண்டுமோ அது நல்லபடியாகவே நடக்கும்" என்று கீதையில் கண்ணன் சொன்னது இதைத்தான். நாங்கள் எந்த நல்ல காரியத்தை நினைக்கிறோமோ நாங்கள் மட்டுமல்ல ஆராய் இருந்தாலும் நல்லதை நினைத்தால் அது நல்லவையாகவே நடக்கும் என்று மனைவியைப் பார்த்தார் சந்திரன் மாஸ்டர்.

ஒவ்வொரு ஆணுக்கும் புரிந்துணர்வு மனப்பான்மையும் தயாளகுணமும் இருக்குமேயானால் நாட்டில் விதவைகள் என்று யாருமே இருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தால் அகமும் முகமும் மலர கணவரைப் பார்த்தாள் பூபதி அம்மா.

அதேசமயத்தில் மரக்கிளையில் உட்கார்ந்திருந்த குயில்கள் இரண்டு தங்கள் மொழியில் எதையோ பாடிக் கொண்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக் காற்றே தூதுபோ ஒருமுறை

**லி. விங்சன் கௌசிகா**
**கிளிநொச்சி**

வெளிநாட்டுக் காற்றே தூதுபோ ஒருமுறை...!
அகதியிவன் கேட்கிறேன்... தூதுபோ ஒருமுறை....!

முதல் மழைத்துளி விழுந்த தாய்மண் வாசனை
வேண்டுமென்றேன் - தாலாட்டுக்கேட்டு நான்
தூங்க தாய் மடி வேண்டுமென்றேன் -கட்டை மதில்
மீதேறி கதைபேசித் தோள் சாயத் தோழன்
வேண்டுமென்றேன்...!

கண்ணீர் வழிந்திடும் கன்னங்கள் துடைத்திட
அன்புக் கரம் கேட்டுநின்றேன் - தடுக்கி விழுந்தால்
தாங்கிப் பிடித்திட தந்தையை கேட்டுநின்றேன் - தவறுகள்
திருத்திடும் தமையனைக் கேட்கின்றேன்...!

அம்மாவின் கை மணத்தில் அம்மியிலே அரைத்துவைத்த
நாட்டுக் கோழிக் கறியோடு குத்தரிசிச் சோறு தின்ன
ஆசை என்றேன் - கூடிக் கூழ்குடித்து கூட்டமாய்
வாழ ஆசை என்றேன் - கூட்டாஞ் சோறு களியாக்கும்
தம்பி தங்கை ஆசை என்றேன்...!

இத்தனைக்கும் தூதுபோக எவரும் இருந்ததில்லை
இப்போது கேட்கிறேன் - இறந்து விட்டாளாம்
என் அன்னை இறுதிக்கிரியை நான் செய்ய
தாய் மண் செல்ல வேண்டுமென்கிறேன் - தூதுபோ ஒருமுறை...!
வெளிநாட்டுக்காற்றே...! வெளிநாட்டுக்காற்றே.
தூதுபோ ஒருமுறை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகு தமிழில் பண்பான வாழ்க்கை முறை

உமாபாலன் தாரணி
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கரைச்சி.

இன்று உலகம் நிலைபெற்று வாழ்வதென்றால் அதற்குக் காரணம் அறிவொழுக்கங்களில் சிறந்த சான்றோர்கள் வாழ்ந்து வழிப்படுத்தியமையேயாகும். அறிவியல் தொழினுட்ப வசதிகளற்ற அக்காலத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரே ஊடகமாக திகழ்ந்தது இலக்கியமே. பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா, சின்னத்திரை, வலைத்தளங்கள் போன்றவசதிவாய்ப்புக்கள்கூடிய இன்றைய காலகட்டத்தில் சாதிக்கமுடியாதவற்றை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சாதித்திருக்கிறார்கள். அவர்களின் அறக் கருத்துக்கள், அறிவுரைகள் இன்றும் சமூக மேம்பாட்டிற்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றன. நாலடியார், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் இன்றைய வாழ்வோடு பின்னிப்பிணைந்து மக்களை வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான மக்கள் வாழ்க்கையை வழிப்படுத்திய நூல்களில் ஒன்றாக விளங்குவது "ஆசாரக்கோவை" என்னும் நூலாகும். சங்கமருவிய காலத்தில் வந்த அறநூல்களில் ஒன்றான "ஆசாரக்கோவை" நூறு வெண்பாக்களில் ஆசாரநெறியை எடுத்தியம்புகிறது. ஆசாரம் என்பது நல்லொழுக்க நெறியில் நடத்தல் என்று பொருள். உள்ளும் புறமும் தூய்மையுடைமையே ஆசாரமாகும். இந்நூலில் உண்ணல், உடுத்தல் , உறங்கல், நீராடல் முதலியன கூறப்பெற்றுள்ளன. இவையிவை செய்யக்கூடியன, அதனால் இந்த இந்த நன்மைகள் கிடைக்கும். இவையிவை செய்யத்தக்கவை, அவற்றைச் செயின் நிகழும் கேடுகள் முதலியவை தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் "பெருவாயின் முள்ளியார்" என்பவர் ஆவார்.

மக்களிடையே நல்லொழுக்கங்களுக்கு அடிப்படையான ஒழுக்க நெறிக்கு எட்டு விதைகள் இன்றியமையாதன. அவை

**"நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோ**
**டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ**
**டொப்புரவாற்றவறிதல் அறிவுடைமை**
**நல்லினத்தாரோடு நட்டல் இவை யெட்டும்**
**சொல்லிய ஆசார வித்து"**

தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமை, பொறுமை, இன்சொல், எந்த உயிர்க்கும் துன்பம் செய்யாமை, கல்வி, ஒப்பற்ற தன்மையை அறிதல், அறிவுடைமை, நல்ல பண்புள்ளவர்களுடன் நட்புக்கொள்ளுதல் ஆகிய எட்டும் அறிஞர்களால் சொல்லப்பெற்ற ஒழுக்கப் பண்புகளுக்குக் காரணமாகும். இதில் நட்பு என்ற விடயத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் மிக அவதானத்துடன் இருக்கவேண்டும். தகாதார் சகவாசம் குற்றம் செய்யாத ஒரு நிரபராதியைக் கூடக் கொலைக்களத்தில் மாட்டிவிடும். இதனைப் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களின் அருளுரை ஒன்று

"You tell your companion
I tell about you" என்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம அலுவலர்கள்



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்

திரு.சி.சிவனேசன், திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லூரேந்திரன்(Accountant), திரு.ப.சபாரட்ணம்

நிற்பவர்கள் 1ஆம் வரிசை

திருமதி.உ..அல்பிரட்நிலக்சி, திருமதி.செ.விஜிதா, செல்வி.செ.ரஞ்சினி, திருமதி.சி.நீலலோசினி, திருமதி.பா.மஞ்சுளா, திருமதி.சு.சர்மிளா, திருமதி.ய.யசோதாதேவி, திருமதி.ஜ.ரஜீபனா, திருமதி.சு.சாரதாம்பாள், செல்வி.க.விஜிதா, திருமதி.நி.பிரியதர்சினி, திருமதி.ஜெ.விக்கினேஸ்வரி, திருமதி.த.ரவீனா, திருமதி.ஜீ.சத்தியா, திருமதி.மு.ஜெனிற்றா,

நிற்பவர்கள் 2ஆம் வரிசை

திரு.சு.இந்திரன், திரு.த.குணசிங்கம், திரு.கு.துஸ்யந்தன், திரு.சி.யதுகுலன், திரு.வா.ஜயந்தன், திரு.ம.மோகனப்பிரியன், திரு.ச.சுகந்தன், திரு.பு.சுஜந்தன்,

நிற்பவர்கள் 3ஆம் வரிசை

திரு.ஆ.பபிகரன், திரு.நீ.ஜோன்ஜெகநாதன், திரு.க.காண்டீபன், திரு.இ.சத்தியநாதன், திரு.நி.புவிதரன், திரு.இ.அரவிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIVANARUL PRODUCTS

Empowering Vulnerable

சிவனருள் உற்பத்திகள்

Healthy Food, Healthy Life




# சிவனருள் உற்பத்திகள் கம்பனி

பல்வேறு வகையான அனர்த்தங்களின் போது பாதிப்புக்களை எதிர்நோக்கிய மகளீர்களுக்கு நிரந்தர தொழில்வாய்ப்புடன் கூடிய வாழ்வாதாரத்தை வழங்குவதற்கென உருவாக்கப்பட்டு சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைவாக உற்பத்தி செய்யப்படும் எமது தொழிற்சாலையிலிருந்து சுகாதாரமானதும், தரமானதுமான உணவுசார் உற்பத்திகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்....



## எமது உற்பத்திகள்

1. வறுத்த சிவப்பு அரிசி மா
2. சிவப்பு இடியப்ப மா
3. அவித்த கோதுமை மா
4. ஆட்டா மா
5. குரக்கன் மா
6. கடலை மா
7. வறுத்த உழுந்து மா
8. உழுந்து மா
9. நவ போசா
10. தோசை மா
11. ஒடியல் மா
12. யாழ்ப்பாண கறித்தூள்
13. நுண் மிளகாய்த்தூள்
14. துண்டு மிளகாய்
15. சரக்கு கறித்தூள்
16. மஞ்சள் தூள்
17. வாசனைச்சரக்குத்தூள்
18. மசாலாத்தூள்
19. மிளகுத்தூள்
20. இரசத்தூள்
21. சீரகத்தூள்
22. பட்டர் கேக்
23. பழக்கேக்
24. கச்சான் பிஸ்கட்
25. இஞ்சி பிஸ்கட்
26. மடத்தல்
27. பேபி றஸ்க்
28. கல் பணிஸ்
29. மிக்சர்
30. பகோடா
31. மஞ்சள் கடலை
32. பட்டாணிப் பொரியல்
33. கச்சான் அல்வா
34. எள்ளு அல்வா
35. மரவள்ளி பொரியல்
36. நிகழ்வுகளிற்கான உணவு வகைகள்
37. நிகழ்வுகளிற்கான பலகார வகைகள்

## OUR PRODUCTS

01. Roasted Red Rice Flour
02. String Hoper Flour
03. Steamed Wheat Flour
04. Atta Flour
05. Kurakkan Flour
06. Gram Flour
07. Roasted Black Gram Flour
08. Black Gram Flour
09. Nava posa
10. Dosa Flour
11. Otiyal Flour
12. Jaffna Curry Powder
13. Chilli Pieces
14. Chilli Powder
15. Sarakku Curry Powder
16. Turmeric Powder
17. Aroma Powder Mix
18. Spice Powder
19. Pepper Powder
20. Rasam Powder
21. Cumin Powder
22. Butter Cake
23. Fruits Cake
24. Peanut Biscuits
25. Ginger Biscuits
26. Madaththal
27. Baby Rusk
28. Rock Bun
29. Mixture
30. Pakoda
31. Roasted Gram
32. Devilled Dhall
33. Peanut Candy
34. Sesame Seeds candy
35. Cassava Chips
36. Food order for the event
37. Snacks order for the event

சிவனருள் உற்பத்திகள் கம்பனி
7ஆம் வா, உருத்திரபுரம் வீதி,
கிளிநொச்சி
தொலைபேசி: 0212283323/0772771436
மின்னஞ்சல்: sivanarulppl@gmail.com
இணையம்: www.arulproducts.com

சிவனருள் உற்பத்திகள் கம்பனி
திம்பிலி வீதி, புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு
தொலைபேசி: 0213208474/0775991123
மின்னஞ்சல்: sivanarulptk@gmail.com


SLSI ISO 22000 · SLS · HACCP SYSTEM CERTIFIED · Sri Lanka Standards GMP Certified Institution



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



CONSTRUCTION

KARIZMA
CONSTRUCTION

E-mail: Dpirabhu@gmail.com
No 888, Thirunagar, Kilinochchi.

T.P:077 176 3645

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAJA CONSTRUCTION




இல:372, சில்வா வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

No:372, Silva Road,
Vaddakkachchi,
Kilinochchi.

Tel:077 369 7654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுசெய்யப்பட்ட மன்றங்களில் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பின்பற்றிய ஒழுக்கம் இன்றைய அறிவியல் முறையோடு பொருந்தியிருப்பதைக் கண்டால் வியக்கத்தான் செய்கிறது.

காலை துயில் எழல்முதல் இரவு துயிலுக்குச் செல்லும் வரை என்னென்ன செய்வேண்டுமெனக் கட்டளையிடுகிறது.

வைகறைப்பொழுதில் தூக்கத்தினின்றும் விழித்தெழுதல் வேண்டும். தான் செய்யவேண்டிய அறச்செயல்கள் பற்றியும் பொருள் வருவாய்க்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆராய்ந்து செய்தல் வேண்டும். பின்னர் புலர்ந்தால் தந்தையையும் தாயையும் தொழுதெழுந்து செயலைத் தொடங்கவேண்டும் என்பதை பின்வரும் பாடல் கூறுகிறது.

**"வைகறை யாமந் துயிலெழுந்து தான்**
**செய்யும்**
**நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து**
**வாய்வதில்**
**தந்தையும் தாயுந் தொழுதெழுக என்பதே**
**முந்தையோர் கண்ட முறை.**

இவ்வடிகள் படுக்கையைவிட்டெழுந்தபின் செய்யவேண்டியதைக் கூறுகிறது. படுக்கைக்குச் செல்லும்முன் செய்ய வேண்டியவற்றை வேறொரு செய்யுள் விளக்குகின்றது.

**"கிடக்குங்காற் கைகூப்பித் தெய்வந் தொழுது**
**வடக்கொடு கோணந் தலைசெய்யார்**
**மீக்கோள்**
**உடற்கொடுத்துச் சேர்தல் வழி"**

உறங்குமுன் இறைவனை நினைத்து கைகுவித்து வணங்கி வடதிசையாகவும் கோணத்திசையாகவும் தலைவைக்காது போர்த்துக்கொள்ளும் போர்வையால் உடல்மறைத்துப் படுக்கையில் சேர்தல் ஒழுக்கமாகும்.

உண்ணும் முறையைப் பற்றிக் கூறும் போது கசப்பான உண்பொருள் களைக் கடைசியாகவும் இனிக்கும் தின் பொருட்களை முதலாகவும் பிற ஆசையுள்ள உணவுப்பொருட்கள் அனைத்தையும் இடையாகவும் கொண்டு முறைப்படி உண்ணவேண்டும்.

**" கைப்பனவெல்லாங் கடைதலை தித்திப்ப**
**மெச்சும் வகையாலொழிந்த விடையாகத்**
**துய்க்க முறைவகையா லூண்"**

காலை எழுந்தவுடன் செய்யவேண்டிய வீட்டுக்கடமைகளாக வீடுசுத்தம்பெறுமாறு குப்பைகளை நீக்கி, வீட்டுப்பொருட்களை கழுவி, நீர்க்குடங்களில் நீரை நிறைத்து, பூசைச்செம்புகளுக்கு பூச்சூடி பின்னர் அடுப்பினுள் தீயுண்டாக்கி சமையல் தொழிலை மேற்கொள்ளவேண்டும் என்பதை

**" காட்டுக் களைந்து கலங்கழீஇ யில்லத்தை**
**ஆப்பி நீரெங்குந் தெளித்துச் சிறுகாலை**
**நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து**
**இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க**
**நல்லதுறல் வேண்டுவார்"**

இல் வாழ்வை நடத்தும் மகளிர்க்கு இவையிவை செய்யலாகாது என இந்நூல் அறிவுறுத்துகிறது.

**"தலையுரைத்த எண்ணெயா லெவ்வுறுப்புந்**
**தீண்டார்**
**பிறருடுத்த மாசுணியுந் தீண்டார் செருப்பு**
**குறையெனினுங் கொள்ளாரிரந்து"**

தன் அழகு கெடாமலிருக்க-

**"மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள்**
**கோலமும்**
**தம்மொளி வேண்டுவார் நோக்கார்**
**பகற்கிழவோன்**
**முன்னொளியும் பின்னொளியு மற்று"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் ஒளியையும் எரிந்து விழும் விண்மீனையும் பார்த்தல் கூடாது, விலைமாதர்களின் அழகில் ஈடுபடக் கூடாது. காலைக்கதிரவன் ஒளியையும், மாலைக்கதிரவன் ஒளியையும் கண்ணால் காணக்கூடாது.

நீராடும்போது என்னென்ன செயல்களைச் செய்யவேண்டுமென எடுத்தியம்புகிறது இந்நூல்.

**"நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்**
**நீந்தா ருரியார் திரையார் விளையாடார்**
**காய்ந்ததெனினுந் தலையொழிந்தாடாரே**
**ஆய்ந்த அறிவினவர்"**

ஒழுக்க நெறியில் நின்றவர்கள் நாளும் குளிக்கும்போது தண்ணீரில் நீந்த மாட்டார்கள். நீரை வாயில் கொப்பளித்து உமிழமாட்டார்கள், நீரை கலக்கம் செய்யமாட்டார்கள். நீரில் விளையாட மாட்டார்கள், உடல் வெப்பக்கடுப்பின் காரணமாக நோய்ப்பட்டிருப்பினும் தலைக்கு முழுகாமல் உடல் நனைத்துக் குளிக்கமாட்டார்கள் .

முறையாக உணவு கொள்ளக் கூடியவர்கள்தம் பசியை ஆற்றிக் கொள்ளமுன்பு பிறருக்குக் கொடுத்து பின்னர் தாமுண்பார். ஒழுக்கம் தவறாத சான்றோர் வயது முதிர்ந்த பெரியோர்க்கும் பசுக்களுக்கும் பறவைகளுக்கும், பிள்ளைகளுக்கும் கொடுத்து பின்னரே தாமுண்பர். இம்முறை இன்றும் வழக்கிலிருப்பதைக் காணலாம். இக்கருத்தமைந்த பாடல்

**"விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை**
**இவர்க்கண் கொடுத்தல்லால் உண்ணாரே - என்றும்**
**ஒழுக்கம் பிழையாதவர்.**

உண்ணும் பொழுது ஒருமனதுடன் உண்ணவேண்டும். வேறு செயல்களில் சிந்தையைச் செலுத்தி உண்ணுதல் உடல் நலத்தை கெடுத்துவிடும். சினம், வெறுப்பு முதலாயின விஞ்சியிருக்கும் போது உண்ணுதல் கூடாது. முறையற்ற வேளையில் உணவருந்தினால் செரிநீர் சுரக்கப் பெற மாட்டாது. உணவு உடலில் சேராது.

ஆசாரத்தைப் பின்பற்ற இயலாது விலக்கானவர்கள் யாரென ஆசாரக் கோவையின் இறுதியில் விளக்கப் பெற்றுள்ளது.

**" அறியாத தேயத்தான் ஆதுலன் மூத்தோன்**
**இளையான் உயிரிழந்தான் அஞ்சினான் உண்பான்**
**அரசன் தொழில் தலைவைத்தான் மணாளனென்று**
**ஒன்பதிமர் கண்டீருரைக்குங்கால் மெய்யான**
**ஆசாரம் வீடு பெற்றார்"**

அறியாத அயல்நாட்டவரும், வறுமையில் உழன்று பசிக்காக வருந்துபவரும், மறதி உடல் சோர்விலிருந்த முதியவரும், பகுத்துணர இயலாத சிறார்களும், உயிர்போன பிணமும், அஞ்சும் இயல்புடையவனும் மிகுந்து உண்பவனும், அரசனது கட்டளைகளைத்தாங்கி செயற்படுபவனும், மணமகனும் என்றும் ஒன்பதின்மரும் மிகுந்த ஒழுக்கத்தினின்றும் நீங்கியவர்களாவார்.

இதில் கூறப்பட்ட ஒரு சில பண்புகள் இக்காலத்திற்கு பொருந்தாதெனினும் அக்காலத்தில் அவை கட்டாயமாக மக்களால்கடைப்பிடிக்கவேண்டியிருந்தன. அக்காலத்தில் கூட்டுக்குடும்பவாழ்க்கைக்கு ஏற்றவகையில் நடுவில் ஒரு சிறிய முற்றமும் நான்குபக்கங்களில் அறை களும் கொண்ட "நாட்சார்" வீடுகள் கட்டி வாழ்ந்தார்கள். பேரனும் பேத்தியும் விளையாடுவதைப் பார்த்து மகிழும் பாட்டன் பாட்டி தமக்கு கண் தெரியாவிட்டாலும் பொல்லுத்தடிகளைகையில்வைத்து தட்டிக்கொண்டிருந்தனர். அப்படியொருநிலை இன்றிருந்தால் எமது பச்சிளம் பாலகர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி அழிவதி லிருந்து ஓரளவாவது காப்பாற்றப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மூதாதையினர் சிறந்த பண்பான நாகரிகமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்கு சான்றாக சுமைதாங்கி, வீதியோரங்களில் கால்நடைகள் தாகம் தணிப்பதற்கான நீர்நிரப்பும் பரவலான தொட்டி, சாலைகளில் போவோர், வருவோர்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றின் எச்சங்களை யாழ்ப்பாணம், தீவுப்பகுதிக ளிலுள்ள பழைய ஊர்களில் இன்றும் காணலாம்.

எனவே மனிதனின் அகப்புறத்தூய்மையை ஆதாரமாகக் கொண்ட பண்புகளை ஒழுக் கப்பண்புகளே நம் முன்னோர்கள் அருஞ்செல்வங்களாக போற்றிக்காத்து வாழ்ந்திருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்தைக் காதல் செய்

வளவை வளவன்
அறிவியல் நகர்

மனிதனை மனிதனால்
மதிக்காத மனிதர்க்கு
விலை என்ன சொல்லு மனிதா?
இனிமை தமை மறுத்து
கற்பிதங்கள் சூட்டுபவர்
கசடனாய்க் கொள்க மனிதா

மனிதத்தின் மாண்பினை
மாசாக்கிப் பணி செய்வோனை
மனிதனாய் கொள்ளலாமா?
மனிதனை மனிதனாய்
ஏற்காத மனிதனை
மாமேதை என்பதழகோ?

கற்சிலைக்கு ஆயிரமாய்
கற்பிதங்கள் செய்தாலும்
அற்புதங்கள் ஆவதில்லையே.
பொற்புடைய மனிதத்தை
மதிக்காத மனிதர்கள்
விற்பனர்கள் என்பதில்லையே!

மொழி வழி மாந்தரை
இழி வென்றுரைப்பதால்
மொழி வழி இனம் வாழுமா?
இழிவான மனங்கொண்டு
மொழி வழி பகுப்போர்கள்
கீழோர் என்பதுண்மையே!

மனிதத்தை காதல் செய்
மனிதத்தை பேணிவாழ்
மனிதமே தழைக்கும் இங்கு
கனி விட்டுக் காய் கொள்ளும்
நிலைவிட்டு
மனிதத்தை காதல் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**
திருமதி.பி.யசோதினி(S.M), திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லுரேந்திரன்(Accountant), திரு.ஆ.இரகுநாதன்(SSM).

**நிற்பவர்கள் 1ஆம் வரிசை**
திருமதி.க.தபோதினி, செல்வி.சு.டனுசியானி, திருமதி.சி.ரேணுகா, திருமதி.கி.சர்மிளா, திருமதி.வி.நந்தபாலினி, திருமதி.ஜ.நேசமலர், திருமதி.சு.ரஞ்சிதமலர், திருமதி.அ.மலர்விழி, செல்வி.ஆ.சத்தியவாணி, திருமதி.த.ஜசி, திருமதி.அ.துளசிகா, திருமதி.சி.ரோகினி, திருமதி.கு.சங்கீதா, திருமதி.பி.கோகிலவாணி, செல்வி.சி.குயிசின்சி, திருமதி.சே.சமன்லதா

**நிற்பவர்கள் 2ஆம் வரிசை**
செல்வி.சி.துஷ்யந்தி, திருமதி.அ.மரியதயாழினி, திருமதி.ச.தவமலர், திருமதி.த.நிசாந்தி, செல்வி.த.மயூரா, செல்வி.ந.ஜனனி, திருமதி.ரு.யசோதா

**நிற்பவர்கள் 3ஆம் வரிசை**
திரு.த.காந்தி, திரு.சி.ஜெயதீபன், திரு.மா.அரிதாஸ், திரு.கு.புஸ்பாகரன், திரு.சீ.கலைவாணன், திரு.செ.யியந்தரூபன், திரு.சூ.கனீசியஸ், திரு.இ.ரஜிந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் அன்றும் இன்றும்

கலாபூஷணம்
சி. வ. ஏழுமலைப்பிள்ளை
மலையாளபுரம்

பண்டைத் தமிழன் பண்பாட்டில் முதல் பங்கு வகிப்பது ஆயகலைகளே. இது பாமர மக்களின் சமயச் சடங்கு மற்றும் வைபவங்களின் போது பொழுது போக்கு அம்சமாகவும், மகிழ்ச்சியாகவும் உருவாக் கப்பட்டதுதான். ஆடலும் பாடலும் காலத்திற்குக் காலம் வளர்ச்சியடைந்து வரும் உலகில், ஆடல், பாடல், கூத்து, கும்மாளம் என்று உருவாகி கலை வடிவம் பெற ஆரம்பித்து வரலாறு படைத்தது. 17ஆம், 18ஆம், நூற்றாண்டுகளில் ஈழத்தி ருநாட்டில் நாடகமும், கூத்தும், இசையும் இசை நாடகமும் கோலோச்சியது.

ஈழ நாட்டின் கலை வரலாற்றில் கூத்துக்கள், நாடகங்கள், இசைநாடகங்களை அரங்கேற்றி ஆதி காலத்தில் மரபுக்கலையை வளர்த்தவர்கள் பாமர மக்களே. அன்று அவர்களை கூத்தாடிகளென்றும், நாடகப் பித்தர்களென்றும், கபாலிகர் கூட்ட மென்றும் ஒரு சார் மக்களால் வசை பாடப்பட்டது.

கால ஓட்டத்தில் பாமர மக்களின் கையிலிருந்த நாடகமும், கூத்தும், இசை நாடகமும் அனைத்து மக்களின் இதயங்களையும் வென்று, வாழ்வியலிலும் இடம் பிடித்து வரலாற்றில் கல்லூரி களிலும், பல்கலைக்கழகங்களிலும் பாட நூல்களாகவும், வெளிவந்தது. நாடகக் கலைக்குக் கிடைத்த பெரு வெற்றியே.

நாடகங்கள் மக்களுக்கு நல்ல கருத்துக் களை பதியச் செய்து, வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒரு அரிய கலையாக மிளிர்கின்றது. இலக்கியங்களிலும் கூட, மன்னர்களும் முத்தமிழாம் இயல் இசை, நாடகம் மூன்றையும் போற்றி வந்துள்ளனர். இவ்வாறு போற்றி வளர்க்கப்பட்ட கலைகளுள் நாடகமானது 1700 களில் தமது முன்னோர்களால் பாடல்களாய் இசைக்கப்பட்டு வந்துள்ளது.

இக்காலப் பகுதியில் பல நாடகங்களும் நூலுருவில் வெளிவந்துள்ளன. இந்த சிருஷ்டி கர்த்தாக்கள் பரமானந்தர் கந்தப்பிள்ளை, நல்லூர் ஆறுமுக நாவலரின் தந்தையான ப.கந்தப்பிள்ளை, மேலும் க.குமாரசாமி முதலியார், வட்டுக்கோட்டை நாகேசையர், கண பதி ஐயர், மானிப்பாய் சுவாமிநாதர், வல்வெட்டித்துறை குமாரசாமி, சுதுமலை வ. இராமலிங்கம், என்பவர் நாடக ஆக்கங்களை வெளியிட்டனர்.

உழைத்து ஓய்ந்தவர்கள் ஓய்வாக பொழுது போக்கவும் , நினைத்ததை நிறைவேற்ற வேண்டுதல் பூசை செய்து இரவு முழுவதும் ஆடிப்பாடி அகமகிழும் கலையே கூத்துக்களாக உருவகம் பெற்றது. ராஜாக்களின்வரலாறுகள், தெய்வ அவதாரக் கதைகள் பெரும்பாலும் கூத்துக்களாக மேடையேறும். மேடைக்கு முன்னால் இரவிரவாக காவோலை கொழுத்தி, பெண்வேடங்களிற்கு ஆண்களும் நடித்து அகமகிழ்ந்து கூத்துக்கலை வளம் பெற்றது. அந்த வகையில் உருவாகியது தான் காத்தவராயன் கூத்து, உடுக்கு இசை, புராண உடை, அரிதாரம் பூசி தாளலயம் தவறாத ஆட்டம் பாட்டு இரண்டு நாட்கள் மேடையில் ஆடப்பட்ட காலம் போய் தற்போது வரலாறு சுருக்கப்பட்டு ஒரு இரவுக்கும் மட்டுப்படுத்தப்பட்டும், மணித்தியாலங்களுக்குள் மேடையேற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து நடைக்கூத்து விசேட கூத்து இசை நாடகங்களாகவும் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களில் கிறிஸ்தவ வரலாற்று வீரக்கதைகளைத் தெரிவு செய்து அகன்ற மேடை, ஒளிரும் உடை, பிரமாண்டமான பொருட்செலவில் அலங்காரம், தாளலயம் தவறாத பாட்டு , ஆட்டம் மேடை முழுவதும் சுற்றி உச்சத்தொனியில் பாடி நாட்டுக்கூத்துக்கு முழுவடிவம் கொடுத்தனர். அன்று நாட்டுக்கூத்து கலைக்கு முழுவடிவம் கொடுத்து அரங்காடியவர் ம.யோசேப்பு (பூந்தான்) என்ற மேதை இன்று நாட்டுக்கூத்துக் கலைக்கு திருமறைக் கலாமன்றம் போன்ற அமைப்புக்கள் உயிர் கொடுத்து வளர்த்து வருகின்றனர்.

இசை நாடகம் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் புராண, இதிகாச, வரலாற்றுக் கதைகளை மையமாகக் கொண்டு இசை வடிவில் மேடை யேற்றப்பட்டு வந்தது. இசை நாடகம் கட்டிய காறனின் கட்டியங் கூறலுடன் மேடையில் தோன்றியது. பின்னர் பபூன் பாத்திரம் ஊடாக பாத்திரங்களை மேடையில் அறிமுகப்படுத்தியும் , அதன் பின்னர் வரகவிப்பாடலுடன் பாத்திரங்கள் மேடையில் தோன்றியும் , இசை நாடகம் வளர்ச்சி கண்டு 1920ம் ஆண்டு காலம் பகுதிகளில் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த நாடகக்குழுவினரும் , ஈழத்தில் இசை நாடகக் குழுவினரும் ஈழத்தில் இசை நாடகம் வளர் நிலை கண்டதில் காத்திரமான பங்கு வகித்தமையை மறுப்பதற்கில்லை. இசை நாடகத்தில் பொதுவாக ஆர்மோனியம் , மிருதங்கம், தாளம், பிற்பாட்டு, இசை அமைப்பு, உடையலங்காரம், ஒப்பனை இராக தாளம் சுருதி தவறாத பாட்டும் பெரும் பங்கு வகித்தது. பெண் பாத்திரத்தில் ஆண்களும் நடித்தார்கள் எல்லோரும் பாடக்கூடியவர்களாகவும் இருந்தனர். தென்னிந்திய நாடகக் கலைஞர்களின் இலங்கை வருகையின் பின்னர் இசை நாடகம் பல வடிவங்கள் பெற்று கோயில்கள், திருவிழாக்கள், நிதி சேர்க்கும் வழிமுறைகளிற்கும் நாடகம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனை மாபெரும் கலையாக, தொழில் சார் வழிமுறையாக சகல மக்களையும் வெற்றி கண்ட பெருமைக்குரிய இசை நாடகக் கலைஞர்கள் பலர் இருந்தாலும் அந்தப்பெருமைக்குரியவர், இசை நாடக மேதை நடிகமணி V.V வைரமுத்து ஐயாவையே சாரும், அவரால் உருவாக்கப்பட்ட வசந்தகான சபா இந்த சேவை மூலம் இசை நாடகத்தை வளர்த்தது, தற்போது அந்தக் கடைமையை பல இசை நாடக மன்றங்கள் செய்து வருகின்றது.

சுருதி தவறாத பாடல், தாளம் தப்பாத ஆட்டம், ஒளிரும் உடை அலங்காரம், ஓங்கார இசையும் கொண்ட தமிழ் கூத்துக்கள் இந்தியாவின் தென்பாகத்தில் இருந்து வந்தமையால் "தென்மோடி" என்றும் வடநாட்டிலிருந்து வந்தமையால் வடமோடி (ஆரியக்கூத்து) என்றும் பேசப்படுகின்றது. தற்போது இக்கூத்துக்கள் கிழக்கு மாகாணத்தில் பேராசிரியர் மௌன குருவினால் வளர்ச்சி கண்டுள்ளது. புதுப்புது அரசாங்க முறைகள் , ஒளி அமைப்புக்கள், ஆட்ட வடிவங்கள், பாடல்கள் அனைத்துமே இன்று மெருகேறியுள்ளது.

நாடகத்தந்தை கலையரசு சொர்ண லிங்கதினால் செழுமையானதாக நிகழ்த்தப்பட்ட நாடக வரலாறு வடபுலகத்தில் அன்று காத்திரமான பங்கை வகித்தது. புராண இதிகாச வரலாற்று நாடகங்களும் வளர்ச்சி கண்டன. வசன நாடகம் பெரும்பாலும் புராண, இதிகாச,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரக் கதைகளை மையமாகக் கொண்டு புனையப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. காங்கேசன் துறை இளந்தமிழர் மன்றம், மாவை முத்தமிழ் கலா மன்றம், கட்டுவன் பாலர் ஞானோதயா மன்றம், அளவெட்டி பாரத நாடக மன்றம், மயிலிட்டி இலங்கேஸ்வரன் நாடக மன்றம், ஏழாலை முத்தமிழ் கலா மன்றம், அரியாலை கலைமகள் நாடக மன்றம் ஆவரங்கால், கிருஸணாலயா நாடக மன்றம், கோண்டாவில், போன்ற நாடக மன்றங்கள் பல வரலாற்று நாடகங்களை மேடையேற்றியுள்ளன. பிரதேச, மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட நாடகப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியும் பெற்றது.

இக்கால கட்டத்தில் சமூக சீரழிவுகளை மையமாகவைத்து, சமூக மேம்பாட்டை வலியுறுத்தி சமூக நாடகங்களும் வளர்ச்சி கண்டன. ஆவரங்கால் பம்பல் நாடக மன்றம், கோண்டாவில் கிருஷ்ணா நாடக மன்றம் இதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

தென்னிந்திய சரித்திர சினிமாப் படங்களுக்கு இணையாக அளவெட்டி பாரதி நாடகமன்றம் "வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும், கோண்டாவில் வாகீஸ்வரி நாடக மன்றம், "அலாவுதீன்", மயிலிட்டி இலங்கேஸ்வரன் நாடக மன்றம் "தாஷ்மகால்" போன்ற சரித்திர நாடகங்களை பிரமாண்டமான செலவில், சுழலும் மேடை, குதிரைகள், மந்திர தந்திர காட்சிகள், திகில் நிறைந்த சண்டைக் காட்சிகளையும் புகுத்தி மேடையேற்றி மக்களின் இதயங்களை வென்றனர். கோவில்கள், திருவிழாக்கள் கொண்டாட்டங்களிலும் மேடையேற்றி புது வரலாறு படைத்தனர். மற்றும் "அடங்காப்பிடாரி", வெளிக்கிடடி விசுவமடு, "சண்டியன் தம்பிப்பிள்ளை" போன்ற சர்வதேசப் புகழ் பெற்ற சமூக சீர்திருத்த நாடகங்களும் இக்கால கட்டத்தில் மேடையேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் வெற்றி பெற்றதை யாரும் மறந்து விட மாட்டார்கள்.

மாவிட்டபுரம் முத்தமிழ் கலாமன்றம் இந்து சமயக்கதைகளை வைத்து வன்தொண்டன் என்ற நாடகத்தையும், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அருளும் மருளும் போன்ற நாடகங்களை மேடையேற்றி அகில இலங்கை ரீதியில் வெற்றியும் பெற்றனர்... ஆங்கிலப்பேராசிரியர் தெல்லோ சோமசுந்தரம் அவர்கள் சேக்ஸ்பியரின் 20 க்கு மேற்பட்ட நாடகங்களை மொழிபெயர்த்து மேடையேற்றி வெற்றியும் கண்டார்...

*1977*க்குப் பின்னர் "பொன்னர் சங்கர்" "காமன் கூத்து, அருச்சுனன் தபசு" போன்ற நாடகங்களும் எம் மத்தியில் காத்திரமான பங்கை வகித்தது. இந்த நாடக வளர்ச்சியின் மகுடமாக கல்விசார் சமூகம் பல்கலைக்கழக மட்டத்திலே "நாடகமும் அரங்கியலும்" *1978* முதல் ஒரு நுண்கலைத்துறையாக உருவாக்கி பல மாணவர்களின் கலைக்கண்ணை அகல விரித்து, ஒரு தூர நோக்குடன் செயல்படுகின்றது. சிதம்பரநாதன் , தாஷீசியஸ் , குழந்தை சன்முகலிங்கம் போன்றவர்களால் நவீன நாடகங்கள், குறியீட்டு நாடகங்கள் உருவாகி இன்று சர்வதேசத்தின் கவனம் எம் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளது. நாடக அரங்குக் கல்லூரிகள் தோன்றி கல்லூரி, பல்கலைக்கழகம் போன்றவற்றில் நாடக அரங்குப்பயிற்சிகள், நாடக ஆய்வுப் பயிற்சிகளையும் வழங்கினார்கள். இந்த வகையில் காலஞ் சென்ற வசாவிளான் வி. எம் குகராசா நவீன நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றியதோடு, பாரம மக்களுக்கும் நவீன நாடகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விழிப்புணர்வை ஏற்ப்படுத்தியுள்ளார் என்பதை யாரும் மறக்கமுடியாது.

சங்கம் மருவிய காலத்தில் சிலப் பதிகார நூலில் கூறப்படுவன வேதியல் - பொதுவியல் என்ற இரு நாடக மரபுகளாகும். பின்னர் குறவஞ்சி, பள்ளு ஆகிய இலக்கிய நாடகங்கள் தோன்றின. நாடகங்கள் மக்களுக்கு நல்ல கருத்துக்களைப் பதியச்செய்து வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒரு அரிய கலையாக மிளிர்கின்றன.

மேடை நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்ச்சி நாடகம், ஓரங்க நாடகம், சமூக நாடகம், சமய நாடகம், சரித்திர நாடகம், இதிகாச நாடகம், இலக்கிய நாடகம், மௌன நாடகம், குறியீட்டு நாடகம் , கவிதை நாடகம் , தெருவெளி நாடகம் , தெருவெளிக்கூத்து, இன்பியல் நாடகம் , துன்பியல் நாடகம், இசை நாடகம், இசையும் உரையும் கலந்த நாடகம், உரை மட்டும் உள்ள நாடகம், கவிதை மட்டும் உள்ள நாடகம், சிறுவர் நாடகம், நாட்டுக்கூத்து, உளவியல் நாடகம், அறிவியல் நாடகம், துப்பறியும் நாடகம், மொழி பெயர்ப்பு நாடகம், நகைச்சுவை நாடகம், என ஆலவிருட்சமாக நாடகம் விழுது பரப்பி வேரூன்றி வியாபித்திருப்பது நிஜமானதே......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிப் பயிலுனர்கள் & பயிற்சித்தர அலுவலர்கள்



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**

திருமதி.ச.தமிழினி(ADS), திரு.த.முகுந்தன்(DS), திரு.ச.பி.அமலராசா(ADP), திரு.ப.லூரேந்திரன்(Accountant).

**நிற்பவர்கள் 1ம் வரிசை**

செல்வி.செ.யோனித்திரா, திருமதி.நி.வின்சிகா(G.T), திருமதி.ம.பிரபாஹினி(G.T), திருமதி.க.விதுஜா(G.T), திருமதி.ம.கினித்தா(G.T), திருமதி.நி.நிரோசா(G.T), செல்வி.அ.டிசாந்தி(G.T), திருமதி.ச.வினோதா(G.T), திருமதி.வி.மஞ்சுளா(G.T), திருமதி.த.கீர்த்திகா(G.T), திருமதி.க.பபிதா(G.T), திருமதி.ரு.ஆன்றெஷ்மியா(G.T), செல்வி.மு.லோஜினி(G.T).

**நிற்பவர்கள் 2ம் வரிசை**

திரு.இ.டிஸ்சாந்தன்(G.T), செல்வி.ஞா.சுவஸ்திகா(C.T), செல்வி.தி.மிதுளா(C.T), செல்வி.ம.ஜிவிஷ்ணா(C.T), திருமதி.க.கிறிஸ்ரீனா(G.T), செல்வி.த.துவாரகா(C.T), திருமதி.கொ.மொறின்சிறோமினி(C.T), திருமதி.கு.சுதர்சினி(G.T), செல்வி.வ.திவியா(C.T), திரு.ம.விஜிதரன்(G.T).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்மாறிச்செல்லும் நுண்கடன் திட்டமும் பரிதவிக்கும் மக்களும்

## நுண்கடன் பற்றிய ஒரு சுருக்கப் பார்வை

**ச. கருணாகரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கரைச்சி.

நுண்கடன் என்பது அரசு அல்லது தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சிறிய அளவிலான பணத்தினை குறிக்கின்றது. "மைக்ரோ கிரடிட்" (Micro credit) Micro - துல்லிய, நுண்ணிய, நுட்பமான, Credit - மீள் செலுத்தவேண்டிய கடன் தொகை என்ற அர்த்தத்தைத் தருகிறது. இக்கடனானது சிறுகடன், சிறுமுதலீட்டுக்கடன், சிறு தொழில் முயற்சிக்கடன், வாழ்வாதார சிறு கடன், இடர்உதவிக்கடன் என பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. "நுண்கடன் என்றால் சந்தை மற்றும் வர்த்தக அணுகுமுறைக்கு உதவும் வகையில் ஏழைகளுக்கு வழங்கப்படும் பலவித பொருளாதார சேவையைக் குறிக்கின்றது. இது சேமிப்பு ஆயுட்காப்பீடு, பணப்பரிமாற்றம் மற்றும் கடன் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்" என்று அமெரிக்க நிபுணர் R.P. கிறிஸ்டன் துறை சார்ந்த விளக்கம் தருகின்றார்.

இத்திட்டத்தின் நோக்கம் பற்றி பெண்களுக்கான உலகவங்கி (Women world banking wwb) பின்வருமாறு கூறுகின்றது. குறிப்பாக கிராமப்புற பெண்கள் ஆடு, மாடு வளர்ப்பு, சிறுவியாபாரம் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் வறுமையை தாங்களாகவே ஒழித்துக்கொள்வதற்கு உதவுவது தான் என்று கூறுகிறது. இந்த நுண்கடன் திட்டமானது இலங்கையில் 40 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்துவந்தாலும் சுனாமி, யுத்த சூழ்நிலைகளுக்குப் பின்னரே பெரிதும் பிரபல்யம் அடைந்துள்ளது. உலக நிறுவனங்கள் இத்திட்டத்தில் முதலீடு செய்ய அதிகளவில் ஏன் முனைகின்றன என நோக்கின் உலகில் நுண்கடன் நிறுவனங்களின் சராசரி கடன் திருப்புதல் திறன் அல்லது கடன் வசூல் திறன் என்பது 95% ஆகும். உலகளவில் சுமார் 10,000 நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவற்றின் விகிதம் ஆபிரிக்க நாடுகளில் 30-90 சதவீதம் ஆசிய நாடுகளில் 30-20 சதவீதம். இது தவிர செயல்முறைக்கட்டணம், சேவைவரி, தவணை தவறிய கடனுக்கு அபராதம், இடைக்காலக்கடன் என பல வழிகளில் 30 முதல் 60 சதவீதம் வரை வட்டி வசூலிக்கின்றன. நுண்கடன் நிறுவனங்களின் இத்தகைய அரசு வளர்ச்சியால் ஈர்க்கப்பட்டுத்தான் சர்வதேச நிறுவனங்கள் இதில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகின்றன.

புள்ளிவிபரங்களின்படி வடக்கு, கிழக்கு உட்பட்ட 12 மாவட்டங்களில் ஒரு இலட்சத்திற்குக் குறைந்த கடனை 75,000 பெண்கள் பெற்றுள்ளனர். அதைத் திருப்பிச் செலுத்தமுடியாது கிளிநொச்சியில் 14 பேரும் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 10 பேரும் மட்டக்களப்பு, திருகோணமலை பகுதிகளில் 19 பேருமாக மொத்தமாக 62 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மிலேனியம் இலக்கை எய்துவதில் சிறுகடன் திட்டத்தை பிரதான கருவியாக பரிந்துரை செய்தது. இத்திட்டத்தால் பல நாடுகள் நன்மை பெற்றுள்ளன. இதன் முக்கிய நன்மை குறித்து நோக்கின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணம் ஓர் மூலதனத்துக்கான கருவி அது இலகுவில் கிடைத்தல்.
- எந்த நோக்கத்திற்காக கடன் பெறுகிறோமோ அது நிறைவடைகிறது.
- வறுமை ஒழிப்புத்திட்டமாக இது விளங்குகின்றது.
- ஏழைகளின் வருமான மட்டத் தினை அதிகரிக்கின்றது.
- உற்பத்தி பெருகின்றது.
- வருமான ஏற்றத்தாழ்வு, அந்தஸ்து நிலைகள் ஓரளவு சரி செய்யப்படுகிறது.
- வேலைவாய்ப்பு பொருளா தாரத்துடன் கூடிய பொழுது போக்கு என்பன அதிகரிக்கின்றது.

**இத்திட்டத்தின் தீமைகள் பற்றி குறிப்பிடின்**

- நிதியியல் நிறுவனத்தின் ஒழுக்கமற்ற நடைமுறைகள் சமூக கட்டமைப்பில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத் தியுள்ளது.
- பிள்ளைகளின் கல்விப்பாதிப்பு
- துஸ்பிரயோகம், பாலியல் இலஞ்சம் என்பன அதிகரித்தல்
- உளவியல் பாதிப்பு
- கணவன் மனைவியிடையே சண்டை
- தற்கொலை
- அதிகூடிய வட்டி
- இறப்பு, தீராநோய்களில் மாற்றுத் திட்டமின்மை.
- பயனாளி அல்லது பயனாளி குடும்பத்திற்கும் நிதிநிறுவனத்திற் குமிடையிலான முரண்பாடுகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

**இதன் தாக்கத்தைக் குறைப்பதற்கான வழி முறைகள் சில**

- வினைத்திறன், விளைதிறனுடன் கூடிய நுண்நிதியிடல் முறை பின்பற்றப்படல் வேண்டும்.
- நியாய வட்டி முறை அறிமுகப் படுத்தப்படல் வேண்டும்.
- அறவீடு, வருமானம் ஈட்டத் தொடங் கும் காலத்திலிருந்து ஆரம்பித்தல் வேண்டும்.
- நோக்கம் சரியாக நடைமுறைப் படுத்தப்படுவது கண்காணிக் கப்படல் வேண்டும்.
- கணவன் - மனைவியை கூட்டுப் பொறுப்பாக்க வேண்டும்.
- வட்டி வீதமானது ஆண்டு வீதமர்க்கப்பட்டு அது சார்ந்த சரியான விளக்கம் பயனாளிக்கு வழங்கப்படல் வேண்டும்.
- திரும்பச்செலுத்தத் தவறுவதானால் ஏற்படும் விளைவுகள் பற்றி முன்னரே விளங்கப்படுத்தல் வேண்டும்.
- கடனுக்கான வட்டி வீதங்களை குறைந்து செல்கின்ற மீதிக்கு கணிப்பிடல் வேண்டும்.
- சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தல், அவர்களது படிப்பு முதலான அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு கடன் கொடுத்தல் தொடர்பான நிபந்தனைகள் உருவாக்கப்படல் வேண்டும்.
- நுண்கடன் தொடர்பான விழிப்புணர் வினை ஏற்படுத்தல்.

**நிதி நிறுவனங்கள் சட்டமுரணாக தொழிற் படும் உழியர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.**

உண்மையில் பணத்தின் பிரதான நடவடிக்கையானது கொடுக்கல் வாங்கலின் போது பெறுமதியான மாற்றங்களின் போது, மத்தியஸ்தமாக செயற்படல் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் செயற்படுவார்களாயின் நிதி முகாமையை சரிவர கைக்கொள்ளமுடியும். தெற்காசியாவில் விவசாயபோகத்தின் இறுதியில் விவசாயத்திற்காக பெற்றுக் கொண்ட வங்கிக்கடன் தொகை யில் நூற்றுக்கு 95% ற்கும் அதிகமாக ஒரே தடவையில் மீளசெலுத்தும் விவசாய பெருமக்கள் வாழ்வதுஇலங்கையாகும் என்று இலங்கை மத்திய வங்கியின் வெளியீடான 'நிதிசார்நிபுணத்துவம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NST




Building Contractors
&
Building Material Supply




193/3 Ampal Nagar,
Thiruvaiyaru,
Kilinochchi.

T.P : 077 263 0259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. ஆயினும் கடந்தகாலங்களில் வரட்சியாலும் வெள்ளத்தாலும் தமது விவசாயப் பயிர்களை இழந்து 6 வருடங்களுக்கு மேலாக வங்கிகளில் பெற்ற விவசாயக்கடன் சுமையினை அடைக்கமுடியாமல் கிளிநொச்சி மக்கள் அல்லல்படுவதனை குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாறு வங்கிகளில் கடன் பெற்றவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாமையினால் அவர்களின் பெயர்கள் கறுப்பு (அபகீர்த்தி) பட்டியலில் போடப்பட்டுள்ளமையால் அதன்பின்னர் எந்த வங்கிகளிலும் கடன் பெறமுடியாது போகவே அவர்களுள்பலர் இந்தநுண்கடன் திட்டத்தில் இணைந்து இலகுவில் கடனை பெற்றுள்ளார்கள். இதன் மூலம் அவர்கள் கடன் வலையில் (Loan net) விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இத்திட்டத்திலிருந்து மக்களை மீட்க நமது மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முன் நடவடிக்கைகள்.**

- கிளிநொச்சியில் கடன் அறவிட மாலை 5 மணிக்கு பின் செல்லக்கூடாது. நிதி நிறு வனங்களுக்கு அரச அதிபர் எச்சரிக்கை *(2016-08-04)*
- சமூகமட்ட அமைப்புக்கள் ஒன்று திரண்டு 5 யூன் 2018 ஆர்ப் பாட்டம் செய்து இலங்கை மத்திய வங்கி பிராந்திய அலுவலகத்தில் மகஜர் கையளிப்பு.
- கிளி, முல்லைப்பெண்கள் ஒன்று கூடி கிளி கூட்டுறவு மண்டபத்தில் மாநாடு (யூன் 23,2018)
- நுண்கடனுக்கு மாற்றுத்திட்டம் கோரி கரடிபோக்குச் சந்தியில் தொடங்கி மாவட்டச்செயலகத்தில் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கும் ஆர்ப்பாட்டம் (யூன் 14.2018)
- நுண்கடன் எதிர்ப்புப்போராட்டம் தொடர்பிலான ஊடகச்சந்திப்பு (யூன் 08.2018)

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ சி. சிறிதரன், கௌரவ டக்ளஸ் தேவானந்தா முதலியோர் பாராளுமன்றத்தின் முன் நிதி நிறுவனத்தால் மாவட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து உரை நிகழ்த்தினர்.

இந்த நுண்கடன் திட்டமானது உண்மையில் ஏழைகளின் வறுமையினை ஒழிப்பதனை நோக்கமாக கொண்டு ஆரம்பத்தில் செயற்பட்டு வந்தாலும் இலங்கை, இந்திய நாடுகளில் பெரிதும் ஏழ்மையை அல்ல. ஏழைகளை அழிக்கும் திட்டமாக விளங்குவ தாகவே வர்ணிக்கப்படுகின்றது. கந்து வட்டிக்காரனிடம் இருந்து தப்பி னாலும் இத்திட்டக்காரனிடமிருந்து மக்கள் தப்பமுடியாது. அவதியுறுவது வெளிப்படை. இத்தகைய தாக்கத்தினை உணர்ந்தமையினாலே நமது அரசாங்கம் இன்று ஒரு இலட்சத்திற்கும் குறைவான நுண்கடனைப்பெற்று அதனை செலுத்தமுடியாது அவதியுறும் பெண் களின் கடனை திருப்பிச்செலுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அப்பெண்களுக்கான வாழ்வாதார திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும் அது நடவடிக்கையெடுத்துள்ளது. ஆயினும் இன் நடவடிக்கைகள் உடனடியானதும் தற்காலிகமானதுமாகிய ஓர் மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினாலும் கூட நீண்ட பிரச்சினைக்கு தீர்வாக அமையுமோ என்பது எதிர்காலத்தால் தான் கண்டு தெளிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் எங்கே செல்கிறது?

கு. சிவகுமார்
காணி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கரைச்சி.

அலைகடல் தாண்டியதில் அன்னை அவளை
அணைத்துவிட அகமதுபோகின்றது
உணர்வலைகள் அதில் தானும் இருப்பிடம் கொள்கின்றது
கற்பனை ஊஞ்சல் தன்னில் ஏவியந்த மன்மதன்
நெஞ்சில் தானும் மகிழ்வு கொள்ளப் போகின்றது.

அன்பே சிவம் என்பதனை அடையத்தானும்
அழகான இறைவாயில் நாடி மனமது போகின்றது
ஆகாய வெண்ணிலவை முத்தமிட்டு அதில்
முகிழ்ந்திடவே மனமது செல்கின்றது.

வளமான வாழ்க்கையை வாஞ்சையுடன் அழைத்துவர மனம் அது செல்கின்றது
மாட்சிமை பொங்கிடவே மாந்தர்கள் நெஞ்சமதில் இணைப்பினை வைக்கின்றது
இயற்கைக் காட்சிகளை கொள்ளை கொண்டிடவே மனம் அது செல்கின்றது.
இதயக்கமலத்தில் இங்கிதமாம் இன்பந்தேடி மனம் அது செல்கின்றது

உறவுப்பாலங்களை ஒன்றிணைத்திடவே மனம் அது செல்கின்றது
இகபரம் தன்னில் நல்வாழ்வு அமைத்திடவே மனம் அது செல்கின்றது
மாண்பு கொண்ட உள்ளங்களை நாடி மனம் அது செல்கின்றது
மனிதனை மனிதம் பேணி வைத்திடவே மனம் அது செல்கின்றது

வானளாவச் சுற்றித் திரிந்திடவே மனம் அது செல்கின்றது
உல்லாச வாழ்க்கைதனை அமைத்திடவே மனம் அது செல்கின்றது
உயிர் பிரிய முன்பே சொர்க்க வாசல் தேடித்தான் செல்கின்றது
உடலும் உயிருமாய் அக்கனவதனை நனவில் முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாரப் பேரவை



**இருப்பவர்கள் - இடமிருந்து வலம்**

திரு.வ.ஏழுமலைப்பிள்ளை, திரு.தி.கார்த்திகேயன்(செயலாளர்), வண.யோகுவா அடிகளார், திரு.த.முகுந்தன்(தலைவர்/பிரதேசசெயலாளர்), திருமதி.ச.தமிழினி(உதவிப்பிரதேச செயலாளர்), திரு.நா.வேலாயுதம், திரு.மு.தவராஜா(பொருளாளர்).

**நிற்பவர்கள் 1ஆம் வரிசை**

திருமதி.கௌ.சுகன்ஜா, திரு.வே.லவேந்திரா, திரு.சி.லினோசன், திரு.க.சேகர், திரு.வே.மேரியோசப், செல்வி.சி.ஜெயமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி


தே. பிரியன்
பன்னங்கண்டி
கிளிநொச்சி.


பரணிக்கு பொருள் தந்த தமிழே
தங்க தமிழென்றும் எங்களின் உயிரே!
வையத்தின் முதல் மொழி தமிழே!
வாயார வாழ்த்துவோம் உனையே!

நாற்றிசையும் ஒலிக்கும் உன் புகழை
நாவினிந்து பேசுவோம் வெகுவாய்!
நற்றமிழில் இசைப்போம் புது வேதம்
நலிவுற்று சோர்வுறா எம் தமிழ் கீதம்!

கலை கொண்டு காப்பியம் தந்தாய்!
கனி சுவை இலக்கணம் நெய்தே!
தலை முறை தமிழென்றே வாழும்!
தாய்த்தமிழ் எங்கள் உயிராகி நீளும்!

தொன்மை மிகு தமிழ்
தொல்காப்பிய புகழ் கொண்ட அழகே!
தன்மான தமிழ் கொண்டு எழவே!
தலை நிமிர்ந்து வாழும் தமிழ் அழகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் பார்! பாரைப் பார்!!

P. பிரசல்யா
ஸ்கந்தபுரம்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.

சுடுகாடு புகைகிறது
நீறு பூத்து சாம்பலாகிப் பறக்கிறது - நம்
உறவுகளின் உடலங்கள்

இடுகாடு நிறைகிறது
புதையுண்ணப்படவும் இடமில்லையிங்கு

தோறணங்கள் பல வீடுகளில்
மத்தளங்கள் பல தெருக்களில்
ஒப்பாரிக்கும் கண்ணீர் இல்லை - ஏனென்றால்
இங்கு தண்ணீர் இல்லை
வெப்பநிலை உச்ச எல்லை விட்டுவிட்டால்!
மிச்சமில்லை

மரணம் உன்னைக் கலைக்கிறது
மனிதா இது உனக்கு புரியவில்லையா?
ஆறடியில் போய் ஏன் ஒழிகிறாய்
அதுதான் அரக்கனின் இடமென்று தெரியவில்லையா?

மனிதா நீ அன்று இயற்கையை
சிலமுறைதான் அடித்தாய் - ஆனால் இன்று பார்
உன்னை பலமுறை அடிக்கிறது

ஆநிரைக்கும் மேய்ச்சலில்லை
சிறுபோக நெல்லுக்கும் நீர்ப்பாய்ச்சலில்லை
வட்டோடு தென்னை கூட சரிகின்றது
இப்போது கூடவா தோற்றுவிட்ட உன்
விவசாயநிலை புரியவில்லை

வா மனிதா... வா
நிலத்தடி நீரைச் சேமிப்போம்
சிறுநிலமேனும் நீரேந்த இடம் விடுவோம்
வரப்புகளை கட்டி நீரைச் சேமிப்போம்
வளங்களை அளவோடு கையாள்வோம்
வளமான எதிர்காலம் எமக்குண்டென்று
சொல்லோடு சொல்லிவிட்டு நிற்காமல்
அனர்த்தத்தை தடுப்போம் அபிவிருத்திக்குஇடம் கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப்பயன்

**மரியநாயகம் கேசவன்**
உருத்திரபுரம் கிழக்கு
கிளிநொச்சி.

மாசிமகத்தோடு தொடரும் பத்து நாட்களும் வலுசிறப்பாக சிவன்கோவில் திருவிழா நடந்தேறும். சிவனை வேண்டி அவனருள் பெற பக்தர் கூட்டம் மடைதிறந்தவெள்ளமென ஆரோகணித்துநிற்கும். பொதுவாக சிவன்கோவில்திருவிழா தொடங்கிவிட்டாலே போதும் ஊரே களை கட்டி விடும். தோரணங்கள், சோடனைகள், சொக்கட்டான்கள் என்று கோயிலைச்சூழ ஒரேவிழாக்கோலம் கொள்ளும். துவஜாரோகணம் என்று சொல்லப்படுகிற கொடியேற்றம் திருவிழாவில் எவ்வளவு முக்கிய நிகழ்வோ அதுபோலதான் விழாக்காலங்களில் தினமும் மாலைப் பூஜைக்குப் பிறகு சடாட்சரம் வாத்தியாரின் கதாப்பிர சாங்கமும் தவிர்க்கப்படாத ஒரு நிகழ்ச்சி.

சொந்த வலயத்திற்குள்ளேயே கிட்டத் தட்ட ஆறு உயர்தரப் பள்ளிகளில் விஞ்ஞானபாடத்தைக் கற்பிப்பதில் வலு விண்ணராக இருந்து சேவையை அறுபதுடன் முடித்துக்கொண்டவர் தான் சடாட்சரம் வாத்தியார், என்னதான் விஞ்ஞான வாத்தியார் என்ற அறிமுகத்தைக் காட்டினும் அவரின் எல்லையற்ற சமயப்பற்றும், ஈடுபாடும் சைவ சித்தாந்த நுழைபுலமும் அவரை ஒரு கதாப்பிரசங்கி என்று ஒற்றைப்பனையளவுக்கு உயர்த்தி வைச்சிருந்தது.எது எப்படியோ அவரின் பீரங்கிப் பேச்சாற்றலால் மேடைப் பேச்சாளர் என்று தான் அனைவரும் அறிமுகபிரசாரம் செய்வது வழக்கம். அந்த அளவுக்கு புராண இதிகாச நூல்களை கற்ற புலமையும் எடுத்த எடுப்பில் நீரருவி போல சொற்பொழிவாற்றும் பாண்டித்தியமும் கொண்ட விற்பன்னர். இப்படியாக அவரைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம். தப்பித்தவறி அவரின் காது பட யாராவது அவரிடம் சொல்லிவிட்டால் போதும் அன்று பூராகவும் அவரின் குஷி பாதைக்கு அளவே கிடையாது.

வழமை போலத்தான் இரண்டு கிழமைகளுக்கு முதலே சிவன் கோயில் பரிபாலன சபைச்செயலாளர் தெய்வேந்திரன் திருவிழா அறிவித்தலை தபால் மூலம் வாத்தியாருக்குத் தெரியப்படுத்தியிருந்தார். ஏதோ பொறி தட்டியது போல நினைப்புக்கு வரவே அந்த நோட்டீசை ஆராயும் வேலையில் வலு மும்முரமாக இறங்கி விட்டார். தேடித் தேடி சலிப்புத் தட்டவே இந்த வீட்டில வைச்ச சாமான் வைச்ச வைச்ச இடத்தில இருக்கிறதெண்டால் அது கார்த்திகைப் பிறை கண்டது மாதிரித்தான் எண்டு தனக்கு தானேபுறுபுறுத்துக் கொண்டு அரக்கப் பறக்க அதை தேடிக் கொண்டிருந்தவரை தோச்சு காய்ந்த உடுப்புகளை எடுத்து வந்த பரமேஸ் கண்டுவிட்டாள். பரமேஸ்வரி வாத்தியாருக்கு மூன்றாம் கால் பெடிச்சி பிறக்கும் போதே தாய் போய்விட்டாள். அவளுக்கு தாய் தகப்பன் எல்லாமே வாத்தியார் தான்.. பாவம் ஏழாம் நம்பர் காரி. படிச்ச படிப்புக்கு ஏத்த ஒரு வேல இல்லாம இருக்கிறாள் சும்மா இருக்கிற நேரத்தில பிள்ளையளுக்கு பாடம் சொல்லி கொடுப்பாள். இப்ப அதுக்கும் நேரம் கிடைக்கிறதில்லை வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையள். புருசன்ட வேலைப்பாடுகள் பிள்ளையை பள்ளிக் கூடத்துக்கு ஏத்தி இறக்க நேரம் சரியாகிடும்... கலியாணம் செய்து பட்டணத்தோடு வந்துட்டாள் வீட்டுக்காரர் வாமதேவன் கல்விக்கந்தோரில் கிளார்க்கா இருக்கார் ஒரே மகள் ஹம்சத்வனி இந்த வருசம் ஐந்தாம் ஆண்டு பரீட்சை எழுத இருக்கிறாள்.

வாத்தியார் மூத்தவளோடதான் இருந்தவர்... சூட்டுக்கும் பாட்டுக்கும் வாத்தியாருக்கு மூத்த மோள் குடும்பம் தான் ஒத்துப்போகும்... வைத்தியரின் சொன்னபடி அவரோட கிளினிக்குகள் மருந்து மாத்திரையள், பத்தியச் சாப்பாட்டுப் பிரச்சனையால இப்ப மூன்று மாசத்துக்கு மேல இளையவளோட தான் இருப்பு. என்னதான் பிறவிச் சைவ உண்ணியாக இருந்தாலும் பிரஷர், பிளட் சுகர் என உள்ள நாட்டு இல்லாத பொல்லாத வருத்தமெல்லாம் அவர் தேகத்தோட தான்...'பிஞ்ச பாரு பிள்ளை உன்ரமோளின்ர... புத்தகங்கள் கொப்பியள்... ஒரு படிக்கிற பிள்ளைக்கு இது அழகே... எல்லாங் குவிஞ்சு போய்க் கிடக்குது...' என்ற படி போதாக்குறைக்கு அவரும் கிளறிக்கொண்டிருந்தார். 'இப்ப என்னத்தைக் காணேல்லையெண்டு உள்தொண்டைகிழிய சத்தம் போடுறியள்... உங்கட கிளினிக் கொப்பியள நான் கவனமாவைச்சிருக்கிறனப்பா...' என்றாள் பரமேஷ். 'இப்ப அதொண்டும் எனக்கு வேண்டாம் புள்ளை, தெய்வேந்திரம் அனுப்பின கோயில் நோட்டீசைப் பாத்துட்டு வைச்சன்... இப்ப அதத்தான்... சொல்லி முடிப்பதற்குள் அதைச் சொன்னாத்தானேப்பா தெரியும் நீங்க வீட் காரன் கொஞ்சம் பரபரக்காமல் இருங்கோ நான் ஒருக்கால் தேடிப்பார்க்கிறன்... என்றவாறு ஆசுவமாக தேட ஆரம்பித்தாள்.

என்ர பெருமானே என்னயிது புதுமை... இஞ்சனைக்க தானே வைச்ச நினைவா இருக்கு, நான்என்ன காரைக்காலம்மையார் போல இல்லாத மாங்கனியையா கொண்டுவரசொல்றன்... கடுப்பு மேலிட்டவராக ' அதென்ன றெக்கைகட்டியே பறக்கிறது... உவள் ஹம்சத்தொனி தான் எங்கயும் எடுத்துப் போட்டிருப்பாள்..? அவளைக்கேட்டால் சரி.. என ஹம்சத்வனியின் தலையில் பந்தைப்போட்டார். 'பிள்ளை இன்னும் பள்ளிக்கூடத்தாலை வரல்ல... அவளுக்கு என்னத்துக்கப்பா அதை... நீங்கள் பதறாதையுங்கோ... எங்கயும் நீங்கள் தான் கைமாறிவைச்சிருப்பியள்... கொஞ்சம் பொறுங்கோப்பா...' என திருப்பி எறிந்தாள் பரமேஸ்வரி...நல்ல கதை கதைக்கிறாய்பிள்ளை... கடல் வத்தும் வரைக்கும் காத்திருந்து கருவாடு தின்னச்சொன்ன கதைமாதிரி இருக்கு உன்ரகதை என்றார் சற்றுகாரமாக... பதிலுக்கு பேச்செதுவும் வரவில்லை... பேர்த்தி வரும்வரை காத்திருக்கப் பொறுமையில்லாதவராய் தன்னுடன் எப்போதுமே வைத்திருக்கும் டயரியை புரட்டினார் நாயும் வர உறியும் அறுந்த கணக்கில நல்ல வேளையாக மடித்து வைத்தபடியே கடித உறையோடு வலு பௌவியமாக இருந்தது நோட்டீஸ். பெரிய சத்தமாக சிவாயநம சொல்லும் போதே புரிந்துவிட்டது பரமேசிற்கு, பிரித்துப் பார்த்தவருக்கு ஒரே பேரதிர்ச்சி ஒருவேளை நோட்டீஸின் நினைப்பு வந்திராவிட்டால்... எல்லாம் பெருமான் செயல் என்றெண்ணிக் கொள்ளக் காரணம் அன்றுதான் முதலாம் திருவிழா என்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்பைப் கூட்டிக் கொண்டு ஆயத்தமானதில் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை ... சடாட்சரம் ஒரு பிறவிச்சைவர் என்றபடியால் ஆசாரத்தில் அழுக்கில்லை. அவரின் நீண்ட நாள் ஆசை இந்த முறை பிரசங்கத்தின் இறுதி நாளில் போட்டியொன்றை நடத்தி பரிசளிக்க உத்தேசம்... சொல்லவா வேண்டும் வேறு வழியில்லையே இந்தக் காலத்தில் யார்தான் பக்தி சிரத்தையோடு எனது பிரசங்கத்தினை கேட்டு உள்வாங்குகிறார்கள். வாய் நோக ஊர்க்கதைகளும், உருப்படாத வம்பு தும்புகளையுமல்லவா அலட்டிக்கொள்ளுகின்றார்கள். இறைவன் உறையும் சந்நிதியில்... அபச்சாரம்... அபச்சாரம்... என்னவோ ஒட்டு மொத்தத்தில் எல்லோரும் அப்படியென்று சொல்லி விடுவது மனத்திற்குப் பொருத்தமில்லை என்றுபட்டது.

நடையில் சற்று வேகத்தைக் கூட்டிக்கொண்டு பேருந்து நிலையத்தை வந்தடைந்தேன்... இராமநாதபுரத்திலிருந்து வந்து நின்ற பேருந்து வண்டியிலிருந்து பிதுங்கி, அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்கனிகள் போல சிதறி ஓடிக்கொண்டிருந்தனர் மனிதக் கூட்டம்... அப்போதே முடிவு செய்து விட்டேன்... எம்பெருமானே அந்த ஒன்றேகால் மணி நேரமும் நின்று நெரிந்தவாக்கில் தான் பயணம் என்று.. இறைவா உன்னைஅடைய எளிதில் இயலாது என்பதை உணர்த்தவா இத்தனை உபாயங்கள்.. ஈசனே நீ தான் கதி என்றெண்ணிக்கொண்டு சிவநகருக்குச் செல்லும் பேருந்து வண்டியில் ஏறினேன். அது கோவிலடி வாசலால் தான் செல்லுவது வழமை சுற்றும் முற்றும் எட்டி அண்ணார்ந்து பார்த்தேன். சௌகரியமாக ஒரு இருக்கை கூட காலியில்லை. பஸ்ஸில் குனிந்திருந்த முகங்களால் தெரிந்த முகங்களைக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது... எதோ பெரும்பாலும் அத்தனை பயணிகளும் பயண முடிவு வரை போவரோ என்ற எண்ணம் மனதில் கரை தட்டியது... கட்டியிருந்த எட்டு முழ வேட்டியை அலுங்காமல் நலுங்காமல் பார்த்துக்கொண்டேன். சௌகரியமான ஒரு இருக்கை அமைந்திருந்தால் இன்றைய தலைப்பை மீட்டிப் பார்த்திருக்க முடிந்திருக்கும் பரவாயில்லை... என்ன அவ்வளவு கஷ்ரமா.. நான் பேசாத பேச்சா... காணாத மேடையா... என்ற மிதப்பில் பிறவிப்பயன் பற்றித்தானே... பிறத்தற்கரிய பிறவி பெற்ற நாம் நன் மார்க்க நெறிகளில் நின்றொழுகி பரம் பாதங்களில் பேறடைவதைப் பற்றித்தானே.

இவ்வளவு நேரத்திற்கெல்லாம் மாலை பூசைகள் ஆரம்பித்திருக்கும் என்ற எண்ணத்தில் கை மணிக்கூட்டினை நோட்டமிட்டேன். நேரம் ஐந்து கடந்தாயிற்று. இருப்பவர்கள் காணாதென்ற தோரணையில் இன்னும் இன்னும் பயணிகளை ஏற்றுவதிலேயே ஓட்டுனர் குறியாகவிருந்தார். பேருந்து கரடிப்போக்கு சந்தியை அடைந்திருந்தது. திடீரென... இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவர் அட தம்பி இது காக்காகடைச் சந்தி தானே... இறக்கமடா... இறக்கம்.."சொல்லி முடிப்பதற்கிடையில் "கொல்." என்றொரு சிரிப்பொலி எழுந்தது. அதற்கிடையில் நடத்துனர்சற்று கடுந்தொனியில் 'காக்கா கடை சந்தி எப்பவோ போட்டுது. இது கரடி போக்கு சந்தி...' என்று இரைந்தவர்... கெதியாய் இறங்குங்கோ ... அவசரப்படுத்தினார். எப்படியோ அவர் எனக்கு அருகில் இருந்ததால்... இருக்கையொன்று கிடைத்து விட்ட புளுகம்... வேர்வையோடு கலந்திருந்த மதுவின் மணமும் நன்றாகவே அவரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிப் புரிய வைத்தது.மூன்று பேர் இருக்கக்கூடிய அந்த இருக்கை யில் அருகில் தம்மை இளம் காதலர்கள் என அடையாளப்படுத்தும் ஜோடி ஒன்று தமக்குள் ஏதேதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தது. இத்தனை பிரயத்தனங்களுக்கும் மத்தியில் ஒரு இருக்கை... அப்பப்பா... நீண்ட பெருமூச்சொன்று இரைந்து நின்றது. அந்த இடத்தினைப் பொறுத்த மட்டில் அது அரியாசனம் போல பட்டது... இப்போது வண்டி கரடிப்போக்கினைத் தாண்டி ஆறாம் வாய்க்கால் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தது. கிடங்கிலும் மேட்டிலுமாக வண்டிகுலுங்கியது. மேச்சல் மாடுகளின் பாதை மறிப்பு வேறு... ஓட்டுனர் வலு சூதானமாக ஓடிக்கொண்டிருந்தார். பேருந்தில் தொங்கி நின்று நெரிந்தவர்களின் பாடு பெரும் தர்ம சங்கடமாகி இருந்தது. அதை எப்படி சொல்ல... ஒவ்வொரு முறையும் ஓட்டுனர் திடீர் திடீரென தடுப்பினை பிரயோகிக்கும் போதெல்லாம் ஆட்டி விட்ட ஊசல் குண்டு போல ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொண்டனர்... பாதையைக் குறை சொல்லுவதா... இல்லை ஓட்டுனரை குறை சொல்வதா என்று தெரியாது கதவிடுக்கில் நெரிபட்ட தேரை போல அவர்களின் நிலை இருந்ததை உணரத்தான் முடிந்தது. பக்கத்தில் நிற்பவர்கள் எங்கே எனது வேட்டியை மிதித்து அழுக்காக்கி விடுவரோ என்ற பயம் வேறு உள்ளூர உறுத்தியது... முடியுமான வரை வேட்டியை ஒதுக்கி கால்களுக்கு இடையாக பிடித்து வைத்திருந்தேன்.

அப்போது தான்... அவன் தட்டுத் தடுமாறியபடி நின்று கொண்டிருந்தான். நாற்பது வயது மதிக்கலாம். அவ்வளவு மா நிறம் என்று சொல்லி விட முடியாது, கத்திரிக்கப்பட வேண்டிய கட்டாயத்தை உணர்த்திய அவனது தலைமுடி... மஞ்சள் மற்றும் நீல நிற கட்டம் போட்ட அரைக்கைச் சட்டை.. அழுக்குப்படிந்திருந்த நீளக்காற்சட்டை ஒன்றையும் அணிந்திருந்தான். இத்தனைக்கும் மேலாக கரு நிறத்தில் ஒரு மூக்குக் கண்ணாடி வேறு... கையில் ஒரு பெரிய பறி. அவனால் அந்தப் பறியை வைத்திருப்பதா...? இல்லை பஸ்ஸின் கம்பிகளைப் பிடித்துக் கொள்ளுவதா என்று அவனுக்கே தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தான். உள் மனசில் இருந்து எதோ ஒன்று... என்றாலும் இவ்வளவு கஸ்ரப்பட்டு கிடைத்த இருக்கையை இலேசில் விட்டுக் கொடுத்தால் என்கதி... சாக்காக கைப்பையிலிருந்த சிதம்பரரகசிய புத்தகத்தினுள் தலையை புதைத்துக்கொண்டேன். என்னை அறியாமலே காரணம் ஏதுமின்றி விரல்கள் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன.

இதற்கிடையில் ' ஆலடிச் சந்தி டிக்கட்டெல்லாம் முன்னுக்கு வாங்கோ..'நடத்துனரின் குரல் ஒலித்து ஒய்ந்தது... பேருந்தின் வேகமும் குறைந்தது. சற்று நிம்மதி என்று எண்ணுவதற்கிடையில் இறங்குவதில் இரண்டு மடங்கு சனம் பேரூந்தின் பின்கதவால் ஏறிக்கொண்டிருந்தது. காரணம் இல்லாமலில்லை. சிவநகருக்குப் போகும் கடைசிப் பேருந்து இதுதானே... இதை விட்டால் வேறு எப்படி... தருணம் பிழைத்து விடுமே... என மனதை ஆசுவப்படுத்திக்கொண்டு என்னருகில் இருந்தவர்களை நோட்டமிட்டேன். சிரித்துப் பேசிக்கொண்டிருந்த இளம் ஜோடி இப்போது ஒருவர் மீது மற்றவராக தூங்கி விழுந்து கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரூந்தின் ஜன்னலினூடே பார்வையை வெளியே எறிந்தேன். பச்சைப் பசேலென்ற வயல் வெளிகளில் நெல் நாற்றுக்கள் காற்றின் தாலாட்டுப் படி அசைந்தாடிக்கொண்டிருந்தன. திடீரென தடுப்பு பிரயோகிக்கப்பட வண்டி குலுங்கி நின்றது அனைவரும் இருக்கையை விட்டு மேலெழுந்து மீண்டும் இருந்ததாக ஒரு எண்ணம்... எப்படியோ அருகில் நின்ற அந்த மனிதன் இன்னும் கெட்டியாக பிடித்து கொண்டு நிற்கிறான். தோளில் மாட்டியிருந்த பயணப்பை அவனது கட்டுப்பாட்டை இழந்து முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டிருந்தது. அதி சிரமப்பட்டு அதைப் பிடித்துக் கொண்டிருந்தான். நிமிர்ந்து பார்த்தால் வில்லங்கமாகி விடுமே... மறுபடியும் மனதில் ஏதோ ஒன்று... எவ்வளவு நேரம் தான். இப்படியே சாக்குப் போக்காக புத்தகத்தினைப் புரட்டுவது... சுதாகரித்துக்கொண்டே.. அவனது பயணப் பையை வாங்கி மடியில் வைத்துக் கொண்டேன். இருக்கையை ஈயாமல் இருக்க இதுதான் எனக்குப் பட்ட ஒரே வழி.

பயணிகளின் நெருக்கத்தில் ஒரே புழுக்கமாக இருந்தது.என் வயசிற்கு எத்தனையோ பிரயாணங்களின் அனுபவத் தினைக் கண்டிருக்கின்றேன் ஆனால் இதற்கு முதல் இப்படியொரு நெருக்குவாரத்தைப் பார்த்ததேயில்லை. அந்தளவிற்கு சீய்.. என்றேயாகி விட்டது. காற்றோடு சேர்ந்தாப் போல் வியர்வையின் நாற்றமும் பிரித்தறிய முடியாதிருந்தது. பிராண வாயு உள்நுழைய ஏது வழி... அதற்குள் நடத்துனர் டிக்கட்.. டிக்கட்... என்றவாறு குறுக்கும் நெடுக்குமாக குடைந்து வெறுப்பேற்றிக் கொண்டிருந்தார்...

அப்போது தான் மறுபடியும் நடத் துனரின் கூவல்... கூழாவடிச்சந்தி இறக் கமெல்லாம் எழும்பி முன்னுக்கு வாங்கோ... கூவி முடிப்பதற்கிடையில் அவன் தட்டுத் தடுமாறி கீழே குனிந்து எதையோ தேடி அவதிப்பட்டுக்கொண்டிருந்தான்... நிலைமையைப் புரிந்து கொண்ட நான் 'ஆ.. என்ன தம்பி உம்மட பையைத் தேடுறீரோ... இந்தாரும்... இந்தாரும்...' என்கிறேன். மறுகணமே அவனது கைகள் அவசரம் அவசரமாய் எதையோ ஒன்றைத் தேடிப் பையைத் துளாவிக்கொண்டிருந்தன. மிகுந்த ஆவலுடன் பார்க்கின்றேன்...

நீண்டதொரு போராட்டத்திற்குப் பின்னர் மூன்று நான்கு துண்டுகளாக மடித்து வைக்கப்பட்டிருந்த அந்த வெள்ளைக் கோலை வெளியே எடுத்து அதை விரிப்பதற்கு எத்தனித்துக் கொண்டிருந்தான்.

எனது கண்கள் பஞ்சடைந்து இருளை உமிழ்ந்தது போலிருந்தது. ஆயிரமாயிரம் இடிகள் மனவானில் ஒன்றாய் இடித்தன. உதடுகள் எதை யெதையோ சொல்ல... புருவத்தை சற்று உயர்த்திப்பார்த்தேன். அங்கே 'அங்கவீனர்களுக்கு ஒதுக்கப்பட்டது' என்று எழுதப்பட்டிருந்தது. பிறவி யின் பயனைப்புரிந்து கொள்ள எனக்கு அவ்வளவாக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் மலர்ந்திட வழிசமைப்போம்

சி. கிரிசாந்தி
பெரியபரந்தன்

மனிதம் பேணும் மனிதர்களாக இகபரம் தன்னில்
இன்பமுடன் இங்கிதமாய் புத்திஜீவிகளாய் புண்ணிய பூமி தன்னில்
வசந்தமுடன் வாழ்க்கைதனை வளமுடன் வழிசமைத்து
மனம் தன்னில் மகிழ்வுடன் மாண்பை வளர்த்து
அகிலம் தன்னில் அனுதினமும்
வலம் வர வேண்டும் மாந்தர்.

பண்பட்ட சமூகம் தன்னை உருவாக்கி நல்ல
உளப்பாங்கு விருத்தியுடன் உற்சாகமாய் உலகில்
மனிதர் என்றென்றும் திகழ்ந்து ஒழுக்க சீலராய்
ஒன்று பட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன்
என்ற எண்ணத்துடன் ஏற்றம் பெற்று வாழ வேண்டும்.

போதை என்னும் போகத்தை ஒழித்திட வேண்டும்
மதியைக் கெடுத்திடும் மதுவையும் ஒழித்திட வேண்டும்
வல்லுறவு கொண்ட வன்மையான பூமிதானும்
பூத்துக்குலுங்கி நறுமணம் பரப்பிடும் பூஞ்சோலையாக
பூவுலகு இந்தப் பூண்ணிய பூமி மாறவேண்டும்.

களவு, கொள்ளை, காமம், குரோதம், வெட்டுக்குத்து
காசினி தன்னில் காணாது மடிந்திட வேண்டும்
அன்பு, அறம், நட்பு, ஒழுக்கம், அகிம்சை, சமாதானம்
நாட்டினிலே நாளும் நாளும் பெருகிவளர்த்திட வேண்டும்.

வீறு கொண்டு எழுச்சி பெற்று வீரதீரர்கள் இந்த
பாரினிலே பண்பட்ட பரஸ்பரம் உருவாக்கி
உரமாக உள்ளங்கள் உருமாற வேண்டும்.

ஈழமணித்திருநாடு ஈசன் உறை நாடு - இங்கு
மனிதம் மாண்புற வேண்டும் மக்கள் மகிழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரவிழா

**கணேசன் மகரந்தன்**
**உதயநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

விழா என்றால் விஷேடம் என்று பொருள், விழா என்பது விரும்பி நடத்தப் படுவது. தமிழர் தம் பாரம்பரியத்தில் ஒரு குழந்தை பிறந்து, வளர்ந்து வாழ்ந்து, அது மண்ணுக்குள் புகும் வரைக்கும் பல்வேறு விதமான விழாக்ககளைக் கடந்து செல்லவேண்டி இருக்கிறது. அதில் நம் பண்பாட்டிலே, ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பல மங்கலகரமான விழாக்களை, பல சந்ததிகளைக் கடந்தும் நாம் அனுஷ்டித்து வருகிறோம், அதிலும் ஒரு சில முக்கியமான விழாக்களை, ஆண்டு, விழாக்கள், வாழ்வியல் சடங் குகள் என வகைப்படுத்தமுடியும். அவற்றில் ஆண்டு விழாக்களில் விஷேட பெயர்களைக் கொண்டு அழைக்கிறோம். இருபத்திஐந்தாவது ஆண்டுவிழா, வெள்ளிவிழா எனவும், ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா பொன்விழா எனவும், அறுபதாவது ஆண்டை சிறப்பித்து கூறும் விழாவாக வைரவிழா எனவும், நூறாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா நூற்றாண்டு விழாவாகவும் சிறப்பு பெயர் கொண்டு அழைக்கிறோம். அது ஒரு புறம் இருக்க, எமது சமயம் கூறும் விழாக் களாக அவற்றை பண்டிகைகள் என்ற பதத்தின் மூலம் குறிப்பிடுகிறோம். அவற்றில் ஒரு வருடம் பிறந்ததுமுதல் பல முக்கியமான, அவசியமான விழாக்களை கொண்டாடுகிறோம். அது ஒரு புறம் இருக்க சடங்குகள் வரிசையில் பலவற்றைக் கொண்டாடுகிறோம். அவற்றில் திருமணவிழா, புதுமனை புகுவிழா, காதணி விழா, பூப்புனிதநீராட்டுவிழா, என்று அதுவும் ஒரு நீண்டவரிசையிலே சென்றுகொண்டிருக்க, எம் வாழ்க்கையிலே விழாக்களுக்குப் பஞ்சமே இல்லை என்றே கூறலாம். இவற்றின் வரிசையிலே இந்துக்களின் சமயம் சம்மந்தப்பட்ட ஒரு விழாவாக பழம் தமிழர் காலம் தொட்டு எம்மால் செய்யப்பட்டு வரும் விழாக்களி ல் ஒன்றே, பசி, பகை, பிணி என்பவற்றால் எமக்கு வராமல் இருக்கும் பொருட்டு தெய்வத்திற்குச் செய்யும் ஒரு சாந்தி பெருவிழாவே "இந்திரவிழா" என்று இந்தியாவிலும், நேபாளத்திலும் இலங்கையிலும் இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்திர விழா தமிழ்நாட்டில் பூம்புகார் என்று அழைக்கப்படுகின்ற காவிரி பூம்பட்டினத்திலே ஆரம்பமான ஒரு விழாவாகும். அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் உவமை கூறும் அளவிற்கே இவ்விழா சிறப்புப் பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவின் தோற்றம் பற்றி பல கதைகள் கூறப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றை இங்கு நோக்குவோம். பழம் பெரும் நகரமாகிய புகார் நகரத்தில் ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய மக்கள் வாழ்ந்தனர் எனவும் அவர்களை சோழ வம்ச மன்னனாக கொடித்தாப் செம்பியன் என்ற மன்னன் நீதி முறை தவறாது பல்லாண்டுகள் ஆண்டு வந்தான் எனவும், .இந் நகரின் புகழ் மேலும் உயரவேண்டும் என அருந்தவமுனிவரான அகத்தியர் விரும்பினார் எனவும், இப் புகார் நகர் மேலும் புகழ் பெறவேண்டும் எனில் தேவர்தம் தலைவனாகிய இந்திரன் மனம் நெகிழ வேண்டும் எனவும் அகத்திய மாமுனி எண்ணம் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனிடம் ஒரு கோரிக்கையை வைத்தார் எனவும் அம்மன்னனும், அருந்தமுனிவர் அகத்தியரது கோரிக்கையை ஏற்று, அவர் வாழ்க்கை வேதவாக்காகக் கொண்டு இந்திரன் மனம் குளிரும் வகையில் இந்திர விழாவை பெரும் பொருட் செலவுடன் தொடர்ந்து இருபத்தி எட்டு நாட்கள் பெருமெடுப்பில் செய்து முடித்தான் எனவும், கொடித்தோட் செம்பிய மன்னனின் அன்பான அழைப்பை ஏற்று இந்திரன் முதலான தேவர்கள் இருபத்தி எட்டு நாட்களும் புகார் நகரிலே வந்து தங்கி இருந்தார்கள் என்றும் ஒரு ஐதீகம் இன்றும் கூட தமிழ் நாட்டிலே நிலவுகிறது. இவ் விழா ஆரம்பகட்டங்களில் ஒரு அரசாங்க விழாவாக கொண்டாடப்பட்டு வந்துள்ளமை அறிய முடிகிறது. அக்காலத்தில் தோன்றியதமிழின் ஐம்பெரும் காப்பியங்களில் பிரதான இரு காப்பியங்களான மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரத்திம் இவ்விழாவை ஒவ்வொரு வருடத்திலும் மிக முக்கியமான அரசாங்க விழாவாக கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் இந்திர விழா ஆரம்பிக்க முன்னதாக பறை மூலம் மக்கள்ளுக்கு செய்தி சொல்லப்பட்டு இந்திரன் முதலான தெய்வங்களுக்கு பூசையிட்டு, பின் முத்தமிழும் சேர்த்து, மக்களை, இசையாலும், நாடகத்திலும் பரவசமூட்டின, அறிஞர்கள் சபை கூடி பட்டிமன்றம் நடத்தினர். எல்லா சமயத்தவரும் கலகங்கள் எதுவும் செய்யாமல் ஒற்றுமையாய் இருந்தனர். இந்தவகையில் இந்திரவிழா வெறுமனே இந்திரனுக்கு மாத்திரமன்றி, அக்காலத்தில் வாழ்ந்த மக்களின், ஒற்றுமை, கலையார்வம், பண்பாடுகள், போன்றவற்றை வளர்ப்பதிலும் பங்களித்தன என்றே கூறவேண்டும்.

அன்றைய காலகட்டத்தில் தமிழ் நாட்டின் மிக முக்கிய நகர்களான உறையூர், மதுரை, வஞ்சி போன்ற இடங்களில் மாபெரும் விழாக்களை, மக்கள் கொண்டாடி வந்தனர். அந்த வகையில் மதுரையிலே திருவோண விழாவும் உறையூரிலே பங்குனி உத்தர விழாவும் வஞ்சியிலே உள்ளி விழாவும் நடைபெற்று வந்ததோடு, காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்படும் புகார்நகரிலே இந்திரவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வந்துள்ளமை அறியமுடிகிறது. மகாபாரதம், இராமாயாணத்திலும் கூட இந்திரவிழா பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கே காணப்படுவதோடு, இன்றும் கூட இந்தியாவின் அயல்நாடான நேபாளத்தில் மிக சிறப்பாக ஆண்டுதோறும் இந்திரவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்துக்களின் முதன்மை நூல்களான வேதாகமத்தில் இந்திரவிழா பற்றிய குறிப்புக்கள் உள்ளதாக அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். உலகின் மிக பழைமையான நூலான ரிக் வேதத்திலும், அதர்வவேதத்திலும் இந்திரவிழாவின் குறிப்புக்கள் உள, "இந்திர த்வ்ஜம்" இந்திரனின் கொடி பற்றியும், அதர்வ வேதம் கூறும் அதே வேளை, ரிக் வேதத்தில் மறைமுகமாக "மருதுக்குமுன் இந்திரன் நடுநடுங்கினான்" எனவும் ஓர் சந்தர்ப்பத்தில் கூறப்படுகின்றது. இதன் பொருள்; காற்றில் இந்திரனின் கொடி படபடத்தது என்பதாகும். அதை விட ,இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்திலே புகார் காண்டம் என்ற பகுதி உண்டு. அதிலே காணல் வரி என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்து வரும் கோவலன் மாதவியை அழைத்துக் கொண்டு இந்திர விழா பார்க்க சென்றான் எனவும் அப்போது மாதவியின் வேண்டுகோளின் படியே காவிரியை விளித்துப்பாடுகிறான். இப்பாடல் கேட்ட மாதவியும் பதில் பாட்டு பாடுகின்றாள் எனவும் சிலப்பதிகாரத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திர விழாவின் தொன்மையும், சிறப்பும் உறுதியாகின்றது.

இந்திரவிழாவின் போது மொத்தமாக இருபத்தி எட்டு நாட்கள் நடைபெறுகின்ற இவ்விழாவிலே விழா மரபுப்படி, பறைமூலம் ஊர் முழுதும் சொல்லப்படும் அறிவுறுத்தல்களின் படியே விழா வேலைகள் ஆரம்பமாகும். இருபத்தி எட்டு நாட்களும் ஊர் முழுவதும் விழாக்கோலம் பூணும், ஆடல், பாடல், புத்துயிர்ப்பு பெறும், இவ்வாறு இவ்விழா ஆரம்பமாகும். இது ஒருபுறமிருக்க,

இலங்கையிலே. யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறை என்ற இடத்திலே இன்று வரை இந்திரவிழா பெரும் சனத்திரளுக்கு மத்தியில் வருடத்தில் ஒரு முறை கொண்டாடப்பட்டு வருகிறது என்பது மகிழ்வைத் தருகின்ற சேதியாகும். வல்வெட்டித்துறையில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்திலே வருகின்ற தீர்த்தத்திருவிழா நன்நாளிலே இரவு, அப்பகுதி வாழ் மக்களால் ஆலயத்தை சூழவுள்ள 3-4 km நீளமான, வீதிகள், அலங்கரிக்கப்பட்டு மின் விளாக்குகளாலும் , சோடனைகளாலும், இந்து தெய்வங்களின் பாரிய பதாதைகள் கட்டப்பட்டு, ஒரு நவீன இந்திர விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய நாள் முழுதும், இரவிரவாக சுமார் 10-15 மேற்பட்ட மேடைகள் அமைக்கப்பட்டு, இசை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், நடன நிகழ்வுகள், இசைக்கச்சேரிகள் என பல்வேறுபட்ட கலைநிகழ்வுகள் ஆரம்பமாகி மக்களைக் கவர்ந்திழுத்து காண்போரை எல்லாம் பரவசத்தில் ஆக்கிவிடும்.

இங்கே வல்வெட்டித்துறையில் நடைபெறுகின்ற இவ்விழாவானது ஒரு நவீன இந்திர விழா என்று சொன்னால் மிகையாகாது, ஏனெனில் அந்த இரவிலே ,சூரியன் மீண்டும் உதித்ததைப்போன்று இரவை பகலாக்கும் அந்த மின்சார விளக்குகளின் விதம் விதமான செயர்க்கையில் காண்போர் எல்லாம் பிரமித்துப்போய் விடுவர், அதை விட இங்கு அடியில் தீ மூட்டி வானில் பறக்கவிடப்படும் இராட்சத வெப்ப பலூன்கள் சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரையும் ஒரே வகையில் மிரளவைத்து விடும் என்றே கூறவேண்டும். அருமையான அந்த நாளிலே நடைபெறும் பட்டிமன்றத்தைக் கூட நிகழ்கால எதிர்கால உலகிற்கு ஏற்றால் போல் தலைப்புக்களை தெரிந்து, பார்ப்பவர்களை நகைச்சுவை கலந்த முக்கியமான சிந்தனைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை இரு பகுதியினரும் விவாதிப்பர் இவ்வாறு அன்று இரவு முழுவதும் இந்திர விழா சிறப்பாக நடைபெறும்.

ஆக தமிழ்நாட்டில் நடைபெறும் இந்திரவிழாவுவிற்கும், வல்வெட்டித் துறையில் நடைபெறும் இந்திர விழாக்வுகும் இடையே பல வேற்றுமைகளும் சில ஒற்றுமைகளும் இருந்தாலும், விழா என்ற ரீதியில் மக்களை அவர்தம் வாழ்க்கை முறையை செம்மைப்படுத்துவதிலும், அழகுபார்ப்பதிலும் இரண்டுமே பங்களிக்கின்றன என்பதே நிதர்ச்சனமான உண்மை. இந்திரன் என்ற தெய்வத்திற்காக எடுக்கப்பட்ட விழா பூம்புகரில் தொடங்கி இன்றுவரை, தமிழ்நாட்டிலும், நேபாளத்திலும், இலங்கையிலும் சிறப்பாக பல நூற்றாண்டுகள் தாண்டிநடைபெற்று வருவது பூரிக்கத்தக்கது என்றே சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மனு

மு. ஜெனிற்றா
கிராம அலுவலர்
ஆனந்தபுரம்.

**கருணை இறைவனுக்கு!**

பூவுலகில் உள்ளோர் -உனக்கு
பூக்களால் பூஜை செய்து
பொற்குடம் தலை சுமந்து
பொன் பொருள் ஈய்ந்து
கால் நடந்து காவடி எடுத்து
கண்ணீர் மல்கி வரம் கேட்க
வஞ்சனை அற்ற இறைவன் நீ
வாரி வாரி வழங்குகின்றீர்

அடியேன் என்னிடம் .......
அலைந்து திரியும் ஆன்மாவைத் தவிர
ஏதுமில்லை ... ஐயனே
காணிக்கை தர கால்கள் இல்லை
கையேந்தி வணங்க கைகளும் இல்லை
சிதறுண்ட என் செதில்கள் மட்டும் - இன்னும்
அடக்கம் செய்யப்படாமல் பேருலகில்

இறைவா...
என் விண்ணப்பத்தை கேட்டருளும்
இறுதி மாதத்தில் ஈன்றேன் என் சிசுவை
பால் குடி மறக்காத பாலகன் அவன்
பால் மணம் மாறாத பாவி நான்
இறுக அணைத்தபடி இறுதி பயணத்தில் பயணித்தேன்

எதிர் திசை தெரியவில்லை
வழியோ புரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் வலம் ஏதும் இல்லை
புகை மூட்டமாய் வாழ்வு!
மடிக்குள் இருந்த மகவை தவிர  எல்லாம் இழந்தேன்
கை, கால் மட்டும் அல்ல
என் கண்ணையே பிரிந்தேன். நொடிப்பொழுதில்.
இறைவா என் குழந்தை - என்ன ஆனானோ
அனாதை ஆனானோ
யாரேனும் தத்தெடுத்துச் சென்றாரோ
கை, கால் இழந்து கஸ்ரப்படுகிறானோ
என் சேயை தேடுகின்றேன்
இறைவா உன்னை வேண்டுகின்றேன்.

இறைவா உன்னை  இறைஞ்சுகின்றேன்
என் மனுவுக்கு செவிசாய்த்திடு
மன்றாடிக் கேட்கின்றேன்
மகவுகளை காத்திடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மேடுகள்

**வேல் லவன்**
**திருநகர்,**
**கிளிநொச்சி.**

உலகத்தின் அரைஞாண் கயிறு
அந்த நதி 'நைல்'.
ரோமர்கள் அக்குள் பிடிக்குள்
அடக்க முயன்றும்
நீட்சி கண்ட நீர்ப் பிரவாகம்.

எகிப்தின் 'அபிடொஸ்' அரண்மனை
மது வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது.
'ஒசிரஸ்' தன் வைரக் கிரீடம்
நனையும்வரை அருந்துகிறான்.
இரவு நீண்டு செல்கிறது.
மதுக் கிண்ணங்கள் காலியாக
ஒசிரஸ்ஸை வெறிக்கிறான் 'சேத்'.
அவன் முகத்தில் வஞ்சக முறுவல்.



அங்குலம் அங்குலமாய் வைரம் நெய்த
அகிலத்தின் மிக அழகிய சவப்பெட்டி
ஒசிரஸ் நீள்துயில் கொள்ள
நைல் நதியில் மிதக்கிறது.

புதைக்கப் படுவோருக்கு அன்றுதான்
புகழிடம் முளைக்கிறது.
கிசா'க்களின் தெய்வமாகிறான் ஒசிரஸ்.
புதையுண்டவர்களின் முதல் பிரமிட்
ஒளித்து வைத்திருக்கிறது ஒசிரஸ்ஸை .

எங்கள் மண்ணிலும் எத்தனை
ஒசிரஸ்கள் புதைக்கப்பட்டார்கள்.
அதிகாரக் கிரீடம் அறியாதவர்கள்.
விடுதலைக்கு முடி தரித்து
புதை மேடுகள் பறிக்கப் பட்டும்
விதையாக வாழ்பவர்கள்.

ஓ... என் தேசத்து ஒசிரஸ்களே!
உங்கள் பிரமிட்டுக்கள் நிமிர்ந்தெழும் - அந்நாளில்
இங்கும் உலக
அதிசயம் நிகழும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் யுத்தத்தின் பின் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

மு. தமிழ்செல்வன்
ஊடகவியலாளர்,
கிளிநொச்சி.

"என்ன செய்வது பிள்ளைகளின் வயிற்றுப்பசியைத் தீர்க்க எதனை வேண்டும் என்றாலும் செய்யத்தயாராக இருக்கின்றேன்" என்றார் யுத்தத்தில் தனது கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாயான ஒரு இளம் பெண். கிளிநொச்சியைச்சேர்ந்த இவர், அவ்வப்போது கிடைக்கின்ற கூலித்தொழிலை செய்வதோடு அரசியல் தரப்புக்கள் அதிகாரிகள் கொடையாளர்களின் உதவிகளையும் எதிர்பார்த்து வாழ்க்கையை கொண்டு செல்கின்றார்.

இது ஒரு மோசமான நிலைமை. யுத்தத்தின் பின்னர் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சவால்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பாரதூரமானதாகக் காணப்படுகிறது. இதனை சீர்படுத்துவதற்கான பொறிமுறைகளை யாரும் வகுத்துக் கொள்ளவில்லை. அதன் விளைவே தொலைக்காட்சித் தொடர்கள் போன்று பெண்களிற்கு எதிரான வன்முறைகள் தொடர்கிறது.

யுத்தம் இடம் பெறுகின்ற இடம் பெற்ற பிரதேசங்களில் முதலில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும் சிறுவர்களும் தான். இவர்களே நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிகம் யுத்தப்பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். குறிப்பாக இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் தொடர்பில் பிற்போக்குத்தனமான மனப்பாங்கும், சமூக கட்டமைப்பும் யுத்தத்திற்குப் பின்னர் அவர்களை பரிதாப நிலையில் தள்ளிவிடுகிறது. அவர்கள் தங்களை சமூக மற்றும் பொருளாதாரரீதியில் மீள கட்டியெழுப்பிக்கொள்வதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது. இதில் பலர் தோற்று சிதைந்து விடுகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த முப்பதாண்டு யுத்தம் தமிழ் சிங்களம் முஸ்லிம் என அனைத்து சமூகத்துப் பெண்களையும் பாதித்திருக்கிறது. இதில் தமிழ்ப் பெண்கள் ஏனையவர்களோடு ஒப்பிடுகையில் அதிக பாதிப்புக்களை சந்தித்துள்ளனர். அதிலும் கிளிநொச்சியில் உள்ள பெண்களின் நிலைமை தற்போது மிகவும் மோசமானதாகக் காணப்படுகிறது. ஏற்கனவே பொருளாதார ரீதியில் நலிவுற்ற நிலையில் இருந்த அவர்களை யுத்தப்பாதிப்பும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது.

கிளிநொச்சியில் சராசரியாக 42318 குடும்பங்களையும், ஒரு இலட்சத்து 39489 மக்கள் தொகையையும் கொண்ட மாவட்டத்தில் அண்ணளவாக 8000 பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் காணப்படுவது ஆரோக்கியமான நிலைமையல்ல. இதில் விதவைகள் 6000 பேர்.அதிலும் யுத்தம் காரணமாக விதவைகளாக்கப்பட்டவர்கள் 2300 பேர். இதில் முப்பது வயதிற்குட்பட்ட இளம் விதவைகள் 600 பேரும், மூன்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட தங்கிவாழ்வோரைக்கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் 2200 பேரும் காணப்படுகின்றனர். இவர்களில் பலர் பெண் தலைமைத்துவக்குடும்பம் என்ற பாதிப்போடு கை, கால், கண் போன்ற உடல் உறுப்புக்களை இழந்தும் காணப்படுகின்றமை துயரிலும் துயராக விளங்குகிறது.

மழைவிட்டும் தூவனம் விடவில்லை போன்று யுத்தம் முடிவுற்று ஒன்பது வருடங்களைக் கடந்த நிலையிலும் அதன் பாதிப்புக்களிலிருந்து பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் இன்றும் மீட்சி பெறவில்லை. பிள்ளைகள் காரணமாகவே தற்கொலை செய்யாமல் இருக்கிறேன். இல்லையென்றால் கணவன் போய் சில வருடங்களில் நானும் அவரிடம் சென்றிருப்பேன் என விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு மற்றொரு பெண் சொன்னார்.

இந்த வரிகள் போதுமானது இங்கே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்கின்ற வலிகள் நிறைந்த வாழ்க்கையை வெளிப்படுத்துவதற்கு. பெண்களுக்கான விசேட அமைச்சு, நிறுவனங்கள், கட்டமைப்புக்கள், மற்றும் விசேட திட்டங்கள் என இருந்தும் யுத்தத்தின் பின்னரான பெண் தலமைத்துவ குடும்பங்களின் பிரச்சனைகள் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் ஓரளவேனும் வெற்றிகொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த ஒரு பெண் சொன்னார். "வாழா வெட்டியாக இருக்கிற எங்களிடம் வாக்குக் கேட்டு மட்டுமே வாறாங்கள் எங்கட வாழ்க்கையை திரும்பியும் பார்க்கிறார்கள் இல்லை. எனவே வாக்களிக்கிறதையும் விடப்போறம்" என்றார்.

இப்படித்தான் இன்று சமூகத்தில் உள்ள தொண்ணூறு வீதமான பெண் தலைமைத் துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் உணர்வுகள் காணப்படுகின்றன. யுத்தத்தால் கணவனை இழந்த அல்லது கணவன் காணாமல் ஆக்கப்பட்ட அல்லது கணவன் விவாகரத்துப்பெற்ற அல்லது முள்ளந்தண்டுவடம் பாதிக் கப்பட்ட கணவனைக் கொண்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அடிப் படைத்தேவைகள் கூட, ஒரு முறையாக நிவர்த்தி செய்யக் கூடிய பொறிமுறை உருவாக்கப்படவில்லை.

இதனால் பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் அனைத்து வகையான பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் முகம் கொடுக்கிறனர். அதாவது உடல் உள ரீதியான எல்லா வகை பாதிப்புக்களுக்கும் பெண்கள் நாளாந்தம் முகம்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் 1983ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி இலங்கை பெண்கள் சமவாயம் அங்கீகரிக்கப்பட்டது. இதன் நோக்கம் பெண்களுக்கு எதிரான எல்லா வகையான வேறுபாடுகள் மற்றும் வன்முறைகளை இல்லாதொழித்தலாகும். ஆனால் இது வெற்றி பெறவில்லை என்ற கள யதார்த்தமே யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் காணப்படுகிறது.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சமூகத்தில் நாளாந்தம் உணர்வுசார்ந்தும் உளம் சார்ந்தும் பாதிக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகம் இடம் பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் தான் வாழ்க்கையில் விரக்தியுற்றவர்களாக எஞ்சிய தமது வாழ்க்கையை தமக்காக அன்றி பிள்ளைகளுக்காக வாழ்ந்து முடிக்க வேண்டும் என்ற நிலையிலேயே வாழ்கின்றனர். இவர்களின் வாக்குகளால் அதிகாரங்களுக்குச் சென்ற பிரதிநிதிகள் கூட, ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் தாங்கள் சார்ந்த அமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மேடைகளிலும் வழங்குகின்ற வாக்குறுதிகள் மற்றும் உறுதி மொழிகள் என்பவற்றை தேர்தல் வெற்றியின் பின்னர் நினைத்துப் பார்ப்பதில்லை என்ற அனுபவம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களிடம் காணப்படுகிறது.

குறைந்த பட்சம் தங்களின் அடிப்படைப்பொருளாதார பிரச்சனைகளைக் கூட தீர்க்க முடியாத நிலையே காணப்படுகிறது. ஒவ்வொரு தேர்தல்களிலும் இந்தத் தடவை செய்வார்கள் இந்தத் தடவை செய்வார்கள் என 2009 இற்குப் பின்னர் பல தேர்தல்களில் வாக்களித்துவிட்டோம். ஆனால் எங்களுடைய வாழ்க்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்ற மனநிலையில் தங்களின் உயர்ந்த பட்ச உரிமையான வாக்குரிமையைக் கூட பயன்படுத்த விரும்பாதவர்களாக ஜனநாயக பன்மைத்தன்மையில் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவேதான் பெண் தலைமைத் துவக்குடும்பங்களைப் பொறுத்தவரை அவர்களுக்கான வாழ்க்கைத்தர மேம்பாடு தொடர்பில் விசேட திட்டங்கள் அவசியமாகின்றன. அதுவும் கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை பெண் தலைமைத்துவக்குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள் கண்டிப்பாக நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படவேண்டும். இன்றைய சூழ்நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து வகையான வன்முறைகள் துஸ்பிரயோகங்கள் எல்லாம் அவர்கள் எதிர்கொள்ளும் வறுமைக்கூடாகவே நடக்கின்றன. எனவே இன்று சமூகத்தின் விளிம்பு நிலையில் நிற்கும் பெண் தலைமைத்துவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தினையும் உளசமூக பொருளாதாரப் பெறுமானங்களையும் பாதுகாக்கும் வகையில் அரசும் அரசியல் வாதிகளும் ஒரு முன்திட்டத்துடன் கூடிய வேலைத் திட்டத்தினை ஆரம்பித்து அபலைகளாக உள்ள அப்பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற முன்வரவேண்டும் வருவார்களா? காத்திருப்போம் நம்பிக்கை தானே வாழ்க்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை ஓர் அறிமுகம்

சிவபாலன் லினோசன்
ஆசிரியர்,
கிளி. இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை.

உலகில் மனிதனுடைய தோற்றத்தினூடு கலைகள் தோற்றம் பெற்றதோடு அவனுடைய அறிவியல் வளர்ச்சியோடு கலைகளும் வளரலாயிற்று. கலை வரலாறானது தான் எழுந்து கொண்ட சமூக பண்பாட்டு பின்னணிகளை எடுத்தியம்புகின்றன. கலை வரலாற்று ஆசிரியர்கள் கலைப்படைப்புகளின் தன்மைகளுக்கு ஏற்ப கட்டடம், சிற்பம், ஓவியத்தை கட்புலக்கலையாகவும், நடனம், நாடகத்தினை ஆற்றுகைக்கலைகளாகவும். இசையினை செவிப்புலக்கலையாகவும், இலக்கியத்தினை மனவெளிக்கலையாகவும் சலனம், புகைப்படம், கணனிக்கலையினை தொழில் நுட்பக்கலைகளாகவும் பாகுபடுத்தி நோக்குகின்றார்.

கலை என்பது சமூகத்தின் விம்பமாக பார்க்கப்படுகின்றது. சமூகத்தினை புரிந்து கொள்வதற்கான சாதனமாக கலை விளங்குகின்றது. கலை என்பது இன்னதுதான் என்று இலக்கணமோ, விளக்கமோ வரையறுத்துக் கூறமுடியாது. பொதுவாக கலை என்பது உணர்ச்சிக்கு விளக்கமாக அமைந்து. அழகுத் தன்மையால் உள்ளத்தை கவரவல்லது என்று கூறலாம்.கலை என்பது செயற்திறனைச் சிறப்பாக உணர்த்துகிறது. ஆகவே கலையில் செயல், திறம், சுவை, பயன் என்ற கூறுகளைக் காணலாம்.

கலை என்ற சொல் 'கல்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். கலா என்னும் சொல்லும் 'கலை' எனும் சொல்லின் திரிபே எனக்கூறுவர். 'கல்' என்ற சொல்லின் பொருள் கல்வியையே குறிக்கும். எனவே கலை என்பது மனிதன் கற்கும் அனைத்துக்கற்கை நெறிகளையும் குறிக்கும்.இதனையே சிலப்பதிகாரம் 'என் எண் கலையோர் இரு பெரு வீதியும்' என்னும் கம்பர்பாடலடியாலும் கி.பி.12ம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியதாகச் சொல்லப்படும் 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்"எனும் பாடலடியில் அறியலாம்.

கலைபற்றி பல அறிஞர்கள் பலவாறாகக் கூறியிருக்கிறார்கள்.அந்த வகையில் அவர்களின் கருத்துக்களை நோக்குவோம்.ஒருவன் முன்பு அனுபவித்த உணர்வைத் தன்னுள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள வர்ணங்கள், ஒலிகள், சொல்வடிவங்கள் மூலமும் அந்த உணர்வைப் பிருக்கும் உணரும் படி செய்ய வேண்டும்.இதுவே கலையின் செயலாகும். என டால்ஸ்ரோய் கூறுவதை காணலாம்.


கலைஞர் ஒருவன் தன் கலையினை அளிக்கை செய்யும் போது அதனைப் பார்த்து ரசிக்கும் ரசிகனுக்கும் அந்த அளிக்கையின் அதே உணர்வு பிரதிபலிக்கப்பட வேண்டும். கலைகள் கற்காலப் பதிவுகளாகவும் ,பொற்காலச் சுவடுகளாகவும் மிளிர்கின்றன. எமது முன்னோர்களின் உணர்வுகளையும் உணர்வின் வெளிப்பாடுகளையும் மறையாமல் இக்கலை வடிவங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. தமிழரின் உள்ளக்கிளர்ச்சியினால் மகிழ்ச்சி, அன்பு, கோபம், துக்கம், கவலை, ஏக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல், கனிவு, போட்டி என உணர்வுகள் பல வெவ்வேறானாலும் உண்மை,நீதி, சமத்துவம் என உரிமைகள் சார்ந்து மற்றவர்களின் ஒடுக்குமுறைகளின் வெளிப்பாடாகவும் மண்வாசனை கலந்த கலைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கலைகள் மண்வாசனை சார்ந்த கலைகள், செவ்வியல்கலைகள் என இருவகையாக இன்று காண்கின்றனர். விதிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட கலைகளை செவ்வியல் என்றும் ஆய்வாளர்கள் வகுக்கின்றனர்.




இவ்வாறு பகுக்கப்பட்ட கலை வடிவங்களுள் நாட்டுப்புற இயல் என்பது நாட்டுப்புற மக்களின் பாடல்கள், விளையாட்டுக்கள், மருத்து முறைகள், கலைகள் எனப் பொதுவான தலைப்புக்களிலும் நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் சமூகம், பண்பாடு, வாழ்வியல் சிக்கல்கள், பெண்ணியச் சிந்தனைகள் எனவும் ஆராயப்படுகிறது.

தவிரவும் நாட்டார் இலக்கிய வழக்கியல் பற்றி ஆராயும் போது கிராம மக்களின் உளவியல், கருத்தியல், கட்டுமானம் ஆகியவற்றை வெளிக்கொணர்வது அவசியம். வரலாற்று பொருளாதார அடித்தளம், படைப்புக்களிள் காணப்படும் முரண்பாடுகள், வெளிப்படும் மௌனங்கள், குறிப்பிட்ட காலக்கட்டத்து கருத்துநிலை, கட்டுமானத்தின் பெரும் இடம் என்பவற்றை கணக்கில் டுத்துக் கொள்வதும், வெளிக்கொணர்வதும் அவசியம். அ.மாக்ஸ் என்ற அறிஞர் நாட்டார் கலை செயல் ஊக்கத்துடன் பயிலப்படும் பகுதிகள் பற்றி வரைப்படம் (fork art map) ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்கிறார்

இவரது கருத்தினை முன்னோக்கி எடுத்துச் செல்வோமானால் நாட்டுப்புறக் கலைகளுள் தமிழக நாட்டுப்புறக் கலைகளாக பொய்க்கால், கரகாட்டம், காவடியாட்டம், ஏயில் கும்மி, மயிலாட்டம், குரையாட்டம்,கணியான் கூத்து,மகுடாம்டப்,இலாவணி,மாடுபிடி சண்டை,புலியாட்டம்,ராஜா ராணியாட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலைகளில், சுடுமண் சிற்பம், ஓவியம், மட்பாண்டம் செய்தல், கோலம் வரைதல், ஓலைகளில் அலங்காரப் பொருள் செய்தல் போன்றவை அடங்கும். இக்கலைகளின் வாயிலாக அ.மார்க்ஸ் கருத்துப்படி அம்மக்களின் கருத்தியல், உளவியல், கட்டுமானம் என்பவற்றோடு பண்பாடு, வாழ்வியல், நெறிமுறைகள், சமூக வரலாறு, சமுதாய அமைப்பு என்பவற்றை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் அவர்களது எண்ணங்களையும், உணர்வுகளையும் ஏனையோரோடு பகிர்ந்து கொள்ள இக்கலைகள் உதவுகின்றன.

கலைகள் ஒவ்வொன்றும் மனிதனது சடங்காச்சாரங்களினின்று தோற்றம் பெற்றுள்ளன. இக் கலைகளை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமாய் பகுக்கின்றனர். அந்த வகையில் கபிலத்தாயனார் ஏழு வகையாகப் வகுத்துள்ளார்.

1. வேட்டை நடனங்கள்
2. மந்திரம் நோன்பு நடனங்கள்
3. தொழில் நடனங்கள்
4. பருவகால நடனங்கள்
5. இதிகாச நடனங்கள்
6. வழிப்பாட்டு நடனங்கள்
7. மரபு நடனங்கள்

**அறிஞர் பாணர்ஜி என்பவர் மூன்றாகப் பிரித்துள்ளார்**

1. சமூகச் சார்புக்கலைகள்
2. சமயச் சார்புக்கலைகள்
3. போர் இயல்புக்கலைகள்

**அறிஞர் பி.சாம்பமூர்த்தி என்பவர் ஆறாகப் பிரித்துள்ளார்**

1. தொழில் நடனங்கள்
2. பாமர மக்களின் நடனங்கள்
3. நடங்கு நடனங்கள்
4. பழிப்பு நடனங்கள்
5. நகைச்சுவை நடனங்கள்
6. கண்காட்சி நடனங்கள்

**அறிஞர் ஈ. கிருஸ்ணய்யர் என்பவர் மூன்றாகப் பிரித்துள்ளார்**

1. குடும்ப விழாக்கள், சமூக விழாக்கள், கோயில் விழாக்களில் ஆடும் நடனங்கள்
2. தொழில் நடனங்கள்
3. பழங்குடி நடனங்கள்

**அறிஞர் Dr.A. பெருமாள் என்பவர் இவற்றை**

1. சமூகச்சார்பு கலைகள்
2. சமயச்சார்பு கலைகள் என இரண்டாகப் பிரித்ததோடு

**தனியாள் கலை**

நடுவினர் கலை எனவும் பிரித்துள்ளார். கலைகள் பலராலும் பல்வேறு விதமாகப் பிரிக்கப்பட்டாலும் இன்றைய கால கட்டத்தில் அவை எந்தவொரு மரபு மாற்றத்திற்கும் உட்பட்டாலும் அவை தமிழர் தம் வாழ்வையும் அவர் தம் உரிமை வழியையும் கலை வழி மீட்டெடுக்க இந்தக் கலை வடிவங்கள் மிளிர்கின்றன என்றால் மிகையாகாது. எந்தவொரு கலைவடிவமாக இருந்தாலும் அது உயிர்வாழ ஒளியாக சமூகக் காரணங்களும், காற்றாச் சூழலும் அமைவது மிக முக்கிய அம்சமாகும்.

ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய கலைகளை சாஸ்திரியமான கலை, கிராமியக்கலை என பாகுபடுத்தி நோக்கலாம். உடல் மொழியை தொடர்பாடலாகக் கொண்ட இந்திய சாஸ்திரிய வடிவமான ஆடலை பரதநாட்டியம் ( தழிழகம்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதகளி (கேரளா), மோகினியாட்டம் (கேரளா), குச்சிபுடி (ஆந்திரா), மணிப்புரி ( மணிப்பூர்), கதக் (வட இந்தியா), ஒடிஸி (ஒரிஸ்ஸா), சௌ (மேற்குவங்காளம்), சைத்திரியா (அஸாம்) என பாகுபடுத்தி நோக்கலாம். தமிழகத்தின் முதுசெலும்பான பரத நாட்டியம் இன்று இந்தியாவில் மட்டுமன்றி இந்தியாவிற்கு வெளியே தென்னாசிய நாடுகள், மேற்கு வங்காள நாடுகளிலும் பயிலப்படுகின்றன இலங்கையும் இந்தியாவிற்கு மிக அண்மையில் இருப்பதனால் பரதக்கலை இலங்கையிலும் வேரூன்றி வளரலாயிற்று என்பதுடன் தமிழர்தம் மதிப்பார்ந்த கலை வடிவமாக இன்று எல்லோராலும் வியந்து நோக்கப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனம் ஓர் நோக்கு

**இ. சயித்**
**தகுதிகாண் விரிவுரையாளர்,**
**நடன நாடகத்துறை,**
**சு.வி.அ.க. நிறுவகம்,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

நடனம் என்ற பதம் அனைத்து வகையான நடனங்களையும் குறிக்க பயன்படுத்தப்படும் ஒரு பொது மொழி ஆகும். அசைவுகளின் அழகியல் தன்மையிலிருந்தே நடனம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இது மிகச்சிறந்த ஒரு தொடர்பாடல் ஊடகமாக தொழிற் படுகிறது. நடனம் என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் "டான்ஸ்" என்ற பழம் பிரஞ்சு சொல் பயன்படுத்தப்படுகிறது. இது சமூகம் அல்லது ஆன்மீகம் அல்லது நிகழ்த்திக் காட்டப்படும். கலை வடிவங்களில் வழங்கப்படும் அல்லது வெளிப்படும் மனித இயக்கத்தினை அல்லது அசைவினைப் பொதுவாகக் குறிக்கப் பயன்படும் "டான்சியர்" என்ற பிரஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்டதே "டான்ஸ்" என்னும் பதமாகும்.

மேலும் நடனம் என்பது மனிதர் களிடையே அல்லது விலங்குகளிடையே வாய்மொழியாக வெளிப்படுத்த முடியாத தம் உணர்வுகளை உடல் மொழியின் அசைவியக்கங்கள் மூலம் வெளிப்படுத்துவதற்காக பயன்படும் வழிமுறையாகும். நடனம் என்பது பொதுவாகத் தாளத்துக்கும் இசைக்கும் அமைவாக உடலை அசைத்து நிகழ்த்தப்படும் ஒரு கலைவடிவம் எனப்படுகிறது. இது ஒரு விடயத்தின் வெளிப்பாட்டு வடிவமாகவோ, சமூக தொடர்பாடலாகவோ இருக்கலாம். நடனங்கள் சமயச்சார்பு நோக்கங் களுக்காக ஆடப்படுபவையாக அல்லது பிறருக்கு நிகழ்த்திக் காட்டும் ஒன்றாக அமையக்கூடும். இவற்றில் அழகியல் அம்சங்களும் கதையோட்டமும் செறிந்து காணப்படும்.

மனிதர்கள் தமது எண்ணங்களை மற்றவர்களுடன்பரிமாறிக்கொள்வதற்கான ஒரு தொடர்புமுறை என்றும் நடனங்களை கருதுவது உண்டு. தேனீக்கள் போன்ற சில விலங்குகளும் சில வேளைகளில் நடனத்தைப் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றன. சீருடற் பயிற்சி, ஒத்திசை நீச்சல், நடனப் பனிச்சறுக்கு போன்ற விளையாட்டுக்கள் நடனத்தையும் தம்முள் அடக்கியவையாக உள்ளன. நடனமானது அன்றாட அனைத்து செயற்பாடுகளுடனும் ஒன்றிணைந்தவையாக காணப்படுகிறது. காட்டா எனப்படும் தற்காப்புக் கலையும் நடனங்களும் ஒப்பிடப்படுவது உண்டு. உயிரற்ற பொருட்களின் அசைவுகள் நடனம் எனக் குறிப்பிடப்படுவதில்லை. உயிருள்ள அனைத்து ஜீவன்களின் செயற்பாடுகளும் ஒரு நடனக்கோலத்தை தம்முள்அடக்கி காணப்படுகின்றது.

நடனம் என்பது எவ்வெவற்றை உள்ளடக்கியது என்பது குறித்துச் சமூக, பண்பாட்டு, அழகியல், கலை, நெறிமுறைகள் போன்றவற்றின் எல்லைகளுக்குள்ளேயே விளக்க முடியும். சில நாட்டுப்புற நடனங்கள் பயன்பாட்டுத்தன்மை கொண்ட அசைவுகளை உள்ளடக்கியிருக்க பலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதநாட்டியம் போன்ற நடனங்கள் பலவகையான கலை நுணுக்கங்களை உட்படுத்தியவையாக உள்ளன. நடனங்கள் எல்லோரும் பங்குகொண்டு ஆடுபவையாக, சமூக நடனங்களாக அல்லது பார்வையாளருக்கு நிகழ்த்திக் காட்டுவனவாக இருக்கலாம்.

சில வேளைகளில் சடங்குகள் தொடர்பிலும், போட்டியாகவும், பாலுணர்வு தூண்டுதலுக்காகவும், நிகழ்வுகளிற்காகவும் கூட நடனங்கள் ஆடப்படுவது உண்டு. நடன அசைவுகளில் எவ்வித பொருட்பொதிவும் இல்லாமல் இருக்கக்கூடும். சில மேற்கத்திய நாட்டார் நடன அசைவுகளும், பலே போன்ற நடனங்களில் உள்ள அசைவுகளும் இத்தகையவை. ஆனால் பல்வேறு இந்திய நடனங்களிலும், வேறு பல கீழத்தேச நடனங்களிலும் அசைவுகள் பொருள் பொதிந்தவையாகவும், குறியீட்டுத் தன்மைகளுடன் கூடியவையாகவும் காணப்படுகின்றன. நடனங்களில் எண்ணங்களும் உணர்வுகளும் பொதிந்திருக்கலாம் அல்லது நடனங்களில் அவை வெளிப்படலாம். அத்துடன் பலவகை நடனங்கள் கதை கூறும் பாங்கில் அமைவது உண்டு.

நடனங்கள் பல்வேறு பாணிகளில் உருவாகியுள்ளன. எனினும் எல்லா நடனங்களுமே தம்முள் சில பொது இயல்புகளை கொண்டுள்ளன. நடன அசைவுகளிற்கு ஏற்ப உடல் வளைந்து நெளிந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக இருப்பது மட்டுமன்றி, உடல் உறுதியும் முக்கியமானது. இதனாலேயே முறைப்படியாக நடன அமைப்பு (choreography) என்பது நடனத்தை கரு அல்லது கதைக்கேற்ப அமைப்பதைக் குறிக்கும். இவ்விதம் நடனம் அமைத்துத்தருபவர் நடன அமைப்பாளர் எனப்படுவார். நடனங்களை உருவாக்கும் கலை நடன அமைப்பு எனப்படுகிறது.

நவீன நடனம் எனப்படுவது 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் மேற்குலகில் வளர்ந்த நடனப் பாணி ஆகும். மேற்குநாட்டு செவ்வியல் நடனத்துக்கு (ballet) எதிர் வடிவமாக இந் நடனம் தோன்றியது. செவ்வியல் நடனத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் கூடிய ணுக்கங்களை, அணிகலன்கள், காலணிகள் விலக்கி படைப்பாற்றல் மிக்க தனிமனித வெளிப்பாட்டுக்கு முக்கியத்துவம் தந்து வளர்ந்தது. ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமமான அந்தஸ்து வழங்கப்படுகிறது.

**நடனக்கோட்பாடு**

நடனக் கோட்பாடு என்பது இசைக்கோட்பாட்டுடன் நெருங்கிய தொடர்புகொண்ட ஒரு கோட்பாடு ஆகும். அண்மைக்காலத்தில் உருவான இத்துறை நடனத்தின் இயல்புகளையும் அதன் பொறிமுறைகளையும் விளக்குகிறது. நடனக் கோட்பாடு நடனத்தின் தோற்றம், பாணி, வகை, கலை வெளிப்பாடு, போன்ற நடனம் தொடர்பான பல விடயங்களை உள்ளடக்குகிறது.

நடன கோட்பாடு உடலுறுப்பு அசைவுகள், சேர்ந்து ஆடுபவருடன் இடைவினைகள், அவர்களிடையேயான தொடர்புகள், இசையுடனான தொடர்புகள் போன்றவற்றைக் கையாள்கிறது. மனிதருடைய வெளிப்பாட்டு ஊடகம் என்றவகையில், தொடர்பாடல் ஊடகம் என்ற வகையில், நடனத்தின் தொடர்பியல், உடல் சார்ந்த, மனம் சார்ந்த, உணர்வு சார்ந்த, கலை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை இது ஆய்வு செய்கிறது. இவ்வாறு ஆய்வு செய்யும்போது பல்வேறு நடன வகைகளுக்கம், பாணிகளுக்கும் இடையிலான நுணுக்க வேறுபாடுகள் அவற்றின் சமூக, பண்பாட்டுப் பின்னணிகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. நடனம் பண்பாட்டில் எங்கும் நிறைந்திருக்கும் ஒன்றாக இருப்பதால் நடனக் கோட்ப்பாடு நடனத்தின் உள்ளுணர்வு சார்ந்த இயல்புகளை அறியமுயல்வதுடன் சில அசைவுகள் இயல்பானவையாகவும் வேறு சில திணிக்கப்படுவன போன்றும் தோற்றுவதற்கான காரணங்களையும் கண்டறிய முயல்கிறது.

**நடனக் குறியீடு**

நடனக் குறியீடு என்பது குறியீடுகள் மூலம் நடன அசைவுகளை குறிப்பது ஆகும். நடன வகைகளை கற்க்க, உருவாக்க, ஆய்வு செய்ய, ஆவணப்படுத்த இவை உதவுகின்றன. கோயில்களில் இடம்பெறும் பல்வேறு நிலைகளினால் ஆன நடனச் சிற்பங்கள் இதற்க்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பல்வேறு வகைப்பட்ட நடனக் குறியீடுகள் பயன் படுத்தப்படுகின்றன. உலகவழக்கில் அனேகம் நடனக்குறியீடுகளே பயன்படுத்தப்படுகின்றன. இவை உடல் மொழிகளை சார்ந்து அமைந்தவையாக காணப்படுகின்றன. ஒவ்வொரு நடனங்களும் தமது மரபுகளிற்கு ஏற்ப பல்வேறு விதமான குறியீடுகளை தம்முள் கொண்டு வழக்கில் காணப்படுகின்றன. குறியீடுகள் மூலமே நடனங்களின் கருத்துக்கள் பார்வையாளருக்கு புலப்படுத் தப்படுகின்றன. நடன குறியீடுகள் இல்லை எனின் நடனங்கள் இல்லை எனலாம். குறியீடுகள் நடன கலைஞருக்கும் சமூகத்தினருக்கும் இடையே ஒரு கருப்பொருளை விழக்கும் தொடர்பாடல் மொழியாக செயற்படுகிறது. குறியீடுகள் அங்க அசைவுகள் மூலமே வெளிப்படுத்த படுகின்றன.

**நிகழ்த்து கலை** (performing art)

நிகழ்த்து கலை என்பது அரங்கொன்றில் கலைஞர் ஒருவர் அல்லது பலர் தமது முகம், உடல், ஆகியனவற்றை கொண்டு பார்வையாளர்களுக்கு நிகழ்த்து வதற்குரியதான கலை வடிவம் ஆகும். இது ஓவியம், சிலைவடிப்பு, சிற்பம், மற்றும் எழுத்து போன்ற பிற ஊடகங்களில் தமது கலைத்திறமையை வடிப்பதிலிருந்து வேறுபட்டதாகும். இத்தகைய பாகுபாடு ஆங்கில வழக்கில் 1711முதல் இருந்து வருகிறது. இது பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக் காட்டும் கலைவடிவையே குறிக்கும். உடல்மொழியை பிரதானமாக கொண்ட நடனவடிவங்கள் இதனுள் அடக்கப்படுகின்றன. இதில் அரங்கம், அழகியல், பார்வையாளர்கள் என்பவர்கள் முக்கியத்துவ படுத்தப்படுகின்றன.

நுண்மையான உறுப்புக்களையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்ட நுண் கலைகளான கவிதை, இசை, ஆடல், முதலியன இதனுள் அடங்கும். ஒரு கலைஞனின் நுண்கலை வடிவின் சிறப்புக் கூறுகள் பார்வையாளர்களின் மத்தியில் வெளிப்படுத்தப்படும் போது அது நிகழ்த்து கலையாக வடிவம் கொள்கிறதெனலாம். பல்வேறு நிகழ்த்து கலைகள் நெகிழ்தன்மைகொண்ட கலைகளாக அறியப்படுகின்றன. அரங்கினில் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள் இவ்வகையில் அடங்குகின்றன. நடனம் நவீனநடன சகாப்தத்தில் நெகிழ்தன்மை கொண்ட கலையாகவே சிலநேரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகிறது. நிகழ்த்து கலை என்பது கீழ்க்காண்பவைகளை உள்ளடக்கிய ஒன்றாகும்.

1.நாடகம்
2.கூத்து
3.இசை
4.நடனம்
5.ஒப்புவிப்பு
6.மாயாவித்தை
7.மேடைநகைச்சவை
8.பொம்மலாட்டம்

இவைகள் ஒவ்வொன்றும் மனித உழைப்பின் பிரகாரம் வெளிப் படுத்தப்படுகின்றன.

**தோற்றமும் வரலாறும்**

நடனத்தின் தோற்றத்தை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தெளிவான தொல் பொருட்சான்றுகள் இல்லை. இதனால் எப்போது நடனம் மனித பண்பாட்டின் ஒரு பகுதியானது என்று சொல்லமுடியாது. எனினும் நடனங்கள் போன்றசெயற்பாடுகள் இருந்தமையை காட்டும் சான்றுகள் பல்வேறு இடங்களிலும் கிடைத்துள்ளன. மிகப் பழைய நாகரிகங்கள் தோன்றுவதற்கு முன்னரே சடங்குகள், கொண்டாட்டங்கள் பொழுதுபோக்குகள் போன்ற பலகாரணங்களுக்காக நடனங்கள் மனிதவாழ்வில் முக்கிய இடம் பெற்றிருக்ககூடும். வர லாற்றுக்கு முந்தியகாலத்திலேயே நடனங்கள் ஆடப்பட்டிருக்கலாம் என ஊகிக்கும் வகையிலான சான்றுகளை தொல்பொருள்ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

உலகின் பல்வேறுபகுதிகளிலும் காணப்படும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட குகைவாழிடங்களில் காணப்படும் ஓவியங்களில் காணப்படும் உருவங்கள் சில நடனமாடுவதைக் காட்டுவதாக கருதப்படுகின்றது. கி.மு 3300 காலப்பகுதியை சேர்ந்த எகிப்தியக் கல்லறை ஓவியங்களிலும் இத்தகைய உருவங்கள் உள்ளன. சிந்து வெளி நாகரீகத்தைச் சேர்ந்த தொல்பொருட்களிலும் நடனம்ஆடும் உருவங்கள் காணப்படுகின்றன. தொன்மங்களை கூறுவதற்கும், நிகழ்த்தி காட்டுவதற்குமே முதன்முதலாக நடனங்கள் ஆடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எதிர்பாலருக்கு தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காகவும் மனிதர்கள் நடனத்தைப்பயன்படுத்தி இருக்கலாம். காதல்புரிவதோடும் நடனங்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன. எழுத்துமொழி உருவாவதற்குமுன்னர் கதைகளைப் பிந்திய தலைமுறைகளுக்குக் கடத்துவதில் நடனங்களும் பயன்பட்டன. நோய்களைக் குணப்படுத்துவதற்காய் சாமியாடுதல், வெறியாடுதல் போன்றவற்றிற்கு முன்னோடியாகவும் நடனங்கள் விளங்கின. இது நடனத்தின் முதல்பயன்பாடுகளில் ஒன்றாககருதப்படுகின்றன. எது எவ்வாறாயினும் மனிதனோடும், மனித நாகரீகங்களுடனும் நகமும் சதையுமாக நடனம் ஒன்றித்து வந்துள்ளது.

**கலைஞர்கள்**

பார்வையாளர்களின் முன்னால் கலைகளை நிகழ்த்திக் காட்டும் நடிகர் அல்லதுகலைஞர்"நிகழ்த்துகலைஞர்"எனப் படுகின்றார். நடிகர், நகைச் சுவையாளர், மாயவித்தைகாரர், இசைக்கலைஞர், பாடகர், பல குரல்கலைஞர், பேச்சாளர், போன்றோர் இவ்வகையினர் ஆவர். கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துவோர் ஏற்க்கும் பாத்திரத்திற்கேற்ப தனது உடல்மொழி, உடை, ஒப்பனை, இன்னபிறவற்றை அமைத்து கொள்வர். கலைநிகழ்த்துவோர் மட்டுமன்றி அவர்களுக்குப் பக்கத் துணையாயிருக்கும் பாடலாசிரியர், மேடைஅமைப்பாளர் ஆகியோர் நிகழ்த்து கலைக்கு தேவை.

### அரங்கம்

அரங்கம் என்பது கலைவடிவின் ஓர் அங்கமாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓர் கலைஞர் தனது நுண்கலைத்திறன் மூலம் கற்பனையான ஒரு நிகழ்வை உயிரோட்டமுள்ளதாக அங்கிருக்கும் பார்வையாளர்களின்முன்னர் அரங்கேற்றும் இடமாகும். நடிப்பு, பார்வையாளர்களின் முன் கதையை வெளிப்படுத்தும் திறன், பேச்சு,குறிப்பு, இசை, நடனம், ஒலி மற்றும் காட்ச்சிக்கலவை ஆகியவையும் நிகழ்த்து கலையின் முக்கிய அங்கங்களாகும். இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகள் நிகழ்த்து கலைக் கூறுகளாகும். மேலும் கூடுதலாக நாடகங்களின் நிலையான பாணி கொண்ட கதைவசனங்களையும் கொள்ளலாம். இவற்றுடன் கூட்டாக அரங்குஎன்பது நிகழ்த்து கலையின் ஓர் முக்கிய அங்கமாக "அரங்கம்" அமைகிறது. இசையரங்கு, ஓபேரா, பலே நடனஅரங்கு, மாயவித்தை அரங்கு, இந்திய பரதநாட்டிய அரங்கம், நவீன அரங்கமென நிகழ்த்து கலைக்கேற்ப அரங்கங்கள் வடிவம்கொள்கின்றன. சில நேரங்களில் தெருவோரங்களில் அல்லது தெருக்கள் கூடுமிடங்களில் நிகழ்த்த கலைகளில் ஏதேனுமொன்று நிகழ்த்தப்பட்டால் அவ்விடமே அரங்கமாக அமைகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்து நாள் முதல் பெருமிதிவரை


க. மகேந்திரம்

ஓய்வு பெற்ற நிர்வாக கிராம அலுவலர்,

பிரதேச செயலகம்,

கரைச்சி.


முற்காலத்தில் மாதம் மும்மாரி பெய்வதால் மக்கள் நோய் நொடிகளின்றி மகிழ்வோடு வாழ்ந்தனர் - அக்கால விவசாய முறைகள் தற்போதைய நவீன முறைகளிலிருந்து மிகமிக வேறு பட்டேயிருந்தது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்பவும், நவீன விஞ்ஞான வளர்ச்சியாலும் இன்றைய பயிர்ச்செய்கைமுறைகள் முன்னைய முறைகளிலிருந்து மாறுபட்டிருப்பது ஓரளவு ஏற்றுக் கொள்ளத்தகுந்ததாக இருப் பினும், பண்டைய செய்கைமுறைகள் மிக ஆரோக்கியமானதாக இருந்தது, எனது அனுபவம் கண்ட வெளிப்பாடாகும்.

அக்காலத்தில் இரசாயன மருத்துவப் பாவனை மற்றும் சேதனப் பசளைகள் ஆகியன பாவிக்காமல் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டதால் மக்கள் மத்தியில் தீராத நோய்கள் பரவுவது மிகமிகக் குறைவாகவேயிருந்தது. இன்று புற்றுநோய் மற்றும் சருமநோய்கள் சிறுநீரகத்திற்கு வரும் நோய்கள் அதிகரித்துவருவதற்கு நவீன இரசாயனப் பொருட்களின் பாவனைகள் காரணமாயுள்ளது வெளிப் படையான உண்மையாகும்.

முன்பு பருவமழைகள் உரிய காலத்திற்கு பெய்து தருவதால் சித்திரை மாதத்தில் முதல் உழவினை மாடுகள் கலப்பை கொண்டு உழுவார்கள் "சித்திரை மாத உழவு பத்தரை மாற்றுத்தங்கம்" என்று அன்றையவர்கள் கூறுவார்கள். அது ஏற்றுக் கொள்ளவேண்டியதே அடுத்து ஆடி மாத மழையின்பின் ஓர் உழவு செய்வர் "ஆடி மாத உழவு தேடி உழு" என்று கூறுவர் இதுவும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த தேயாகும். இவ்வாறு புழுதிப்படுத்திப் பருவகாலத்தில் உழுவதால் முளைக்கின்ற புற்கள் மற்றும் செடிகள் முளையிலேயே அழிந்து விடுவதால் களைநாசினிகள் விசிறவேண்டிய தேவை ஏற்படுவதில்லை.

வீடுகளிற் சேர்கின்ற குப்பை கூழங்கள், உக்கிய சருகுகள், ஓலைகள் போன்றவற்றை மாட்டுவண்டியில் ஏற்றி வயல்களில் போடுவதுவும், கால்நடைகளைக் கட்டுதல் போன்ற இயற்கையான பசளைகள் பாவிக்கப்படுவதால் இரசாயனச் சேர்க்கைகள் முற்றாகத் தவிர்க்கப்படுகின்றது. அத்தோடு நெற்பயிர் முளைத்து வளர்ந்து கதிராகி அறுவடைக்காலம் வரும்வரை நெற்காணிகளின் வயல்களில் ஆங்காங்கே அட்டாளை வைத்துத் தீமூட்டுவதாலும் தீப்பந்தங்கள் கட்டுவதாலும் பூச்சிகள் சுவாலையில் வீழ்ந்து அழிந்து போகின்றன. இதனால் கிருமிநாசினிப் பாவனை தவிர்க்கப்படுகின்றது.

அன்றைய விவசாயிகள் பஞ்சாங்கத்தைக் கையில் வைத்து நாள் பார்த்தே தம் தொழிலை மேற்கொள்வர் இதனால் "பருவத்தே பயிர்செய்" என்ற வார்த்தை செயலுக்கு வருகிறது. முதலில் வித்துநாள் என்ற நாளைப் பஞ்சாங்கம் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்து அந்த நாளில் கடகப் பெட்டியில் விதைநெல், கற்பூரம், தேங்காய் தலையில் வைத்துக்கொண்டு உழுது பண்படுத்திய வயற்காணியின் கிழக்கு மூலையில் கற்பூரம் கொழுத்தி நெல்லை விதைத்துத் தேங்காய் உடைத்து மண்வெட்டியாற் கொத்திவிடுவர்.

புரட்டாசி மாதம் தமிழ்த்திகதி பதினைந்துக்குப் பின்பு புழுதி விதைப்பாக நெல்லை விதைத்துக் கடவான்களைக் கட்டிவிடுவர். எப்படியும் ஐப்பசிமாதம் பிறக்கும்போது மழை பெய்யும். புழுதிக்குள் பாதுகாப்பாக மறைந்திருந்த நெல் முளைத்துவிடும். தண்ணீர் முதலிற் கட்டுப்பட்டு உயர்வதால் புற்கொட்டைகள் யாவும் அழிந்து நெற்பயிர் மட்டும் முளைத்து வளரும். முதல் மழை வெள்ளத்தை "முழை வெள்ளம்" என்பர். உரிய பருவகாலங்களில் உழுது பண்படுத்தி நெல் விதைப்பதால் பயிர்களுக்கு நோய் நொடிகள் வருவது தவிர்க்கப்படுகிறது.

பயிர்கள் ஒழுங்காக முளைத்து வளர்ந்து செழிப்பாக வளர்ந்துவரும். கார்த்திகை மாதம் விளக்கீட்டில் அன்று விவசாயி தனது கமத்திற்குச் சென்று தீப்பந்தங்கள் கொழுத்தி ஆங்காங்கே வைத்துச் சுற்றிவர வயலிற் "கூ,கூ" என்று உரத்துக் கத்தி விட்டு வெளிச்சென்று விடுவார். இதனைக் காவல் கட்டுவது என்று சொல்வார்கள். இப்படிச் செய்வதால் வனவிலங்குகளாலும் பறவைகளாலும் நெற்பயிர்கள் பாதுகாக்கப்படுகிறது. என்பது ஐதீகமாகும்.

இடைக்காலங்களில் கமக்காரன் தனது நெல்வயலின் ஓரிடத்தில் ஒரு மரத்தின் கீழ் வைத்து வழிபடும் தனது குலதெய்வத்திற்குப் பொங்கல் செய்வார். பொங்கும்போது வரும் மீட்டபால் எனப்படும் மேல்வரும் நீரை எடுத்து வயல்களுக்குத் தெளிப்பார். பின் பொங்கல் படைத்துச் சாப்பிட்டபின், வயலில் இருந்து வெளியேறி மூன்று நாட்கள் மீண்டும் வராமல் விட்டுவிடுவார். இது நெற்பயிர்களுக்கு நோய்கள் வராமல் செய்யும் முறையாகக் கருதுவர்.

தங்கள் வயல்களின் மத்தியில் விவசாயிகள் ஒவ்வொருவரும் காவற் கொட்டில் ஒன்று அமைத்து ஏத்தும் போட்டிருப்பார்கள். ஏத்து என்பது கொட்டிலுக்குள் மண்ணாலும் மரத்தடிகளாலும் அமைக்கப்பட்ட மேடையாகும். இதில் பாதுகாப்பாக ஏறிப்படுத்துக்கொண்டு இரவு காவல் காப்பது அவர்களின் மகிழ்வான செயற்பாடாகும். நெற்பயிரானது பயிர், கம்பிப்பருவம், குடலைப்பருவம், கதிராக்கும்பருவம், தாய்ப்பாளை தலைவணங்கும் பருவம், நெல்விளைந்து குனிந்து பூமியை நோக்கி வளைந்து காணப்படும் காட்சிகளைக் கமக்காரன் பார்த்து மகிழ்ச்சியடைவான்.

நெல்விழைந்திருக்கும் போது பஞ்சாங்கம்மூலம் "புதிரெடுத்தல் தானியங் கொண்டு வருதல்" என்ற தலைப்பின் கீழான நாட்பார்த்து விவசாயி வெள்ளைத்தலைப்பாகை கட்டி அரிவாழ் தேங்காய் கற்பூரத்துடன் வயல்நாடி மகிழ்வோடு செல்வான். கற்பூரம் கொழுத்தித் தேங்காய் உடைத்துக் கடவுளைத் தொழுது அரிவாள் கொண்டு மூன்று அல்லது ஐந்து பிடி நெற்கதிரை அறுத்து வெள்ளைத்துணிமேல் வைத்து அதனைச் சுருட்டி எடுத்துத் தோழ்மீது சுமந்து சென்று வழியில் தனது குலதெய்வக் கோயிலில் கதிர்கள் சிலவற்றைக் கட்டி வணங்கிவிட்டு வீட்டுக்குச் சென்று கடவையில் நெற்கதிரை வைத்து வீட்டு உள்ளே செல்ல அவன் மனையாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துவிளக்கு ஏந்திவந்து நெற்கதிரை உள்ளே எடுத்துவந்து பூசை அறையில் வைப்பாள். பின்பு எல்லோரும் சேர்ந்து சில கதிர்களை மாவிலை, பனை ஈர்க்கு கொண்டு வளைகளில் கட்டியபின் எஞ்சிய கதிரை உருத்தி நெல்மணிகளாக்கிக் காய வைத்து நாட்பார்த்து புது நெல்லை உரலில் மாவிலை கட்டித் திருநீறு பூசிக் குற்றி அரிசியாக்கிப் புதுச்சோறு ஆக்குவர். பலவித மரக்கறிகள் சமைத்துப் பலகாரங்கள் செய்து சோற்றுடன் படைத்து நெய், தேன், பால், பழங்கள் சேர்த்துக் குடும்பத்தலைவன் சாதத்தைத் தலைப்பாகைகட்டியிருந்து குழைத்து எல்லோருக்கும் கவளமாகக் கொடுத்து உண்டு மகிழ்வர். தேவாமிர்தம் என மதித்துப் புதிர்குழையல் உண்பர்.

நெல்அறுவடைக்காலம் சரியாக வந்ததும் கமக்காரன், பிள்ளைகள், தொழிலாளிகள் சேர்ந்து அரிவாள் கொண்டு மகிழ்வோடு பாட்டுப்பாடி அறுவடை செய்து நெற்கதிர்களைத் தரையில் உப்பட்டியாகப் பரவிவிடுவர். ஒரு நாட்காய்ந்ததும் மாவாக்கையாக்கி (கட்டிய உப்பட்டிக்கதிர்கள்) கட்டாகக் கட்டிக் களத்து வயலுக்குக் கொண்டுவந்து சூடு அமைப்பார். அறுவடைக்காலத்தில் குடும்பத்தலைவி சுவையான சோறு கறி சமைத்துக் கடகத்தில் இட்டுத் தலையிற் சுமந்து கொண்டு கமத்திற்கு வருவார். மத்தியானம் எல்லோரும் மரத்தின்கீழ் கூடியமர்ந்து மதிய உணவை மகிழ்வோடு உண்டபின் மாலை வேலையைத் தொடர்வர்.

உப்பட்டியைக் கூட்டிச் சிறுசிறு கும்பல்களாக வைத்துத்தான் கட்டாகக் கட்டிக் கொண்டு களத்து வயலுக்குக் கொண்டு வந்து அளவாகக் குவிப்பர். கூட்டிய உப்பட்டிக் குவியல்தான் மாவக்கை எனப்படும் சூடு வைக்கும்போது கட்டியிருந்த மாவாக்கைகளைப் பிரித்து எடுத்து முதலில் குமரிகட்டல் என்ற கட்டுக் கட்டி வைத்தபின் சுற்றிவர வட்டவடிவில் படைகளாக நடுவே குவியல் போடுவார்கள் குவியல் போடும்போது தாவுகதிர், வளையற்கதிர் என்ற விதத்தில் போடுவர் சூட்டிற்கு வெளியே ஒருவர் நின்று பழுதைத் தடியால்த் தட்டத்தட்ட சூடு உயரஉயர மேல் நிறைகுடவடிவில் முடி கூடப்படும் .மேலே வைக்கோற்புரியால் நன்கு கட்டி வைக்கோல் கொஞ்சம்போட்டு மூடிச் சுற்றிவர வேலியமைத்துச் செல்வர்.

அக்காலத்தில் இயந்திரம் இல்லாத தினால் காற்றில் நெல் தூற்றுவதற்காக வைகாசி மாதம்வரை காத்திருந்து வைகாசிமாத நிலாக்காலத்தில் சூடுமிதிக்கத் தொடங்குவர். சூட்டினை மாடுகளால் மிதித்துக் கொள்ளும் வகைளில் எத்தனை அடிக்கலாம் என்று தீர்மானித்து மிதிக்கு ஒரு இரவு என்று அத்தனை இரவுகளில் சூடு மிதிக்கத்திட்டமிட்டுத் தொடங்குவர். சூட்டுக்களப் பாத்தியில் களக்கட்டை நாட்டி சுற்றிவரப் படங்கினை விரித்து சூட்டைப்பிரித்துச் சவளத்தினைச் சுற்றிவரக் குவிப்பார்கள் (சவளம் என்பது சூடுபிரிக்கும் நெற்கதிர்) வெப்பல் கொடியால் கொடி வளையம் செய்து களக்கட்டையில் மாட்டி நந்தைக்கயிறு கொண்டு எருமை மாடுகளின் கழுத்துக்களிற் கொடுத்து நான்கு அல்லது ஐந்து சோடிகள் பூட்டி "பொலிபொலியம்மா பிள்ளையாரே பொலி" என்று சொல்லி மாடுகளை வளைப்பார்.

களத்தில் வேலை செய்யும் ஆட்களைப் போலன் என்றும், தலைமைக்கு ஒருவரை நியமித்து அவரைப் பிள்ளையார் போலன், என்றும் கூறுவர். பிள்ளையார் போலன் பிரித்த சூட்டின் குறைப்பகுதி "கட்டைக்கந்து" எனப்படும்.அதன்மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து கொண்டு ஆணை பிறப்பிக்கச் சூடு மிதி வேலை நடைபெறும். களத்தைச் சுற்றிப் பொலிக்கொடிப் பிரிசெய்து வேப்பிலையுடன் சேர்த்துப் பாதுகாப்பு வேலி போடுவர்.

நடுச்சாமம் அளவில் சவளம் அடிபட்டுவிடும். மாடுகள் வளையும் போது பொலிக்கொடி கொண்டு போல் ஏந்துவார். போல் என்பது மாடுகள் போடும் சாணம் மாடுகளை நடையன்கள் என்றும் களக்கட்டையில் கட்டிய மாடுகளை கட்டையடி நடையன் என்றும் நடுமாடுகளை நடுக்கொடி மாடுகள் என்றும் கரையில் நிற்பவற்றை வாட்டியயடியான் என்றும் களத்துப் பாசையில் அழைப்பர். நன்கு அடிபட்டதும் நடையன்களை அவிழ்த்தபின் போலர்கள் சேர்ந்து பொலிக்கொடியை வேலையாழ் எனப்படும் வழைதடி கொண்டு அகற்றியபின் பொலியை மூடிவிட்டு உறங்கி விடுவர்.

அதிகாலை காற்று வீசத் தொடங்கு வதால் எழுந்து முக்காலி கட்டி அதன்மேல் ஒருவர் நிற்க, குல்லத்தில் பெருவாயன் (கடகம்) மூலம் பொலியை போடக் காற்றிற் தூற்றிக் கூட்டுமாறினால் துப்பரவு செய்து சுத்தமான பொலியைப் பெறுவர். தூய நெல்லைக் "கூரன்" என்று களத்து மனையிற் கூறுவர்.


தூற்றிய பொலியை இளையன் எனப்படும் சாக்கிற் போட்டு மட்டை நாரினாற் கட்டிச், கடகடப்பான் என்று கூறப்படும் மாட்டுவண்டியில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டு செல்வார். இவ்வாறு தொடர்ந்த இரவுகளில் சூடுமிதித்து இறுதி நாளில் "பெருமிதி" என்று நாமம் சூட்டி அன்று சிறிதளவு கதிரை வைத்திருந்து பெருமிதியெனும் இறுதி நாட் சூட்டடிப்பு வேலையை முடித்தபின் வன்னித்தெய்வத்திற்கென "அமுது சமையல்" புத்தரிசி மூலம் எருமைப்பால் தேங்காய்ச் சொட்டு இட்டுப் பொங்கல் செய்வர். இனிப்புச் சேர்க்கமாட்டார்கள். அமுது சமையல் படைத்துக் கப்பல் வாழைப் பழங்கள், வெற்றிலை, பாக்கு, என்பவற்றை வெள்ளைத்துணி விரித்துப் பரவி விடுவர் இதனை மடை பரவுதல் என்பர். இத்துடன் காட்டில் மலரும் "வட்டம் பூ" எனப்படும் பூவைச் சொரிந்து வன்னித் தெய்வத்தைக் கும்பிட்டு அமுதை உண்பார். பெண்களுக்கு அமுது கொடுக்கமாட்டார்கள். பெண்களைக் களத்திற்குச் சேர்க்கவும் மாட்டார்கள்.

பெருமிதி முடிந்ததும் காலை எல்லோரும் வீடு சென்று நெல் முழு வதையும் வைக்கோல் பட்டறை" அல்லது கொம்பரை எனப்படும் நெற்கிடங்கில் பாதுகாப்பாகப் போட்டு வைத்து விடுவர். இவ்வாறு சேமித்து வைக்கப்படும் நெல்லானது பலவருடங்கள் பாதுகாப்பாக இருக்கும் அந்தக் காலத்தில் பண்டமாற்று முறையிருந்ததால் நெல் விற்றுக் காசு பெறவேண்டும் என்ற தேவை விவசாயிக்கு இருக்கவில்லை .


ஒருவருடம் மழையின்றி நெல் வேளாண்மையை செய்யமுடியாதிருந்து பஞ்சம் வரும்போது கொம்பரை, பட்டறை நெல் பயன்படும் இதுவே பண்டைய விவசாய முறையாகும். இம் முறைகளை நாம் கைக்கொண்டிருந்தால் நோய் நொடிகளின்றி நீடு வாழ்நிதிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org